விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

Registered as a Newspaper in Srilanka

பங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 பங்குனி 18 செவ்வாய்க்கிழமை (01.04.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 103

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

# இராணுவத்தில் இணைய மறுத்த யுவதியின் சகோதரன் கைது !

## மற்றுமொரு இளைஞரும் பிடித்துச் செல்லப்பட்டார்

(முல்லைத்தீவு)

வடக்கில் கட்டாயத்தின் பேரில் தமிழ் இளம் யுவதிகளை இராணுவத்தில் இணைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக குற்றம்சாட்டப்பட்டுவரும் நிலையில் இலங்கை இராணுவத்தின் ஆட்சேர்ப்பில் இணைந்து கொள்ள மறுத்த யுவதி ஒருவரின் சகோதரனையும், மற்றுமொரு இளைஞனையும் இராணுவத்தின் புலனாய்வுப்பிரிவினர் காரணங்கள் ஏதும் கூறாமல் வலுக்கட்டாயமாகப் பிடித்துச் சென்ற அதிர்ச்சியூட்டும் சம்பவம் ஒன்று நேற்று முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளியவளை பகுதியில் இடம் பெற்றுள்ளதாக தெரியவருகின்றது.

குறித்த பகுதிக்கு ஐந்திற்கும் மேற்பட்ட வாகனங்களில் சென்ற இராணுவப்புலனாய்வு பிரிவை சேர்ந்தவர்கள் முள்ளியவளை தண்ணீரூற்று முணுக்கேணி பகுதியினைச் சேர்ந்த 28 வயதுடைய பாலச்சந்திரன் விஜயரூபன் என்பவரை பிடித்து சென்றுள்ளனர்.

குடும்பஸ்தரான இவர் கைது செய்யப்பட்ட வேளை அங்கு நின்றிருந்த மற்றொரு உறவினரான 25 வயதுடைய சதன் என்பவரும் பிடித்து செல்லப்பட்டதாக கூறப்படுகின்றது.

வன்னி இறுதி யுத்தத்தின் போது தாய், தந்தையையிழந்த பாலச்சந்திரன் விஜயரூபனுடன் உயிர் தப்பிய சகோதரி ஒருவரும் வாழ்ந்து வந்திருந்தார். இந்நிலையில் குறித்த யுவதியினை இலங்கை இராணுவத்தின் ஆட்சேர்ப்பு திட்டத்தின் கீழ் இராணுவத்தில் இணையுமாறு அப்பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவ முகாம

20 ஆம் பக்கம் பார்க்க..

## விநாயகர் ஆலய விக்கிரகம் உடைப்பு

(யாழ்ப்பாணம்)

வாழைச்சேனை வாகனேரி கிராமத்தில் பல நூறு ஆண்டுகளாக இந்து மக்களால் வழிபட்டு வந்த விநாயகர் ஆலய மூல விக்கிரகம் நேற்று முன்தினம் உடைக்கப்பட்டுள்ளது.

குறித்த விக்கிரத்தை எடுத்துச் அருகிலுள்ள காட்டுக்குள் வீசப்பட்டுள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தின் கிரான் கோறளைப் பற்று தெற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள வாகனேரிக் கிராமத்துக்கு காகித ஆலைக்கு அண்மையில் அமைந்துள்ள பிரதான வீதியில் இந்த ஆலயம் அமைந்துள்ளது.

விக்கிரகத்தை வெளியில் எறிந்த விஷமிகளால் இவ்வாலயத்திற்குள் மக்சர் மற்றும் புகைத்தல் பொருட்

19 ஆம் பக்கம் பார்க்க..

## காதல் விபரீதம் ; இளைஞன் உயிர் பிரிவு

(யாழ்ப்பாணம்)

ஒரு பெண் தன்னை காதலித்து ஏமாற்றிவிட்டதாகக் கூறி செய்தி ஊடகங்களிற்கு மின்னஞ்சல் அனுப்பிவிட்டு நேற்றுக் காலை இளைஞர் ஒருவர் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

யாழ். சிறுப்பிட்டி தெற்கு நீர்வேலியைச் சேர்ந்த நிரூபன் நவரட்ணம் (வயது 23) என்ற இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளவராவர்.

காலை 9 மணிக்கு செய்தித்தளங்களிற்கு மின்னஞ்சல் மூலம் தன்னை ஒரு பெண் காதலித்து ஏமாற்றியதாகவும் அப்பெண்ணின் சுயவிபரத்தையும் எழுதி தனக்கு நீதி கிடைக்க என்ன செய்யலாம் எனக் கேட்டு மின்னஞ்சல் அனுப்பிவிட்டு இவர் தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

அதேவேளை நேற்று முன்தினமிரவு தனது முகப்புப்புத்தகத்தில் (பேஸ்புக்) காதலி என குறிப்பிட்ட பெண்ணின் 188 புகைப்படங்களை பதிவேற்றி அப்பெண் தன்னை

19 ஆம் பக்கம் பார்க்க..

## சர்வதேச விசாரணைக்கு இலங்கையில் இடமில்லை!

### ஜனாதிபதியின் பேச்சாளர் நிராகரிப்பு



(கொழும்பு)

நவநீதம்பிள்ளை தலைமையிலான சர்வதேச விசாரணை என்ற பேச்சுக்கே இடமில்லை. இதனை இலங்கை அரசாங்கம் முழுமையாக நிராகரிக்கின்றது என ஜனாதிபதியின் பேச்சாளர் மொஹான் சமரநாயக்க தெரிவித்தார்.

மாகாண சபைத் தேர்தல் முடிவுகள், வெளிநாடுகளின் அழுத்தங்கள் தொடர்பாக ஆராய்ந்து ஜெனிவாவில் அடுத்த கட்ட நடவடிக்கை

19 ஆம் பக்கம் பார்க்க..




புதிய - அதிரடியான - அபூர்வமான - அரிய - பொன்னான வாய்ப்புக்கள்

- கனடா மிகப்புதிய வரவு :-

1. வைத்திய உத்தியோகத்தர், தாதிகள், இயன்மருத்துவர், மருந்தாளர், தனியார் துறை / அரசாங்க துறை 2 வருட அனுபவம். IELTS தேவையில்லை 2 வருடத்தில் PR பெறலாம் 50 வயதிற்குக்கீழ்.
2. மின்னிணைப்பாளர், பிளம்பர், தச்சர், வெல்டர் IELTS தேவையில்லை 50 வயதிற்குள்.
3. சமையலாளர் IELTS தேவையில்லை 50 வயதிற்குள்.

- இத்தாலி இலகுவில் போகலாம்.
- ஆஸி குடும்பமாகச் செல்ல பெரிதாக ஒன்றும் செய்ய வேண்டிய தேவையில்லை.
- Student Visa, Visit Visa நம்பகரமான கைதேர்ந்தவர்கள் நாங்கள் மட்டுமே.

7 நாட்களும் திறந்திருக்கிறோம்.

திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
021 221 9016, 021 499 3501
(C-6932)

## கடத்தல், ஆள்நுழைவை தடுக்கவே மீனவர்களிடம் பதிவு நடவடிக்கை

### பாஸ் நடைமுறை அமுலில் இல்லை என்கிறது இராணுவம்

(யாழ்ப்பாணம்)

போதைப்பொருட்களான குடு, கஞ்சா, அபின் போன்றவை கடல்மார்க்கமாக கடத்தப்படுவதைதடுக்கவும், வெளிநாடுகளிலிருந்து சட்ட விரோதமாக ஆட்கள் நுழைவதைத்தடுக்கவுமே மீனவர்களிடம் பதிவு நடவடிக்கை மீளவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது எனவும் மக்களினதும், மீனவர்களின் நன்மைகருதியுமே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என இராணுவம் தெரிவித்துள்ளது.

அத்தோடு பாஸ் நடைமுறையை தாம் அமுல்படுத்தவில்லையெனவும் அவ்வாறு ஊடகங்களில் வெளியான செய்திகளையும் இராணுவம் மறுத்துள்ளது. நேற்று முன்தினம் யாழ். வடமராட்சிப்பகுதியிலுள்ள மீனவ சங்கங்களுக்கு

20 ஆம் பக்கம் பார்க்க..

## அரசுடன் கூட்டமைப்பு இரகசியமாக பேசவில்லை!

### சுமந்திரன் எம்.பி. விளக்கம்

(கொழும்பு)

அரசாங்கத்துடன் இரகசிய பேச்சுவாரத்தை நடத்தப்பட்டதாக வெளியான தகவல்களில் உண்மையில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவித்துள்ளது. ஜெனிவாவில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளின்போது இவ்வாறு அரசாங்கத்திற

20 ஆம் பக்கம் பார்க்க..

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலேசிய விமானம் தொடர்ந்தும் மர்மம்; நீடித்துச் செல்கிறது தேடுதல் காலம்

(கொழும்பு)

இந்தியப் பெருங்கடலில் விழுந்ததாக கூறப்படும் எம்.எச்.370 என்ற மலேசிய விமானத்தின் உடைந்த பாகங்களை தேடும் பணி முழுவீச்சில் நடந்து வருகிறது.

இதுவரை எந்த முன்னேற்றமும் தெரியாத நிலையில், தேடல் நடவடிக்கை தொடரும் என்றும், அதற்கான கால அளவை நிர்ணயிக்க முடியாது எனவும் அவுஸ்திரேலிய பிரதமர் டோனி அபாட் தெரிவித்துள்ளார்.

இது குறித்து பேர்த்திலுள்ள ராயல் அவுஸ்திரேலிய கடற்படைத் தளத்திற்கு சென்ற பிரதமர் டோனி அபாட் கூறுகையில்,

விமானத்தின் பாகங்களை தேடுவது குறித்து இதுவரை எந்த கால அளவும் நிர்ணயிக்கப் படவில்லை.

நாங்கள் குறைவான தகவல்களை வைத்துக் கொண்டு பெருங்கடலில் விமானத்தை தேடிக் கொண்டிருக்கிறோம். உலகின் தலைசிறந்த தொழில்நுட்ப வல்லுநர்கள் விமானத்தை தேடும் பணியில் உதவி செய்கிறார்கள். எனினும் சில காலம் இந்த தேடல் தொடர வேண்டும். அதே சமயம் இது ஒன்றும் எளிதான விஷயம் அல்ல.

தேடல் நடவடிக்கைகளில் ஈடுப் பட்டுவரும் வீரர்களின் பங்களிப்பு பாராட்டுக்குரியது. உலகின் சிறந்த மூளைகளை வைத்து மேற்கொண்டு வரும் தேடலாக இது இருக்கிறது. இதுவரை இது போல எந்த ஒரு விவகாரத்திலும் இத்தகைய சர்வதேச ஒத்துழைப்பு பார்க்க முடிந்ததில்லை.

இதுவரை பணிகள் அனைத்துமே யூகத்தின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அமெரிக்கா, நியூசிலாந்து, மலேசியா போன்ற நாடுகளை போல சீனா, ஜப்பான் மற்றும் கொரியாவும் தேடல் நடவடிக்கைகளில் கைக் கோர்த்தமை மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது.

இந்த தேடல் சர்வதேச அளவில் உள்ள மனிதநேயத்தை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது. விமானம் குறித்து அசாதாரணமான மர்மத்தை முடிவுக்கு கொண்டு வரும் முயற்சியில் அனைத்து நாடுகளும் ஒருமித்து முயற்சித்து வருகின்றது. விரைவில் விமானத்தில் பயணித்த 239 பேர்களின் குடும்பத்தினருக்கு அமைதியை ஏற்படுத்தும் வகையில விரைவில் ஒரு தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையில் இந்த தேடல் தொடர்கிறது என்றார்.

**விமானத்தின் கறுப்புப் பெட்டி விவகாரம்**

விமானம் விழுந்து மூழ்கியிருக்கலாம் என சந்தேகிக்கப்படும் இந்தியப் பெருங்கடல் பகுதியை நோக்கி, கறுப்புப் பெட்டியைக் கண்டறியும் கருவியுடன் அவுஸ்திரேலிய போர்க்கப்பல் ஒன்று விரைந்துள்ளது.

அவுஸ்திரேலியாவிலிருந்து 1,850 கி.மீ. தொலைவிலிருக்கும் அந்தப் பகுதியை அக்கப்பல் சென்றடைய 2 முதல் 3 நாள்கள் வரை ஆகும் எனக் கூறப்படுகிறது. (செ-11)

# உலக நாடுகள் இலங்கையை ஆட்டிப் படைக்க முடியாது

## கூறுகிறார் அமைச்சர் பவித்ரா

(கொழும்பு)

இலங்கையின் சகல மக்களினதும் மனித உரிமைகளை பாதுகாத்து, நாட்டை அபிவிருத்தி நோக்கி இட்டுச் செல்லக் கூடிய ஒரே கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி என அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

நடந்து முடிந்த மாகாண சபைத் தேர்தல் இதனை உறுதிப்படுத்தியிருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜெனிவா மனித உரிமை பேரவையில் இலங்கைக்கு எதிராக சில பலம் பொருந்திய நாடுகள் மேற்கொண்ட முயற்சியின் போது அந் நாடுகளால் இலங்கைக்கு எதிராக பெரும்பான்மை ஆதரவை திரட்ட முடியாமல் போனது.

இப்படியான சந்தர்ப்பத்தில் அரசாங்கத்தின் மீது மக்கள் வைத்துள்ள தொடர்ச்சியான நம்பிக்கையை பாதுகாக்கும் வகையில், தேர்தலில் அரசாங்கத்தற்கு வெற்றிகரமான தீர்ப்பை வழங்கியுள்ளனர்.

மக்களின் இந்த தீர்ப்பின் மூலம் பலம் பொருந்திய நாடுகள் தமது நிலைப்பாட்டுக்கு ஏற்ப இலங்கை ஆட்டிப் படைக்க கூடிய நாடு அல்ல என்பதை பறைசாற்றியுள்ளனர்.

மக்களின் இந்த தீர்ப்பானது பலம் பொருந்திய உலக நாடுகளுக்கு வழங்கப்பட்ட பாரிய அடி என்றும் அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி குறிப்பிட்டுள்ளார். (செ-11)

# வாக்குச் சீட்டு கண்டெடுப்பு

(காலி)

காலி உலுவிடிகே ரிச்சட் பத்திரண வித்தியாலயத்திலிருந்து புள்ளடி இடப்பட்ட நிலையில் வாக்குச் சீட்டு ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.

அப் பாடசாலையின் மாணவி ஒருவர் வகுப்பறையிலிருந்து குறித்த வாக்குச் சீட்டை கண்டெடுத்து பாடசாலை அதிபரிடம் ஒப்படைத்துள்ளார்.

அந்த வாக்குச் சீட்டில் மக்கள் விடுதலை முன்னணியின் சின்னத்திற்கு புள்ளடி இடப்பட்டிருந்ததாக தேரதல்கள் ஆணையாளர் தெரிவித்தார்.

இந்த சம்பவம் தொடர்பில் பொத்தளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-11)

# எம்.ஜி.ஆர் சிலை திறப்பு

(யாழ்ப்பாணம்)

இந்தியாவின் புகழ் பூத்த நடிகரும் தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சருமான எம்.ஜி.ஆர் அவர்களின் உருவச்சிலை நாளை புதன்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு யாழ் கல்வியங்காட்டுச் சந்தியில் திறந்து வைக்கப்படவுள்ளது.

இச் சிலையினை யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா திறந்து வைக்கவுள்ளார்.

கோப்பாயைச் சேர்ந்த யாழ். எம்.ஜி.ஆர் இராசையா சுந்தரலிங்கம் அவர்களின் முயற்சியால் மேற்படி சிலை திறந்து வைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

# ‘இனம்’ திரைப்படம் இடைநிறுத்தம் இயக்குநர் லிங்குசாமி அறிவிப்பு

(சென்னை)

ஒளிப்பதிவாளார் சந்தோஷ் சிவன் இயக்கி தயாரித்திருக்கும் “இனம்” திரைப்படம் தொடர்பில் எழுந்துள்ள சர்ச்சையை அடுத்து அத்திரைப்படத்தை அனைத்து திரையரங்குகளில் இருந்தும் வாபஸ் பெற திரைப்படத்தின் வெளியீட்டாளரான லிங்குசாமி தீர்மானித்துள்ளார்.

திருப்பதி பிரதர்ஸ் சார்பாக வெளியிடப்பட்ட இனம் திரைப் படம் நேற்றிலிருந்து திரையரங்குகளில் இருந்தும் வாபஸ் பெறப்படும். இதனால் ஏற்படும் நட்டத்தைத் தாண்டியும் மனித உணர்வுகளையும் மக்களையும் நேசிப்பதிலேயே இந்த முடிவை எடுக்கிறேன் என்று லிங்குசாமி அறிவித்துள்ளார்.

இலங்கையில் இருந்து அகதியாக வந்த ஒரு பெண்ணின் கதையை “இனம்“ என்ற பெயரில் திரைப்படமாக்கி இருப்பதாக சொன்னார் சந்தோஷ் சிவன். இப்படத்தை இயக்குநர் லிங்குசாமியின் திருப்பதி பிரதர்ஸ் வாங்கி வெளியிட்டது.

இத்திரைப்படத்தில் வரும் சில காட்சிகள் தொடர்பில் தமிழர்கள் மத்தியில் சர்ச்சை ஏற்பட்டிருந்தது. அவர்களின் கோரிக்கையால் சில காட்சிகளை நீங்குவதாகவும் அறிவித்தார் இயக்குநர் லிங்குசாமி. ஆனால்- இத்திரைப்படத்தை தடை செய்ய எதிர்ப்புகள் தொடர்ந்து வருகிற நிலையில் திரைப்படத்தை நிறுத்திவிடுகிறேன் என்றும் அறிவித்திருக்கிறார் லிங்குசாமி.

இது தொடர்பில் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள லிங்குசாமி தெரிவித்திருப்பதாவது,

“இதுவரைக்குமான எனது தனிப்பட்ட வாழ்க்கையிலும் சினிமா வாழ்க்கையிலும் தமிழ் மண்ணையும் மக்களையும் ஆத்மார்த்தமாக நேசித்து வந்திருக்கிறேன். இனியும் அப்படியே இருப்பேன். உலகத் தமிழர்களின் வெற்றியில் பெருமிதம் கொள்வதும்- துயரங்களில் தோள் கொடுப்பதும்- உண்மையான போராட்டங்களில் இணைத்துக் கொள்வதையும் எப்போதும் குடும்பத்தின் கடமையாக வைத்திருக்கிறேன்.

தற்போது தமிழ் மண்ணின் மீதான எனது அன்பை கேள்விக்குள்ளாக்குவது மாதிரியான தவறான வதந்திகளை சிலர் பரப்பி வருகிறார்கள். கசப்பான சம்பவங்களும் நடந்திருக்கின்றன. அடிப்படையில் சினிமாவின் தீவிர காதலனாக, இலாப நட்டங்களையும் தாண்டி நல்ல சினிமாக்களையும், படைப்புகளையும் முன்னெடுப்பதை பெருவிருப்பமாக செய்து வருகிறேன். அப்படி ஒரு சினிமா நேசனாகவே இனம் படத்தையும் வாங்கி வெளியிட்டேன்.

அது சினிமாவாக முக்கியமான முயற்சியாக தோன்றியதாலேயே வாங்கி வெளியிட்டேன். ஆனால் அந்தப் படத்தைப் பற்றி தவறான தகவல்கள் பரப்பப்பட்டிருக்கிறது. அது சிலரின் மனதை புண்படுத்தியிருப்பதாகவும் அறிகிறேன். அரசியல் ரீதியான குழப்பங்களும் விளைவிக்கப்படுகின்றன.

இதன்பொருட்டு தனிமனித தாக்குதல்களையும் தனிப்பட்ட முறையில் கசப்பான அனுபவங்களையும் சந்தித்தேன். யாருக்காகவும் எதற்காகவும் அச்சப்படுகிறவன் இல்லை நான். ஆனால் இந்த தேசத்தின் மீதும்- தமிழ் மண் மீதும்- மக்கள் மீதும் மிகப்பெரிய அக்கறை வைத்திருக்கிறேன்.

எனவே தேர்தல் நேரத்தில் எந்தக் குழப்பங்களும் வராமல் இருக்க இனம் திரைப்படத்தை நான் நிறுத்துகிறேன். இதனால் ஏற்படும் நஷ்டத்தைத் தாண்டியும் மனித உணர்வுகளையும் இந்த மக்களையும் நேசிப்பதிலேயே இந்த முடிவை எடுக்கிறேன்” என்று லிங்குசாமி மேலும் தெரிவித்துள்ளார். (செ-11)


**தொடர்ந்தும் உங்கள் சேவையில்....**

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்

கடிதங்கள் · அன்பளிப்பு பொருட்கள் · உடுபுடவைகள்

CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

(C-6934)

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-0212225392

WESTERN UNION MONEY TRANSFER


# சுகாதார நிர்வாக அதிகாரங்கள் யாவும் பிரதேச சபைகளுக்கே வழங்கவேண்டும்!

## வலி. வடக்கு பிரதேச சபையில் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

சுகாதார நிர்வாக அதிகாரங்கள் அனைத்தும் பிரதேசசபைகளுக்கே வழங்கப்படவேண்டும். அத்துடன், எமது சபைகளில் இருந்து சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு அடாத்தாக - பொலிஸாரின் உதவியுடன் - சட்டதிட்டங்களுக்கு முரணாக -இடமாற்றம் செய்யப்பட்ட பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் அனைவரையும் உடனடியாக அந்தந்த சபைகளுக்கு மீளவும் வழங்க வேண்டும்.

இவ்வாறு வலி.வடக்கு பிரதேசசபையில் தீர்மானம் ஒன்றை முன்வைத்து பிரதேசசபையின் உறுப்பினர் லயன் சி.ஹரிகரன் உரையாற்றினார். அந்தத் தீர்மானத்தை உறுப்பினர் மா.கதிரமலைப்பிள்ளை முன்மொழிய, உறுப்பினர் பொ.தங்கராசா வழிமொழிய தீர்மானம் சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சுகாதார நிர்வாக அதிகாரங்கள் அனைத்தும் 1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க 4 ஆம் பாகத்தின் 78:1, 78:2 பிரதேசசபைச் சட்டம் மற்றும் வீடமைப்பு நகர அபிவிருத்திச் சட்டம் என்பவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளமை போன்று பொதுச் சுகாதாரம், உணவு கையாளும் நிலையங்கள் என்பன பிரதேசசபைகளின் கீழே உள்ளன என்பதற்கிணங்க சுகாதார நடவடிக்கைகள் அனைத்தும் பிரதேச சபைகளுக்கே வழங்கப்படவேண்டும். பிரதேச சபைகளின் கீழே பல்வேறுபட்ட சுகாதாரச் செயற்பாடுகளான உணவு கையாளும் நிலையங்கள், கழிவகற்றல், கட்டட அனுமதி போன்ற பல செயற்பாடுகள் காணப்படுகின்றன. சுகாதாரப் பரிசோதகரை எமது சபைகளில் இருந்து இவர்கள் இடமாற்றியதால் கடந்த ஒரு மாத காலமாக எமது செயற்பாடுகள் அனைதம் ஸ்தம்பித்த நிலையில் காணப்படுகின்றன. இதனால் மக்களதான் பெரிதும் பாதிக்கப்படுகின்றார்கள்.

சுகாதார வைத்திய அதிகாரி எமது சபையின் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் மீது உள்ள தனிப்பட்ட பகைமையை மனதில் வைத்து அவரைப் பழிவாங்கும் நோக்குடன் இந்தப் பிரச்சினையைப் பூதாகரமாக்கியுள்ளார். இவரது இவ்வாறான எதேச்சதிகாரச் செயற்பாட்டால் இன்று எமது மக்கள்தான் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இந்த நிலைமை தொடர்வதற்கு நாம் என்றைக்கும் அனுமதிக்க முடியாது. நாம் மக்கள் பிரதிநிதிகள் அவர்கள் பாதிக்கப்படுவதை என்றைக்கும் பார்த்துக்கொண்டு இருக்கமாட்டோம்.

எமது பிரதேசத்தின் நிர்வாகக் கட்டமைப்பை சரியான முறையில் இயக்கவேண்டிய பொறுப்பு மக்கள் பிரதிநிதிகளான எமக்கே உள்ளது. எமது பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பிரதேச மக்களுக்கு சிறப்பான முறையில்சேவைகளை ஆற்றுவதில்லை. மாறாக, அவர் தேவையில்லாத பிரச்சினைகளைத்தான் உண்டுபண்ணுகின்றார். மீள்குடியேற்றம் துரிதமாக நடைபெற்றுவரும் எமது பிரதேசத்தில் சகல சேவைகளும் சிறப்பாக இயங்கப்படவேண்டும். ஆகவே, எமது பிரதேசத்துக்கு அர்ப்பணிப்புடன் சேவையாற்றாத - மக்களின் நலனைக் கருத்தில் கொள்ளாத - சுகாத்ர வைத்திய அதிகாரியை எமது பிரதேசத்தில் இருந்து இடமாற்றி, எமக்கு அர்ப்பணிப்புடன் சேவையாற்றக்கூடிய ஒரு தியாக சிந்தையுடைய சுகாதார வைத்திய அதிகாரியை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் நியமிக்கவேண்டும் என்றும் எமது மக்களுக்கும் எமது சபைக்கும் பல்வேறு இடையூறுகளை வழங்கி வந்த சுகாதார வைத்திய அதிகாரி மீது எமது சபையில் கண்டனத் தீர்மானம் ஒன்றையும் நிறைவேற்றுமாறு இந்தச் சபையைக் கேட்டுக்கொள்கின்றேன்.

இந்தப் பிரச்சினையில், குறிப்பாக உள்ளூராட்சி அமைச்சரும் முதலமைச்சருமான சி.வி.விக்னேஸ்வரன், சுகாதார அமைச்சரான ப.சத்தியலிங்கம் ஆகியோர் விரைந்து நடவடிக்கைகளை மேற்கொண்டு எமக்குரிய சுகாதாரப் பரிசோதகர் ஆளணி மீளவும் நிரப்பப்பட ஆவனசெய்யவேண்டும். இல்லையேல், எமது சகல சுகாதார நடவடிக்கைகளையும் நாம் முடக்குவோம் என்றும் சபையில் தெரிவிக்கப்பட்டது. அத்துடன் தீர்மானத்தின் பிரதிகள் உள்ளூராட்சி அமைச்சர், மாகாணசபை அவைத்தலைவர், சுகாதார அமைச்சர் ஆகியோருக்கும் அனுப்பிவைப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## நல்ல பார்வை

''என்ன சேர் உலகம்... இவ்வுலகில் நடைபெறும் காரியங்கள் எதுவுமே சரியில்லை'' என்று கவலைப்பட ஒருவர் கூறினார்.

"என்ன இது...இப்படி ஒரேயடியாக அலுத்துப் பேசுகிறீர்களே...?'' என்று கேட்டேன்.

"பின்னர் என்ன சேர்... நல்ல விடயமே கண்ணுக்குப் புலப் பட்மாட்டாது போல் உள்ளது... அனைத்துமே பிரச்சினையாக இருக்கின்றது..." என்றார் அவர்.

சரி...சற்று அமைதியாக இருங்கள். உங்களுக்கு ஒரு கதை சொல்கிறேன்... என்று ஆரம்பித்தார்.

ஒரு ஊரிலே ராஜா இருந்தார். அவருக்குத் திடீரென ஒரு நாள் தலை வலிக்க ஆரம்பித்து விட்டது.

ராஜா என்றால் தலைவலி வராதோ. பெரிய தலைவலியா வந்துவிடும்.

அரண்மனையிலே வைத்திய வசதிக்கு என்ன குறைச்சல். நிறைய வைத்தியர்கள் ஒவ்வொருவிதமான மருந்தைக் கொடுத்தார்கள். வலி குறையவில்லை. தலைவலிக்கு என்ன காரணம் என்பதை அவர்களால் சரியாகக் கண்டுபிடிக்க முடியவில்லை. வலி தொடர்ந்தது.

இது தொடர்பாக அமைச்சர் ஒருவர் ஆலோசனை வழங்கினார்.

''காட்டிலே ஒரு முனிவர் இருக்கிறார்... அவரை அழைத்து வந்து காட்டினால் ஏதாவது யோசனை சொல்வார்" என்றார்.

"சரி போய் அழைத்துக்கொண்டு வாருங்கள்" என்று ராஜா உத்தரவு போட்டார். முனிவரைப் போய் அழைத்துக் கொண்டு வந்தார்கள்.

''மன்னா! மருந்துவகைகள் மூலமாக உன்னுடைய தலை வலியைக் குணப்படுத்த முடியாது. நீ எங்கே போனாலும் வந்தாலும் பச்சை வர்ணம் உன் கண்ணிலே தென்படுகிற மாதிரி பார்த்துக்கொள். பச்சை நிறம் கண்ணுக்கு நல்லது. பச்சை நிறத்தை பார்த்துக் கொண்டிருந்தால் உன் தலைவலி பறந்து போய் விடும். இதுதான் வைத்தியம்" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்.

மறுநாளே அந்த ராஜா மந்திரிகளோடு ஆலோசனை நடத்தினார்.

அதன்பின்னர் அரண்மனை தொடக்கம் வீடுகள் வரை பச்சை நிறத்தில் வர்ணம் பூசப்பட்டது. ஊரிலே உள்ளவர்கள் அனைவரும் பச்சை உடை அணிய வேண்டும். பச்சை நிறத்தைத் தவிர வேறு எந்த நிறமும் ராஜா கண்ணிலே தென்படக் கூடாது என்று கடுமையான உத்தரவு அந்த ஊரிலே பிறப்பிக் கப்பட்டது.

சிறிது நாட்களிலே எந்தப் பக்கம் பார்த்தாலும் பசுமைப் புரட்சி–அப்படியாக அந்த ஊர் மாறியது.

காட்டுக்குச் சென்ற முனிவர் நாட்கள் கடந்த நிலையில் மறுபடியும் அரண்மனைக்கு வந்தார்.

வந்து பார்த்தால்... ஊர் பூராகவும் பச்சை நிறம். இது என்ன அதிசயம் என்று திகைத்துப் போனார்.

இவர் அரண்மனைக்குள் நுழைவதற்கு முன்னர் பெயின்ட் வாளியோடு இருவர் ஓடி வந்தனர்.

''முனிவரே சற்று நில்லுங்கள். உடல் முழுவதும் பச்சை நிறம் அடிக்க வேண்டும். அதன்பின்தான் நீங்கள் உள்ளே போகலாம்" என்றனர்.

முனிவர் திகைத்துப் போனார். "என்னடா இது... நமது யோசனை இந்த அளவிற்கு கொண்டு வந்து விட்டதே" என்றார்.

அதன்பின்னர் ஆசாமி ராஜாவை சந்தித்தார். அப்போது "அரசனே! உனக்கு இந்த பச்சை நிறத்தை பார் என்று கூறினால் இப்படியாக அரசாங்க பணத்தை வீணடிப்பதா? உன்னுடையபார்வைமந்தமடைந்துவிட்டதா?" என்று அவர் கேட்டார்.

''அது எப்படி பார்வையை மாற்றிக்கொள்வது?'' என்றார் அரசன்.

''ஒரு பச்சை நிற கண்ணாடியை அணிந்து கொண்டால் பார்ப்பது பூராகவும் பச்சையாகத் தெரியும். அதற்குப் போய் இவ்வளவு பணத்தை விரயமாக்கியுள்ளாயே?'' என்று முனிவர் கூறினார். இந்த உலகம் பூராகவும் நமது உள்ளுணர்வுகளின் வெளிப்பாடுதான் என்ற உண்மையை நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம்

(கொழும்பு)

வேலையாளர் நட்ட ஈட்டு ஆணையாளர் அலுவலகத்தில் சுருக்கெழுத்தாளர் வகுப்பு III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கல்வித் தகைமைகளாக முதல் மொழி சிங்களம்/ தமிழ்/ஆங்கிலம்/ மற்றும் கணிதம் ஆகிய பாடங்கள் உள்ளடங்கலாக ஒரே தடவையில் ஆறு பாடங்களில் ஏதேனும் பாடங்களில் இரண்டு திறமைச் சித்தியுடன் க.பொ.த.(சா/த) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் அல்லது க.பொ.த.உயர் தரத்தில் ஆகக் குறைந்தது ஒரு பாடமேனும்சித்தியடைந்திருத்தல்வேண்டும்.

தொழில்சார் தகைமைகளாக உயர் வாழ்க்கைத் தொழில் கல்வி ஆணைக்குழுவினரால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் நடத்தப்பட்ட சுருக்கெழுத்து மற்றும் தட்டெழுத்து (6மாதம்) சான்றிதழைப் பெற்றிருத்தல் அல்லது க.பொ.த.(சா/த) பரீட்சையில் சுருக்கெழுத்து மற்றும் தட்டெழுத்து பாடத்தில் திறமைச் சித்தி(சி) பெற்றிருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரி 18 வயது முதல் 30 வயதுக்குட்பட்டவராக இருத்தல் வேண்டும். விண்ணப்பங்களை ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பணிப்பாளர் அதிபதி, தேசிய தொழில் கற்கைகள் நிறுவனம், இல–267, பன்னிப்பிட்டி வீதி, பெலவத்தை, பத்தரமுல்லை என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டும்

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் உதவிப்பணிப்பாளர் (சட்டம்) பதவிக்கான வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான விண்ணப்பங்களை அவ்வமைச்சு கோரியுள்ளது.

இதற்கான கல்வித்தகைமைகளாவன, உயர் நீதிமன்ற சடடத்தரணியாக இருத்தல், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் சட்டம் சம்பந்தமான பட்டத்தைப் பெற்றிருத்தலுடன் 2014 ஆம் ஆண்டு மேமாதம் முதலாம் திகதியன்று 22 வயதிற்கு குறையாமலும் 46 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் மேமாதம் முதலாம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பணிப்பாளர் நாயகம், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு அலுவலகம், இலக்கம் 36, மலலசேகர மாவத்தை, கொழும்பு 07 என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். மேலும் கடித உறையின் இடது பக்க மேல்மூலையில் உதவிப் பணிப்பாளர் (சட்டம்) பதவி என்று தெளிவாக குறிப்பிடல் வேண்டும்.

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

இலங்கைக் கணக்காளர் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட/ திறந்த போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் மார்ச் மாதம் 28 ஆம் திகதி அன்று 22 முதல் 28 வயதுடையவராக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் யாவும் ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பரீட்சைகள் ஆணையாளர் ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைகள் பிரிவு, இலங்கை பரீட்சைகள் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.

மேற்படி விண்ணப்பங்கோரல்கள் தொடர்பான மேலதிக விபரங்களை கடந்த 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வெளியான வர்த்தமானி பத்திரிகையிலோ அல்லது வலம்புரி காரியாலயத்திலோ பார்வையிட முடியும். (2)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 70 | 60 | 80 |
| உருளைக்கிழங்கு | 90 | 90 | 80 | 90 |
| பச்சைமிளகாய் | 70 | 80 | 70 | 80 |
| தக்காளி | 40 | 60 | 40 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 40 | 40 |
| கோவா | 40 | 20 | 35 | 40 |
| கரட் | 80 | 60 | 80 | 100 |
| பூசணி | 30 | 30 | 30 | 40 |
| புடோல் | 40 | 70 | 60 | 40 |
| வாழைக்காய் | 30 | 30 | 30 | 40 |
| சின்ன வெங்காயம் | 30-80 | 70 | 40-75 | 80 |
| பெரிய வெங்காயம் | 50-70 | 80 | 50-70 | 70 |
| பாகற்காய் | 100 | 80 | 90 | 80 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 50 | 60 |
| கருணைக் கிழங்கு | 30 | 50 | 40 | 50 |
| பயற்றங்காய் | 60 | 120 | 70 | 60 |
| லீக்ஸ் | 50 | 50 | 60 | 80 |
| பீற்றூட் | 30 | 60 | 40 | 50 |
| கறிமிளகாய் | 80 | 60 | 50 | 80 |
| முருங்கைக்காய் | 200 | 150 | 250-300 | 200 |
| போஞ்சி | 80 | 100 | 90 | 100 |
| கத்தரிதம்புள்ள | 30 | 60 | 40 | 60 |
| கீரை -1 பிடி | 10 | 20 | 15 | 30 |
| தேசிக்காய் | 80 | 60 | 60 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 30-60 | 50 | 35 | 35-40 |
| இராசவள்ளி | 80 | 100 | 90 | 80 |

# இராசி பலன்

**31.03.2014**
**(பங்குனி 17, திங்கட்கிழமை )**
**சூரிய உதயம் காலை 6.20 மணிக்கு**
**பிரதமை நள்ளிரவு 11.59 மணிவரை**
**ரேவதி பின்னிரவு 1.51 மணிவரை**
**இராகுகாலம் 7.42-9.12 மணிவரை**
**சுபநேரம் 12.12-01.42 மணிவரை**

**மேடம்** காரிய அலைச்சல்கள் அதிகரிக்கும் நாள், வழக்கத்தைவிட கூடுதல் நேரம் பணிபுரியும் சூழ்நிலை உருவாகும், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**இடபம்** செல்வாக்கு மேலோங்கும் நாள், மனதில் இனம்புரியாத சந்தோஷம் குடிகொள்ளும், உறவினர் வருகையால் குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**மிதுனம்** மனதிற்கினிய சம்பவங்கள் நடை பெறலாம், கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள், அரசு வழியில் அனுகூலமுண்டு, சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, வீட்டை அழகுபடுத்தும் எண்ணம் உருவாகும்.

**கடகம்** மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும், நல்லவர்களின் தொடர்புகள் அதிகரிக்கும், பித்த சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், எதிர்பாராத பயணங்கள் கைகூடலாம்.

**சிங்கம்** குடும்பத்தில் இடையிடையே சில வாக்குவாதங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையும்,செலவுகள் அதிகமாகும்,வழிபாட்டால் அமைதி காண வேண்டிய நாள், போசன சுகமுண்டு

**கன்னி** சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் ஏற்படலாம், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், குடும்பத்தில் அந்நியோன்னியம் அதிகரிக்கும்.

**துலாம்** விருந்தினர் வருகையுண்டு, உடல் நலம் சீராகும், செய்தொழில் மேன்மையுண்டு, வருமானம் திருப்திதரும், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் ஏற்படும்.

**விருச்சிகம்** பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வியாபாரத்தை விருத்தி செய்ய முற்படுவீர்கள், முயற்சிகளில் அதிக பிரயாசை காட்ட வேண்டிய சூழ்நிலை உருவாகும்.

**தனுசு** செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், நேர்மையும் நாணயமும் கொண்ட நண்பர்களால் நன்மைகள் நடைபெறலாம், அரசியல் வாதிகளால் அனுகூலமுண்டு, தேவையற்ற சஞ்சலங்கள் உருவாகும்.

**மகரம்** பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமைகள் வந்து சேரலாம், சிலர் உங்களிடம் உதவி கேட்டு வரலாம், கூட்டு முயற்சிகள் வெற்றி தரும், வருமானம் திருப்தி தரும், பயணங்களால் பலனுண்டு.

**கும்பம்** ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் இருந்த கவலைகள் தீரும், பணப்புழக்கம் அதிகரிக்கும், எடுத்த காரியங்களில் சில தாமதங்கள் ஏற்படலாம், சொத்துக்களால் ஆதாயமுண்டு.

**மீனம்** மனக்கிலேசங்கள் அதிகரிக்கும், திட்டமிட்ட காரியம் ஒன்றில் திடீர் மாற்றங்களை செய்ய முற்படுவீர்கள், போசன சுகமுண்டு, ஆன்மீக சிந்தனை மேலோங்கும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.


**வளவன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலுமினிய மின்கம்பிகள் கடத்தியவர்கள் கைது

(யாழ்ப்பாணம்)

இலங்கை மின்சார சபைக்குச் சொந்தமான அலுமினிய மின்கம்பிகளை லொறியொன்றில் ஏற்றிச்செல்ல முற்பட்டதாகக் கூறப்படும் இருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.





இச்சம்பவம் யாழ்.பொம்மைவெளி 9 ஆம் குறுக்குத்தெருவில் நேற்று முன்தினம் இடம்பெற்றதாக யாழ்.பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன் 42 பைகளிலிருந்து 840 கிலோகிராம் அலுமினிய மின்கம்பிகளை இவர்களிடமிருந்த கைப்பற்றியதாகவும் அவர்கள் கூறினர்.

மின்கம்பிகளை கொழும்புக்கு கடத்திச் செல்வதாக இரகசியத் தகவல் கிடைத்தது.

இந்நிலையில் அராலி தெற்கைச் சேர்ந்த லொறிச் சாரதியையும் பொம்மைவெளி 4 ஆம் குறுக்கைச் சேர்ந்த ஏனைய சந்தேக நபரையும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்ததாகவும் பொலிஸார் கூறினர். (2-4)




# நாடளாவிய ரீதியில் அரச தாதியர்கள் பணிப்புறக்கணிப்பு

**யாழ்.அரச தாதியர்களும் ஆதரவு**



(யாழ்ப்பாணம்)

நாடளாவிய ரீதியில் நேற்று இடம்பெற்ற அரச தாதிய உத்தியோகத்தர்களின் பணிப்புறக்க ணிப்பு போராட்டத்திற்கு யாழ். போதனா வைத்தியசாலையின் தாதிய உத்தியோக த்தர்களும் ஆதரவு தெரிவித்து நேற்று திங்கட்கிழமை பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

நேற்றுக்காலை 7 மணிமுதல் பிற்பகல் ஒரு மணிவரையான அரை நாள் பணிப் புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தாதிய உத்தியோகத்தர்களுக்கு மனநோயியல் மற்றும் மகப்பேற்று மருத்துவம் ஆகிய இரு பயிற்சிகள் சுகாதார அமைச்சினால் வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இருப்பினும், இதற்கான சுற்று நிரூபத்தை வெளியிட விடாமல் அரசாங்க வைத்திய சங்கத்தினர் தடுத்து நிறுத்தியுள்ளனர்.

இதனைக் கண்டித்து தாதிய உத்தியோகத்தர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டதாக யாழ். போதனா வைத்தியசாலையின் தாதிய சங்கத் தலைவர் நல்லையா நற்குணராஜா தெரிவித்தார்.

மேலும், நாளை மறுதினம் வியாழக்கிழமை சுகயீன விடுமுறை போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

தாதிய உத்தியோகத்தர்களின் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தினால் நோயாளர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (2-4-6)

# மோ.சைக்கிள் விபத்தில் இருவர் படுகாயம்

யாழ்.கொட்டடி நமசிவாயம் வீதியில் வேகமாகச் சென்ற மோட்டார் சைக்கிள் ஒன்று மின்கம்பத்துடன் மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் தலையில் படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையப் பொலிஸார் தெரிவித் த னர்.

இவ் விபத்துச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது. குறித்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த கொட்டடி முதலி வீதியைச் சேர்ந்த பாலராஜா வினோதன் (வயது 26), ரவீந்திரன் றொசான் (வயது-21) ஆகிய இருவருமே படுகாயமடைந்துள்ள னர்.

இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகப் பொலிஸார் மேலும் கூறினார்கள். (2-4)

# கவனயீனமாக வாகனங்களை செலுத்தியதில் இருவர் படுகாயம்

(மானிப்பாய்)

மானிப்பாய் பிரதான வீதியில் பிரதேச சபைக்கு முன்பாக இரண்டு மோட்டார் சைக்கிள்கள் விபத்துக்குள்ளாகி இருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இவ்விபத்துச் சம்பவம் நேற்றுக்காலை 9 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இவ் விபத்து சம்பவம் தொடர்பாக தெரிய வருவதாவது,

மானிப்பாயிலிருந்து சிறியரக மோட்டார் சைக்கிளில் யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த முதியவர் ஒருவரும் எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு முன்பாக இருந்த ஒழுங்கையிலிருந்து வந்த180 சீசீ பல்சர் ரக மோட்டார் சைக்கிளுமே இவ்வாறு விபத்துக்குள்ளாகின.

இருவரும் கவனயீனமாக வாகனங்களை செலுத்தியமையாலேயே இவ்விபத்துச் சம்பவித்துள்ளது.

விபத்து காரணமாக இரு மோட்டார் வண்டிகளும் சேதமடைந்ததுடன் இருவரும் காயங்களுக்குள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். (2-23)

# கீரிமலையில் அழிக்கப்பட்ட மடங்கள் மீளமைக்கப்பட்டு வருகின்றன

**ஆலய ஆதீன கர்த்தா பெருமிதம்**

(யாழ்ப்பபாணம்)

கீரிமலைப் பகுதியில் இருந்த பல மடங்கள் கடந்த காலங்களில் அழிந்தும் அழிக்கப்பட்டும் உள்ளன. அவற்றினை மீள அமைக்கும் நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதற்கு சாட்சியாக இந்த கீரிமலை யாத்திரிகர் மடமும் சிவபூமி கலைக் களஞ்சியமும் திறக்கப்பட்டுள்ளதாக நகுலேஸ்வர ஆலய ஆதீனகர்த்தா இராஜ ஸ்ரீ நகுலேஸ்வரக் குருக்கள் தெரிவித்துள்ளார்.

சிவபூமி அறக்கட்டளை நிதியத்தின் ஏற்பாட்டில் இலங்கை இந்து மாமன்றம், வி.கைலாயபிள்ளை குடும்பத்தினர் மற்றும் ஏனைய அபிமானிகளின் நிதியுதவிகள் மூலம் கீரிமலை நகுலேஸ்வரத்தில் நிர்மாணிக்கப்பட்ட யாத்திரிகர் மடமும் சிவபூமி கலைக்களஞ்சியமும் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டன. இதில் கலந்து கொண்டு ஆசியுரை வழங்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

கடந்த காலங்களில் இந்தப் பகுதியில் இருந்த பல மடங்கள் அன்னதானம் வழங்குபவையாகவும் தாகசாந்தி தீர்ப்பவையாகவும் காணப்பட்டன. ஆனால் இன்று அவ்வாறு நடைபெறாவிட்டாலும் கூட அதனை ஓரளவுக்கு ஈடுசெய்யும் வகையில் இந்த யாத்திரிகர் மடம் அமைக்கப்பட்டுள்ளது.

கீரிமலை என்ற பெயர் பாவனையிலிருந்து அழிந்து நகுலேஸ்வரம் என்ற பெயர் மேலோங்கத் தொடங்கியுள்ளது. ஆனால், இந்தப் பிரதேசம் யாத்திரிகர்களின் ஸ்தலமாக இருக்க வேண்டும்.

முன்னைய காலங்களில் கீரிமலையில் அமைந்துள்ள பல மடங்களில் சித்தர்கள், யாத்திரிகர்கள் எனப்பலரும் வந்து தங்கிச் செல்லக்கூடிய நிலைமை காணப்பட்டதுடன் பல சித்தர்கள் இங்கே தங்கி வாழ்ந்தும் உள்ளார்கள்.

இத்தகைய நிலைமை இந்தப் பகுதியில் மீண்டும் ஏற்படுவதுடன் சமயமும் வளர்ச்சி அடைய வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (2-6)



தந்தை செல்வா அறங்காவலர் சபையின் ஏற்பாட்டில் தந்தை செல்வாவின் 116 ஆவது ஜனன தினம் யாழ்.நகரிலுள்ள தந்தை செல்வா சதுக்கத்தில் நேற்றுக் காலை இடம்பெற்றது. இதன் போது தென்னிந்திய திருச்சபையின் ஆயரும் தந்தை செல்வா அறங்காவலர் சபையின் தலைவருமான எஸ் ஜெபநேசன் அடிகளார் மலர் மாலை அணிவித்து நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். இதனைத் தொடர்ந்து தந்தை செல்வாவின் நினைவுத் தூபிக்கு அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் வடக்கு மாகாண சபையின் அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் உள்ளிட்ட மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் பிரதேச, நகர சபைகளின் தலைவர்கள் உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (படங்கள்:-எஸ்.ஆர்.கரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐ.தே.கட்சி பலமிழந்த காரணத்தால்

# மூன்றாவது சக்தியாக ஜனநாயகக்கட்சியும் ஜே.வி.பியும் தலைதூக்க ஆரம்பித்துள்ளன

## அமைச்சர் ராஜித தெரிவிப்பு



(கொழும்பு)

**மிகவும் பலம்வாய்ந்த எதிர்க்கட்சியாகவிருந்த ஐக்கிய தேசியக் கட்சி இன்று பலமிழந்து காணப்படுவதாலேயே ஜனநாயகக் கட்சி மற்றும் ஜே.வி.பி. போன்ற கட்சிகள் சற்றுத் தலைதூக்க ஆரம்பித்துள்ளன. நடந்து முடிந்த மேல் மற்றும் தென்மாகாணத் தேர்தல் முடிபுகள் இதனைக் காட்டுகின்றன என அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.**

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 51 தொகுதிகளில் தனது பெரும்பான்மையை நிரூபித்து அமோக வெற்றியை ஈட்டியிருக்கிறது.

இது ஜனாதிபதிக்கும் மக்களுக்கும் கிடைத்த வெற்றியாகும் என்று அவர் தெரிவித்தார்.

இந்தத் தேர்தல் முடிவுகள் தொடர்பாக அமைச்சர் ராஜித தெரிவிக்கையில்,

மேல் மாகாணத்தில் சிறுபான்மையினர் அரசாங்கத்துக்கு ஆதரவாக வாக்களித் திருப்பது மிகக் குறைவாகவே காணப்ப டுகிறது. இது குறிப்பாக தமிழ் மக்கள் தாம் எதிர்பார்க்கும் அபிலாஷைகளை அரசாங்கம் இன்னமும் சரியாக இனங்கண்டு அதற்கான தீர்வினை பெற்றுக்கொடுக்கவில்லை யென்பதை உணர்த்துவதாக நான் நினைக்கிறேன்.

இதேபோன்று முஸ்லிம் மக்கள மீது கடந்த காலங்களில் சில இன வாத சக்திகள் கட்ட விழ்த்துவிட்ட எதிர்ப்பலைகள் தொடர் பாக அவர்கள் மத்தியில் ஒரு அதிருப்தி நிலை ஏற்பட்டுள்ளதையும் காட்டுவதாக நினைக்கிறேன்.

பேருவளை தொகுதியைப் பொறுத்த வரையில் அங்கு வாழும முஸ்லிம் மக்கள் அனைவரும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்ன ணிக்கு அமோக ஆதரவை வழங்கியிருக்கிறார்கள் என்பதை தேர்தல் முடிவுகள் உணர்த்துகின்றன.

இப்பகுதியில் முஸ்லிம் மக்களும் பெரும்பான்மை இன மக்களும் இனவாதப் போக்குகள் எதுவுமின்றி மிகவும் அந்நியோன்யமாக வாழ்கின்றனர்.

இதன் பிரதிபலிப்பே இப்பகுதியில் அரசுக்கு அவர்கள் அமோக ஆதரவு வழங்குவற்கான காரணமாக இருக்கிறது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி இந்தத் தேர்தலில் தலைமைத்துவச் சபையொன்றையும் அமைத்து, தேர்தல் களத்தில் இறங்கிய போதும் பலமிழந்த காரணத்தினாலேயே மூன்றாவது சக்தியாக ஜனநாயகக் கட்சியும் ஜே.வி.பியும் தலை தூக்க ஆரம்பித்துள்ளன. ஐக்கிய தேசியக் கட்சி இதை உணர்ந்து செயற்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (2)

## பொன்சேகாவின் வாக்கு செல்லுபடியானது

(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதியும் ஜனநாயகக்கட்சியின் தலைவருமான சரத் பொன்சேகாவின் வாக்கு செல்லுபடியானது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர் இரண்டு வருடங்களுக்கு குறையாத காலம் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருந்தார். எனினும், இலங்கை அரசியலமைப்பின் பிரகாரம் மாகாண தேர்தலின் போது அவர் வாக்களிப்பதற்கு தகுதியல்லாதவர் இல்லை.

அவ்வாறான சிறைத்தண்டனையொன்றை அனுபவிக்கும் ஒருவருக்கு, ஜனாதிபதி தேர்தல், நாடாளுமன்ற தேர்தல் மற்றும் சர்வஜன வாக்கெடுப்பின் போது மட்டுமே வாக்களிக்க முடியாது என்று அரசியலமைப்பின் 88 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (2)


**வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு:**
**021 321 0815, 021 567 1532**

### வீடு விற்பனைக்கு

கட்டப்பிராயில் பருத்தித்துறை வீதியை முகப்பாக கொண்ட 1 பரப்பு 1 1/2 குழியில் அமைந்த வீடு விற்பனைக்கு உண்டு.

**தொடர்புகளுக்கு:-**
**075 247 7696**
(6031) **077 132 8143**




### Vacancy for the post of Secretary Assistants
### EUROPA BILDUNGS FORUM in Jaffna seeks Secretary Assistants

**Qualifications:**
- Minimum three passes in the G.C.E. (A/L)
- A Credit pass in the G.C.E.(O/L) English Language
- Should have ability to prepare documents in Tamil and English
- Computer Literacy

**Experience:** Atleast three years experience of Computer programming

**Age limit:** 25-45

**Salary:** Negotiable

**Important Notice:** All applicants are requested to prepare their applications and send to the e-mail Address of the Forum before 15.04.2014 (europa2014bf@gmail.com).Suitable Candidates will be Selected after the interview.

Ability to prepare documents in sinhala will be an added qualification. The selected candidate may be requested to join the Forum in Colombo, if neecessary.

President
EUROPA BILDUNGS FORUM

(6033)

### கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: பூராடம் 1<br>கி.பா: 9.5 செவ் 2 இல்<br>உயரம்: 169 cm<br>தகைமை/தொழில்: A/L / Chef (அவுஸ்திரேலியா PR)<br>தொ.இ: B/1163 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 1<br>கி.பா: 27<br>உயரம்: 4'8"<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/1731 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் 4<br>கி.பா: 17.5<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: BSc / Tesco நிரந்தர வேலை (UK – PR)<br>தொ.இ: B/1169 | பிறப்பு: 1974 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 2<br>கி.பா: 38.25 சூரி செவ் 2 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: கல்வியியற் கல்லூரி ஆசிரியர்<br>தொ.இ: G/1734 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 2<br>கி.பா: 18 செவ் 1 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L / கணக்காளர் (டுபாய்)<br>தொ.இ: B/1171 | பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: பரணி 3<br>கி.பா: 56 சூரி செவ் 1 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: A/L / தையல்<br>தொ.இ: G/1735 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 1<br>கி.பா: 7.5<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: O/L / சொந்த நகைத் தொழில் (ஜேர்மனி)<br>தொ.இ: B/1173 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரழ்: மகம் 4<br>கி.பா: 63 செவ் 1 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/1740 |

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்பள்ளிகளில் இராணுவ தலையீடு; ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது

## வடக்கு மாகாண கல்வி அமைச்சர் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

**மாகாண சபை நிர்வாகம் உள்ளபோது முன்பள்ளிகளை இராணுவத்தினர் நடத்துவதை ஏற்றுக்கொள்ள முடியாது. இவ்விடயம் எனது அமைச்சின் கவனத்திற்கு உட்படுத்தப்பட்டு சீர்படுத்தப்படுமென வடமாகாண கல்வியமைச்சர் த. குருகுலராஜா தெரிவித்துள்ளார்.**

கிளிநொச்சி கனகபுரம் புனித யூதா முன்பள்ளியின் விளையாட்டுப் போட்டி நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இராணுவக்கெடுபிடிகளும் வறுமையும் தொழிலின்மையும் இன்று எம்மைச்சூழ்ந்து ஆட்டிப்படைக்கின்றன.

இச்சூழ்நிலையில் எமது பிள்ளைகளை கரிசனையுடன் நடத்தி அவர்களின்எதிர்காலம் தொடர்பில் மிகுந்த அக்கறை செலுத்த வேண்டும்.

தற்போது எம்மைநோக்கி தீட்டப்படுகின்ற திட்டங்களும் எண்ணங்களும் ஆரோக்கியமானதல்ல.

வடமாகாணசபைநிர்வாகம்உள்ளபோதிலும் முன்பள்ளிகளை இராணுவமே நடத்தி வருகின்றது.

இந்நிலையில் முன்பள்ளிகளில் என்ன நடக்கின்றது என்ற குழப்பமான சூழ்நிலை உருவாகியுள் ளது.

மாகாண சபையின் ஆளுங் கட்சியை சேர்ந்தவர்கள் விருந்தினர்களாக கலந்துகொள்ளும் நிகழ்வுகளையும் இராணுவ நிர்வாகத்தின் கீழ் இயங்காத ஆசிரியர்களால் நடத்தப்படுகின்ற நிகழ்வுகளையும் இராணுவத்தினரால் சட்டவரையறையின்றி நிர்ப்பந்திக்கப்படும் முன்பள்ளி ஆசிரியர்களை தவிர்ப்பதை நான் பல இடங்களில் அவதானித்துள்ளேன்.

ஆகவே, இவ்விடயம் எனது அமைச்சின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டு முன்பள்ளிகள் மாகாண சபையின் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டு அதற்கான செம்மையான திட்டங்கள் வரையப்படவுள்ளன.

எமது தனிப்பட்ட சுய விருப்புக்களை சமூகத்தின்மீதும் முன்பள்ளிகளின் மீதும் திணிப்பதும் அச்சுறுத்துவதும் நிறுத்தப்பட வேண்டும்.



கல்வி நிர்வாகமே எம் சமூகத்தின் ஆணிவேராகவுள்ளது. இதன் மீதான அழுத்தங்களுக்கு துணைபோவது எம் பிள்ளைகளின் எதிர்காலத்தை புதைகுழியில் விழுத்தும் செயல் என்பதை சமூகம் உணர வேண்டும் என்றார். (2-9)




# விசுவமடுக்குளம் உபதபால் அலுவலகத்திற்கான அஞ்சல் சேவைகளை புதுக்குடியிருப்பு தபாலகத்தின் ஊடாக செயற்படுத்துங்கள்

(கண்டாவளை)

விசுமடுக்குளம் உப தபால் அலுவகத்திற்கான அஞ்சல் சேவைகளை புதுக்குடியிருப்பு தபாலகத்தின் ஊடாக செயற்படுத்துமாறு கோரி, விசுவமடுவிலுள்ள வெகுஜன அமைப்புக்களினால், கொழும்பு அஞ்சல் தலைமையக அஞ்சல்மா அதிபருக்கு மகஜர் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

விசுவமடுக்குளம் உப தபால் அலுவலகத்தின், அஞ்சல் அலுவலக விநியோகப்பிரிவுகளுக்குள் சுமார் நான்காயிரம் குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர்.

இவர்களுக்கான கடிதங்கள், அஞ்சல் பொருட்கள், அஞ்சல் சேவைகள் யாவும் 36 கிலோ மீற்றர் தூரத்திற்கு அப்பாலுள்ள முல்லைத்தீவு தபாலகம் ஊடாகவே நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

எனினும், இவற்றை 16 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள புதுக்குடியிருப்பு தபாலகத்தினூடாக செயற்படுத்துவதன் மூலம் தபால் சேவையை விரைவாகப் பெற்றுக் கொள்வதுடன், தேவைகளையும் நிறைவாக பெற்றுக் கொள்ள முடியும்.

எனவே, விசுவமடுக்குளம் உப தபாலகத்தை புதுக்குடியிருப்பு தபாலகத்துடன் நிர்வாக இணைப்பை ஏற்படுத்தி மக்களுக்கு நிறைவான சேவையை மேற்கொள்ள ஆவன செய்யுமாறு அவ்வமைப்பு கேட்டுள்ளது. (2-9-263)

# புதிய நிர்வாகத் தெரிவு

(பூநகரி)

பூநகரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் இவ்வாண்டிற்கான பதிய நிர்வாகத் தெரிவு கடந்த வாரம் இடம்பெற்றுள்ளது.

இதன்படி தலைவராக செ.சுதாஸ்கரன், உபதலைவராக அன்ரன் தர்மலிங்கம் நிக்ஷன், செயலாளராக பு.வரதராஜா, நிர்வாக உறுப்பினர்களாக தெ.வசீகரன், தி.தினேஷ், சி.நாகராசா, க.கேதீஸ்வரன், வ.சாந்தகுமார் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இக்கூட்டத்தில் புத்துச்சங்கக்கிளைகளைச்சேர்ந்த 56 பேர் கலந்து கொண்டனர். (2-9-84)

# மாணவனின் முன்மாதிரி

(மல்லாவி)

மு/ஒலுமடு தமிழ் வித்தியாலயத்தில் தரம் 5 இல் கல்வி பயிலும் மாணவனொருவன் வீதியில் கண்டெடுத்த ஒரு பவுண் பெறுமதியான தங்கத் தாயத்தைத் தொலைத்தவரை தேடிச்சென்று ஒப்படைத்த சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

மேற்குறித்த பாடசாலையில் கல்விபயிலும் விக்னேஸ்வரன் திருவரங்கன் என்ற மாணவன் பாடசாலை செல்லும் போது, வீதியில் தங்கத்தினாலான தாயத்தை கண்டெடுத்துள்ளான்.

குறித்த தாயத்தில் பொறிக்கப்பட்டிருந்த பெயரை வைத்து அதனை மாங்குளம் ஒலுமடு கிராமத்தை சேர்ந்தவரிடம் ஒப்படைத்துள்ளான்.

இவரது நேர்மையான செயலை பாடசாலை சமூகமும் பெற்றோர்களும் பாராட்டி பரிசில்களை வழங்கியுள்ளனர்.

இச்செயற்பாடு ஏனைய மாணவர்களுக்கு முன்னுதாரணமாக அமைந்துள்ளதென பாடசாலை அதிபர் எஸ்.சர்வேஸ்வரன் தெரிவித்து ள்ளார். (2-9-15)

# அதிபர் பதவி வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளிலுள்ள அதிபர் பதவி வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார்.

இதற்கமைய ஒட்டுசுட்டான் கோட்டத்தின் கீழுள்ள மு/ சண்முகரட்ணம் வித்தியாசாலை, மு/ பேராறு தமிழ் வித்தியாலயம், மு/அம்பகாமம் அ.த.க. பாடசாலை, மு/காதலியார் சமளங்குளம் அ.த.க. பாடசாலை, துணுக்காய் கோட்டத்தின் கீழுள்ள மு/ஆலங்குளம் அ.த.க.பாடசாலை, மு/ஆரோக்கியபுரம் தமிழ் வித்தியாலயம், மாந்தை கிழக்கு கோட்டத்தின் கீழுள்ள மு/குமாரசாமி வித்தியாலயம், மு/பாண்டியன்குளம் ஆரம்பப் பாடசாலை ஆகிய தரம்III வகையைச் சேர்ந்த பாடசாலைகளிலே வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

விண்ணப்பதாரிகளின் தகைமைகளாக ஆகக் குறைந்தது 3 வருடங்கள் சேவையாற்றக் கூடிய வயதெல்லை, இலங்கை ஆசிரியர் சேவை I அல்லது இலங்கை ஆசிரியர் சேவை 2-I ஐ சேர்ந்தவராக இருத்தல் வேண்டும்.

இலங்கை ஆசிரியர் சேவை I அல்லது இலங்கை ஆசிரியர் சேவை 2-I ஐச் சேர்ந்தவர்களின் விண்ணப்பங்கள் கிடைக்காத பட்சத்தில் மட்டுமே இலங்கை ஆசிரியர் சேவை 2-II ஐச் சேர்ந்தவர்களின் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

அத்தோடு விண்ணப்பதாரி மிகக் கஷ்ட அல்லது கஷ்ட பிரதேசத்தில் கடமையாற்றியிருப்பதுடன் கல்வித் தகைமையாக க.பொ.த. உயர் தரம் தொடக்கம் கல்வி முதுமாணி வரையும் தொழிற்றகைமையாக பயிற்றப்பட்ட ஆசிரியர் பட்டப்பின் கல்வி டிப்ளோமா, கல்வி முதுமாணி ஆகியவற்றில் ஏதாவது ஒன்றை கொண்டிருக்கவேண்டும்.

தகுதியுடையவர்கள் விண்ணப்பங்களை வலயக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்வி அலுவலகம், துணுக்காய் மாங்குளம் எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவேண்டும். (2-9-15)

# சித்திரை புத்தாண்டு முற்பணம் வழங்குவதில் காலதாமதம்

## கல்விச் சமூகம் கவலை

(மல்லாவி)

வடக்கு மாகாண கல்வி வலயங்களின் கீழுள்ள பாடசாலைகளில் கடமையாற்றும் அதிபர், ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்களுக்காக வழங்கப்படும் சித்திரைப்புத்தாண்டு விழா முற்பணத்திற்கு விண்ணப்பித்தும் இதுவரை முற்பணம் வழங்கப்படவில்லையென கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச்சேர்ந்த கல்விச் சமூகத்தினர் கவலை வெளியிட்டுள்ளனர்.

அரசாங்கத்தினால் வருடாந்தம் மார்ச் மாதம் சித்திரை வருடப்பிறப்பை முன்னிட்டு அனைத்து அரச உத்தியோகத்தர்களுக்கும் 5 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்பட்டு பின்னர் அவர்களது மாதாந்த வேதனத்திலிருந்து500 ரூபா வீதம் அறவிடப்படுவது வழமை.

ஆயினும் இம்முறை வடக்கு மாகாண கல்வியமைச்சின் கீழுள்ள அதிபர்கள், ஆசிரியர்கள், அலுவலர்கள் ஆகியோருக்கான சித்திரைப்புத்தாண்டு விழாவுக்கான முற்பணம் மார்ச்மாதம் முடிவடைந்துள்ள போதிலும் இதுவரை வழங்கப்படவில்லை.

எதிர்வரும்8 ஆம் திகதி முதலாம் தவணை விடுமுறைக்காக பாடசாலைகள் மூடப்படவுள்ளதுடன் அன்றையதினம் ஏப்ரல் மாதத்திற்கான வேதனம் வழங்கப்படவுள்ளது.

எனவே , வழங்கப்படவுள்ள சித்திரை மாத வேதனத்தோடு விழா முற்பணத்தை வழங்க நடவடிக்கை மேற்கொண்டு உதவவேண்டுமென பாதிக்கப்பட்டவர்கள் துறைசார்ந்தவர்களிடம் கோரிக்கையொன்றை முன்வைத்துள்ளனர். (2-9-15)



வடமாகாணத்தில் முகக்குறைபாடுகளுடன் பிறக்கும் குழந்தைகளை முகாமை செய்வது தொடர்பான கருத் தரங்கொன்று வவுனியா பொது வைத்தியசாலையில் அண்மையில் இடம்பெற்றது. வடமாகாண சுகாதார அமைச்சர் வைத்தியகலாநிதி ப.சத்தியலிங்கம் உட்பட வைத்திய அதிகாரிகளையும் கலந்து கொண்ட மருத்துவமாதுக்கள் மற்றும் வைத்தியர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-பூந்தோட்டச்செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழ் பெண்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளே ஐக்கிய நாடுகளில் தீர்மானமாக நிறைவேறியது

## சர்வதேச மன்னிப்புச் சபை சுட்டிக்காட்டு

**(கொழும்பு)**

**இலங்கையில் தமிழ்ப் பெண்களுக்கு ஏற்பட்ட வன்முறைகள் மற்றும் இழைக்கப்பட்ட அநீதிகள் என்பனவே ஐ.நா. மனித உரிமைகள் பேரவை கூட்டத்தொடரில் விசாரணை தொடர்பாக தீர்மானம் நிறைவேற்றப்படக் காரணமாக அமைந்தன என்று சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.**

இலங்கையில் தமிழ்ப் பெண்களுக்கு ஏற்பட்ட வன்முறைகள் தொடர்பாக நியூயோர்க்கைத் தளமாகக் கொண்டியங்கும் மனிதவுரிமை கண்காணிப்பகம், பிரித்தானியாவைத் தளமாகக் கொண்டியங்கும் சிறுபான்மையினரின் உரிமை பேண் அமைப்பு மற்றும் ஐ.நாவின் இலங்கை விசாரணைக்கான விசேட பிரதிநிதி ஜஸ்மின் சூகா ஆகியோர் தங்களது அறிக்கையில் விரிவாகத் தெரிவித்திருந்தனர் என சர்வதேச மன்னிப்புச்சபையின் கனடாக் கிளை சார்பாக பேசவல்ல ஜோன் ஆர்கியு தெரிவித்துள்ளார்.

கனேடிய மனிதவுரிமை மையத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற பெண்கள் தினக் கருத்தரங்கில் மேற்படி கருத்தைத் தெரிவித்த சர்வதேச மன்னிப்புச் சபையைச் சேர்ந்த ஜோன் ஆர்கியு தொடர்ந்து கூறுகையில்,

இலங்கையில் தமிழ் பெண்கள் மாத்திரமல்ல அனைத்து இனப் பெண்களுக்கும் எதிரான வன்முறைகள் நிறுத்தப்பட வேண்டும் எனவும், சர்வதேசம் இந்த விவகாரத்தை முன்னிலைப்படுத்த வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

கனேடியத் தேசிய நீரோட்டத்தின் இணைவாக பல்லின மக்களையும் ஒன்றிணைத்த நிகழ்வாக கனேடிய மனிதவுரிமை மையம், ஒன்ராறியோ சட்டசபையில் நடத்திய பெண்கள் தின கருத்தரங்கு நிகழ்வு இடம்பெற்றது.

நிகழ்வில் கலந்து கொண்ட அனைவரும் இலங்கையில் தமிழ்ப் பெண்களுக்கு இடம்பெற்ற, இப்போதும் இடம்பெற்று வரும் மனிதவுரிமை மீறல்கள் குறித்து அக்கறையோடு அறிந்து கொண்டனர்.

தமிழ்ப் பெண்கள் விவகாரத்தை இன்னொருபடி மேலாக கொண்டு சென்ற இந் நிகழ்வில் இலங்கையில் தமிழ்ப் பெண்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் மற்றும் ஈரான் ,ஆப்கான் பெண்கள அனுபவிக்கும் கொடுமைகள் என்பன தொடர்பான துறைசார் வல்லுனர்களின் கருத்துப் பகிர்வும் இடம்பெற்றது.

சட்டசபை அமர்வு இடம்பெற்ற நேரத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றதால் பல ஒன்றாரியோ சட்டமன்ற உறுப்பினர்களும் வருகை தந்து நிகழ்வில் சிறிதுநேரம் கலந்து கொண்டதுடன், தங்களது ஆக்கபூர்வமான கருத்துக்களையும் கனேடிய மனிதவுரிமை மையத்துடன் பகிர்ந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் ஈரானில் பெணகள் அனுபவிக்கும் கொடுமைகள் மற்றும் தலிபான்களால் ஆப்கானித்தான் மற்றும் பாகிஸ்தானில் பெண்கள் படும் இடர்கள், மதத்தை முன்னலைப்படுத்தும் சட்டங்கள் போனற விபரங்கள் விரிவாகக் கலந்துரையாடப்பட்டன.

ஈழத்தமிழர்களின் துயர்களுக்கான குரலாக ஆரம்பிக்கப்பட்ட கனேடிய மனிதவுரிமை மையம், இன்று கனேடிய அரசுடனும் ஏனைய கட்சிகளுடன் ஒரு நெருக்கமான தொடர்பை பேணி வருவதோடு, தமிழர்களின் துன்பங்களை, அவர்களுக்கான நீதிக்கான நியாயங்களை இராஜதந்திர அரங்கிற்கு எடுத்துச் செல்லும் நிகழ்வுகளின் வரிசையில் இந் நிகழ்வும் இடம் பெற்றது குறிப்பிடத்தக்கது. (2)

## ஐ.தே.கட்சி ஆதரவாளர்கள் 15 பேர் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

பேருவளை கங்கானங்கொட பிரதேசத்தில் இடம்பெற்ற மோதல் சம்பவத்துடன் தொடர்புடையவர்களென்ற குற்றச்சாட்டின் பேரில் ஐக்கிய தேசிய கட்சி ஆதரவாளர்கள் 15 பேரை பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்திருப்பதாக பொலிஸ் பேச்சாளர், அத்தியட்சகர் அஜித் ரோஹன கூறியுள்ளார்.

இதே வேளை, சம்பவத்திற்கு பயன்படுத் தப்பட்ட 30 மோட்டார் சைக்கிள்க ளும் பொலிஸாரினால் கைப்பற்றப் பட்டுள்ளன.


சந்தேக நபர்களுள் மூவர் பாடசாலை மாணவர்களாவர். இவர்களை பயாகலை பம்பே சிறுவர் இல்லத்தில் தடுத்து வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

பொலிஸாரும் விசேட அதிரடிப் படையினரும் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டதைத் தொடர்ந்து அப்பகுதியில் நிலவிய பதற்ற நிலை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டிருப்பதாகவும் பொலிஸ் பேச்சாளர் தெரிவித்தார்.

தேர்தல் நடைபெற்ற தினத்தன்று கங்கானங்கொட பிரதேசத்தில் ஆளும் கட்சியினருக்கும் ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்களுக்குமிடையில் மோதல் இடம்பெற்றது.

மோதலில் படுகாயம்டைந்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஆதரவாளர்கள் மூவர் உள்ளிட்ட நால்வர் சிகிச்சைகளுக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதுடன் சம்பவத்தில் இரண்டு வாகனங்களும் முற்றாக சேதமாக்கப்பட்டுள்ளன.

இதனைத் தொடர்ந்து அப்பகுதியெங்கும் பெரும் பதற்றம் நிலவியமை குறிப்பிடத்தக்கது. (2)



வடமாகாண சபையின் ஆளும் கட்சி உறுப்பினர் பா.கஜதீபனின் ஒழுங்குபடுத்தலில் புலம்பெயர் நாட்டில் வசிக்கும் புங்குடுதீவைச் சேர்ந்த சகோதரி ஒருவரின் 50 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு அவரின் நிதியுதவியில் தீவகம், ஊர்காவற்றுறையில் அமைந்துள்ள மெலிஞ்சிமுனை முன்பள்ளிக்கு 25 ஆயிரம் ரூபா பெறுமதியான கற்றல் மற்றும் சிறுவர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் முன்பள்ளியில் மெலிஞ்சிமுனை பங்குத்தந்தை வணபிதா மரியதாஸ் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் பொருட்களை கையளிப்பதையும் அதில் கலந்து கொண்ட சாவகச்சேரி நகர சபை உறுப்பினர் ஞா. கிஷோர் மற்றும் கட்சியின் தீவகச் செயற்பாட்டாளர் ஜெயபாலன் ஆகியோர் கலந்து கொண்டதையும் படத்தில் காணலாம். (படம்: எஸ்.ஆர்.கரன்)

## தேர்தல் வெற்றி கொண்டாட்டங்களுக்கு பிரதிப் பொலிஸ்மா அதிபர் தடைவிதிப்பு

(கொழும்பு)

மேல் மற்றும் தென் மாகாண சபைத் தேர்தல்கள் முடிவடைந்துள்ள நிலையில் வெற்றிக்களிப்பினை கொண்டாடும் வகையிலான ஊர்வலங்கள் மற்றும் அரசியல் கூட்டங்களை நடத்துவதற்கு எதிர்வரும் 5 ஆம திகதி வரையில் தடை விதிககப்பட்டிருப்பதாக தேர்தல்களுக்குப் பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபர் காமினி நவரட்ன தெரிவித்துள்ளார்.

இதனையும் மீறி ஊர்வலங்கள் மற்றும் அரசியல் கூட்டம் நடத்துவோர் கைதுசெய்யப்படுவரெனவும் அவர் கூறினார்.

இதேவேளை, தொடர்ந்தும் சட்டத்தையும், ஒழுங்கையும் பாதுகாக்கும் வகையில் அனைத்து தரப்பினரும் பொலிஸாருக்கு பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டுமெனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண வேட்பாளர்கள், ஆதரவாளர்கள் மற்றும் பொதுமக்களை கேட்டுக்கொண்டுள்ளார்.

மாகாண சபைத் தேர்தல் முடிவுகள் வெளிவந்துள்ள நிலையில் எந்தவித பாரிய வன்முறை சம்பவங்கள் குறித்தும் முறைப்பாடுகள் கிடைக்கவில்லை.

தேர்தல் முடிவுற்ற போதும் வாகனங்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் மூலம் பொலிஸார் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். பாதுகாப்பு நடவடிக்கைகள் வேட்பாளர்கள் கட்சி ஆதரவாளர்கள் மற்றும் பொதுமக்களின் ஒத்துழைப்பினை பொலிஸார் எதிர்பார்க்கின்றனர். தொடர்ந்தும் சடடத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட இது உறுதுணையாக அமையும்.

தன்னிச்சையாக வாகனப் பேரணி ஊர்வலங்களை நடத்துதல் மற்றும் குழுக்களாக தரிந்து நிற்றல் ஆகியவற்றைத் தவிர்த்துக்கொள்வது சிறந்தது.

பொது இடங்களில் குழுக்களாகக் கூடி அமைதிக்குப் பங்கம் விள்ளவிக்காத வகையில் தேர்தல் சட்டங்களை மதித்து செயற்படுவது அவசியமாகும்.

சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாப்பதற்கு அனைத்துத் தரப்பினரும் தமது பூரண ஒத்துழைப்பை வழங்குமாறும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார். (2)

## பலநோக்கு கூ.சங்கத்தின் இயக்குநர் சபைத் தெரிவு

(பொற்பதி)

வடமராட்சி கிழக்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் இயக்குநர் சபைத் தெரிவு கடந்த 23 ஆம் திகதி பலநோக்கு கூட்டுறவுச் சங்க தலைமைக் காரியாலய கேட்போர் கூடத்தில் வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச செயலர் ந.திருலிங்கநாதன் தலைமையில் இடம்பெற்றது.

மேற்படி இயக்குநர் சபை வடமராட்சி கிழக்கின் பொது அமைப்புக்கள் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க கடந்த 2003 ஆம் ஆண்டு இடம்பெற்ற பல நோக்கு கூட்டுறவுச் சங்க பொதுத் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்டது.

தற்போது இதன் புதிய தலைவராக உடுத்துறையைச் சேர்ந்த எம்.தங்கவேலு, உப தலைவராக மருதங்கேணி தெற்கைச் சேர்ந்த எஸ். திரவியநாதன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

உறுப்பினர்களாக ரி. காண்டீபன், எஸ். சிறிஹாலதன், எம். வசந்தகுமார், எஸ். கலாநந்தன், எஸ். இரத்தினசிங்கம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிகழ்வில் யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் பொ. மோகன், பிராந்திய கூட்டுறவு அபிவிருத்தி உத்தி யோகத்தர் எஸ். சிறிதரன் ஆகியோரும் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (2-64)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

764

# உப்பைப் போன்ற பாசம்!

...அதற்குள் அரண்மனையில் ராணியின் அட்டிகை காணாமற்போனதால் ஒரே பரபரப்பு ஏற்பட்டது. அட்டிகையைக் கண்டு பிடிப்பவர்களுக்கு, அவர்கள் விரும்புவது எதுவானாலும் தரப்படும் என்று ராஜா தண்டோராப் போடச் செய்தார்.

அடுத்தநாள் காலை, விறகு வெட்டி தன் வேலைக்குக் போகும்போது, தன் குடிசையின் கூரையில் ஏதோ பளபளவென மின்னுவதைக் கண்டு தன் மனைவியான இளவரசியை அழைத்தான். வெளியே ஓடி வந்த அவள கூரையின் மேல் விழுந்திருந்த வைர அட்டிகையைக் கண்டு திகைத்துப் போனாள. அதை விறகு வெட்டி கூரையிலிருந்து எடுத்து அவள் கையில் தர, "அடடே! இது என் தாயின் அட்டிகை அல்லவா? இது எப்படி இங்கே வந்தது?" என்று ஆச்சரியத்துடன் குழம்பியவள், "என்னுடைய தந்தை என்னைப் புரிந்து கொள்ளும் காலம் இத்தனை சீக்கிரம்வரும் என்று நான் நினைக்கவில்லை" என்றாள.

அப்போது தூரத்தில் அரண்மனை ஆள் ஒருவன் தண்டோராப் போட்டு வைர அட்டிகையைப் பற்றி அறிவிப்பது கேட்டது. அதைக் கேட்டதும் இளவரசியின் முகம் மலர்ந்தது. அவள் தன் கணவனை நோக்கி, "அரண் மனைக்குச்சென்று என் தந்தையை சந்தித்து இந்த அட்டிகையைக் கொடுங்கள். நீங்கள் யாரென்று அவருக்குத் தெரியாமல் மாறு வேடத்தில் செல்லுங்கள். அவரிடம் பரிசு எதையும் கேட்காதீர்கள். நாளைக்கு நம் வீட்டில் விருந்துண்ண வருமாறு அழைபுங்கள். அதுவே போதும்" என்றாள்.

அதன்படியே, விறகு வெட்டி அரண்மனையை அடைந்து, ராஜாவை சந்தித்து அட்டிகையைக் கொடுத்தான். "மகாராஜா! பாக்கியவசமாக, மகாராணியின் அட்டிகையைக் கண்டு பிடித்தேன். இதைப் பெற்றுக் கொள்ளுங்கள்!" என்று சொன்னதும், ராஜா அதைக் கையில் வாங்கிப் பரிசோதித்தார். அது ராணியின் நகைதான் என்று தெரிந்ததும் மிக்க மகிழ்ச்சியுடன், "நீ யார்? உனக்கு என்ன பரிசு வேண்டும்? நான் முன்னமே அறிவித்தபடி நீ எது கேட்டாலும் அதைப் பெறலாம்" என்றார். "மகாராஜா! நான ஒரு ஏழை விறகு வெட்டி! ஆனால் உங்களிடமிருந்து பரிசு எதையும் நான் விரும்பவில்லை. ஆனால் நீங்கள் நாளைக்குத் தனியாக என் குடிசைக்கு வருகை தந்து விருந்துண்ண வேண்டும்" என்று வேண்டினான்.

அதைக் கேட்ட ராஜா தர்மசங்கடத்திற்கு உள்ளானார். ஆனாலும் தான முன்னமே அறிவித்தபடி அவன் வேண்டுகோளை மறுக்க முடியவில்லை. மறுநாள் ராஜா மட்டும் விறகு வெட்டியின் குடிசைக்குச் சென்றார். இளவரசி தன் முகத்தை ஒரு திரையினால் மறைத்துக் கொண்டு ராஜா முன் வந்து அவரை வணங்கினாள். ராஜாவினால் தன் பெண்ணை அடையாளம் கண்டு பிடிக்க முடியவில்லை. பின்னர் ராஜா விருந்துண்ண அமர்ந்தார். அவருக்கு இளவரசி இனிப்புப் பண்டங்களாகப் பரிமாறினாள்.


அவற்றை அவர் உண்டபிறகு, மீண்டும் இனிப்புகளையே பரிமாற, அவருக்குத் திகட்டி விட்டது. "எனக்கு இனி மேல் இனிப்பு வேண்டாம்! உப்புள்ள பண்டங்களை உண்ண என் நாக்கு துடிக்கிறது. அவற்றில் ஏதாவது இருந்தால் கொண்டுவா!" என்றார் ராஜா! உடனே உப்பே இல்லாத உணவை அவர்முன் வைத்தாள். அதை உண்ட அவர், முகம் சுளித்து தட்டைத் தள்ளிவிட்டார்.

இதற்காகவே காத்திருந்த இளவரசி, அவர் முன் வந்து நின்று தன் முகத்திரையை அகற்றி, "அப்பா! அன்று ஒருநாள் உங்களை உப்பைப் போல் நேசிக்கிறேன் என்று சொன்னதற்காக என் மேல் கோபம் கொண்டீர்கள்.

இப்போதாவது இனிப்பை எப்போதும் உண்ண முடியாது என்பதையும், உப்பில்லாப் பண்டம் குப்பையிலே என்பதையும் புரிந்து கொண்டீர்களா?" என்றாள்.

ராஜா தன் தவறை உணர்ந்தார். இளவரசியை நோக்கி, "மகளே! உப்பின் அருமையை இன்று புரிந்து கொண்டேன். நீதான் அனைவரையும்விட என்மீது பாசம் உள்ளவள் என்பதைப் புரிந்து கொண்டேன். நான் சொனனேன் என்பதற்காக வசதியைப் பற்றி கவலைப்படாமல் ஒரு ஏழையை மணந்து வறுமையில் வாடுகிறாய். என்னை மன்னித்து விடு!" என்று கூறி கண்ணீர் வடித்தார்.

தன் பெண்ணின் பாசத்தை சரியாக உணர்ந்த ராஜா, அவள் கணவனுக்கு தன் ராஜ்யத்தின் ஒரு பகுதியை அளித்து ஆட்சி புரியச் செய்து, அவனையும் மன்னனாக்கி அழகு பார்த்தார். (முற்றும்)





## 01 04.2014 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1793 - ஜப்பானில் உன்சென் எரிமலை வெடித்ததை அடுத்து நிகழ்ந்த நிலநடுக்கத்தில் 53,ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர்.
- 1826 - சாமுவேல் மோரி உள் எரி பொறிக்கான காப்புரிமம் பெற்றார்.
- 1867 - சிங்கப்பூர் பிரித்தானிய குடியேற்ற நாடாகியது.
- 1891 - சிக்காக்கோவில் றிக்லி நிறுவனம் (Wrigley Company) ஆரம்பிக்கப்பட்டது.
- 1924 - அடொல்ஃப் ஹிட்லர் ஐந்தாண்டுகள் சிறைத் தண்டனை பெற்றார். ஆனாலும் அவர் 9 மாதங்களில் விடுதலை பெற்றார்.
- 1935 - இந்திய ரிசர்வ் வங்கி ஆரம்பிக்கப்பட்டது.
- 1937 - ஜேர்மனின் ஏடென் பிரித்தானிய குடியேற்ற நாடாகியது.
- 1939 -ஸ்பானிய உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்தது.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: ஐக்கிய அமெரிக்காவின் படைகள் ஜப்பானின் ஒக்கிநாவா தீவுகளில் இறங்கின.
- 1946 - மலாய் கூட்டமைப்பு உருவானது.
- 1948 - பரோ தீவுகள் டென்மார்க்கில் இருந்து தன்னாட்சி பெற்றது.
- 1949 - சீனக் கம்யூனிஸ்ட் கட்சியுடன் -சீனத் தேசியக் கட்சியுடன் பெய்ஜிங்கில் நடத்திய பேச்சுக்கள் தோல்வியில் முடிந்தன.
- 1957 - இந்தியாவில் நயா பைசா நாணயம் அறிமுகப்படுத்தப்பட்டது.
- 1973 - புலிகளைக் காப்பதற்கான செயற்றிட்டம் இந்தியாவின் ஜிம் கார்பெட் தேசியப் பூங்காவில் தொடங்கப்பட்டது.
- 1976 - ஆப்பிள் கணினி ஸ்டீவ் ஜொப்ஸ், Steve Wozniak ஆகியோரால் தொடங்கப்பட்டது.
- 1979 - ஈரான் 98% மக்கள் ஆதரவுடன் ஓர் இஸ்லாமியக் குடியரசாகியது.
- 1981 - சோவியத் ஒன்றியத்தில் பகலொளி சேமிப்பு நேரம் முதற்தடவையாக அறிமுகப்படுத்தப்பட்டது.
- 1997 - ஹேல்-பொப் வால்வெள்ளி பூமியின் சுற்றுப் பாதை வீச்சைக் கடந்தது.
- 2001 - யூகொஸ்லாவியாவின் முன்னாள் ஜனாதிபதி சுலோபதான் மிலோசெவிச் போர்க்குற்றங்களுக்காக காவற்றுறையினரிடம் சரணடைந்தார்.
- 2001 - நெதர்லாந்து சமப்பால் திருமணத்தை சட்டபூர்வமாக்கிய முதலாவது நாடானது.
- 2004 - கூகிள் 1000 மெகாபைட் கொள்ளளவுள்ள தான ஜிமெயில் என்ற இலவச மின்னஞ்சல் சேவையை அறிமுகப்படுத்தியது.

### பிறப்புகள்

- 1815 - ஒட்டோ ஃபொன் பிஸ்மார்க், ஜேர்மனிய அரசியலாளர் (இ. 1898)
- 1865 - ரிச்சார்ட் சிக்மோண்டி, நோபல் பரிசு பெற்றவர் (இ. 1929)
- 1875 - எட்கார் வாலஸ், ஆங்கில எழுத்தாளர் (இ. 1932)
- 1878 - சி. கணேசையர், ஈழத்துத் தமிழறிஞர் (இ. 1958)
- 1919 - ஜோசப் மறி, நோபல் பரிசு பெற்றவர்
- 1929 - டி. கே. கோவிந்த ராவ் கர்நாடக இசைக் கலைஞர் (இ. 2011)
- 1933 - குளோட் கொஹென்-டனூட்ஜி, நோபல் பரிசு பெற்றவர்
- 1940 - வங்காரி மாதாய், அமைதிக்கான நோபல் பரிசு பெற்றவர்

### இறப்புகள்

- 1960 - துங்கு அப்துல் ரகுமான், மலேசியாவின் மன்னர் (பி. 1895)
- 1968 - லேவ் லண்டாவு, நோபல் பரிசு பெற்ற ரஷ்ய இயற்பியலாளர் (பி. 1908)
- 1976 - மக்ஸ் ஏர்ண்ஸ்ட், ஜேர்மனிய ஓவியர் (பி. 1891)
- 2007 - தி. வே. கோபாலையர், தமிழறிஞர் (பி. 1926)

### சிறப்பு நாள்

முட்டாள்கள் தினம்

### முட்டாள்கள் தினம்





இன்று ஏப்ரல் 1- உலகம் முழுக்க முட்டாள்களின் தினமாகக் கொணடாடப்படுகிறது.

இந்நாள் பெரியளவிலாகக் கொண்டாடப்படுவதில்லை என்றாலும், நண்பர்கள், குடும்பத்தினர் என தெரிந்த நபர்களிடம் வேடிக்கை செய்வதும் அவர்களை முட்டாளாக்கி மகிழ்வதிலும் பெரும்பாலான மக்கள் ஈடுபடுகிறார்கள்.

இன்று காலையிலேயே உங்களை ஏதாவது சொல்லி ஏமாற்றப் பார்ப்பார்கள். சிலர் சொல்லும் தகவல்கள் 100 சதவீதம் அப்படியே உண்மை தான் என்று நம்பும்படி இருக்கும். எனவே நம்பி, ஏமாந்து விடாதீர்கள். கொஞ்சம் உஷாராக இருங்கள். ஆனால், சில நேரங்களில் ஏப்ரல் 1 அன்று காமெடி என்ற பெயரில் சிலர் செய்வது மோசமான விளைவுகளை ஏற்படுத்துகின்றன.

பிரான்ஸ் பேரரசர் நெப்போலியன் போனபார்ட், ஆஸ்திரியாவைச் சேர்ந்த மேரி லூயிஸை 1810 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1 ஆம் திகதி அதாவது இன்றைய தினம் திருமணம் செய்துகொண்டார். இந்நாள் முட்டாள் தினம் என்பதால் மணமகளை எல்லோரும் கேலி செய்தனராம். 'நெப்போலியன் உண்மையாகத் திருமணம் செய்யவில்லை. உன்னை முட்டாளாக்கவே திருமணம் செய்திருக்கிறார்' என்று எள்ளி நகையாடியதாகக் கூறப்படுகிறது..

வரலாற்றில் பல நல்ல விஷயங்களின் துவக்க நாளாக இருந்ததும் இதே ஏப்ரல் 1 தான் என்பதை மறக்கக்கூடாது. காரணம் 1935 ஏப்ரல் 1ஆம் தேதி இந்திய ரிசர்வ் வங்கி தொடங்கப்பட்டது. 2004 இல் கூகுளின் மெயில் சேவை தொடங்கப்பட்டது என நல்ல விஷயங்களின் தொடக்கம் நாள் ஏப்ரல்-1 தான் என்பது நினைவிருக்கலாம். இன்னொன்று வசந்த காலத்தின் வருகையை அறிவிக்கும் நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதுரகிரி சித்தர்கள்

....மலை உச்சியில் வீசிய காற்றில் அக்கொடி அசைந்து, சீக்கிரம் வாருங்கள் என்று அழைப்பது போலப் பறந்து கொண்டிருந்தது.

கருப்பண்ணசாமீ! மீண்டும் குரல் கொடுத்தார் உமா.

சுமார் பத்து பதினைந்து பேர் கொண்ட கூட்டத்துடன் எங்களுக்கு முன்னே சென்று கொண்டிருந்தார் நாகராஜ்.

அதற்குள் எப்படி இவ்வளவு விரைவாக அதுவும் எங்களுக்கு முன்னால்? ஆச்சரியமாக இருந்தது.

அவர் முன்னால் செல்வதுகூட ஆச்சரியமில்லை. ஆனால் அவரது வேகத்துக்கு ஈடுகொடுத்து அந்த பக்தர் கூட்டம் அவரைப் பின்தொடர்ந்தது தான் ஆச்சரியம்.

"வாருங்கள் வாருங்கள்" என்று சற்று நடையை மெதுவாக்கினார்.

நாங்கள் சற்று மெதுவாகவே நடை போட்டோம். காரணம் பாதை அப்படி. இப்போது மேட்டின் மேல் கைகளை ஊன்றி பிறகுதான் கால்களை ஊன்ற முடிந்தது.

தவசிப் பாறையை நெருங்கிவிட்டோம். ஒற்றையடிப் பாதை பயணம். ஒருவர் ஏறும் போதோ அல்லது இறங்கும்போதோ ஒருவர் மட்டுமே செல்லக்கூடிய பாதை. காலை சற்று அகலமாக வைத்தால் கூட பக்கத்தில் கிடு கிடு பள்ளம். அதலபாதாளம் என்பார்களே, அது இதுதான். சற்று ஏமார்ந்தால் இங்கே கீழே பள்ளத்தில் விழ வேண்டியதுதான். விழுந்தால் மகாலிங்கர் கோயில் அடிவாரத்தில்தான் நமது உடலை காண முடியும்.

இறக்கமான, குறுகலான மலைப் பாதைக்கு நடுவே பெரிய பாறாங்கல்லை நிறுத்தி வைத்தது போல் அந்தப் பெரும் பாறை காணப்படுகிறது. இதனைத்தான் தவசிப்பாறை என்று கூறுகின்றனர்.



தவசிப்பாறை நுழைவாயில்

வெளியே பார்ப்பதற்கு பெரும் பாறை போல் தோற்றமளித்தாலும் உள்ளே நீளமான பெருங்குகை காணப்படுகிறதாம். அதனால்தான் இந்தப்பாறையை தவசிக்குகை என்றும் சொல்லுகின்றனர்.

கீழே தைலக்கிணற்றை மூடி கருப்பண்ண சாமியை காவலுக்கு வைத்த காலாங்கிநாதர் இங்கு வந்து அமர்ந்து தான் தவம் செய்தாராம்.

தவசிப்பாறையின் முன்பக்கத்தின் கீழே ஓர் ஆள் படுத்த படியே உள்ளே நுழைவதற்குத் தக்கவாறு சுமார் ஒன்றரை அடி நீளமும், ஒரு அடி அகலமும் உடைய செவ்வகமான நுழைவு வாயில் உண்டு. அதன் எதிரே சுமார் பத்து பேர் உட்காரக்கூடிய இடைவெளி காணப்படுகிறது.

எங்களுக்கு முன்னே நாகராஜ் அழைத்து வந்த குழுவினர் உள்ளே

## ஆன்மீகம் 79

சென்றுள்ளனர் போலும். மற்றவர்கள் உள்ளே சென்றவர் வெளியே வரட்டும் என்று காத்திருந்தனர்.

பாறையின் பக்கவாட்டில் இடது புறமும் ஒரு வாயில் காணப்படுகிறது. உள்ளே சென்றவர் வருவதற்குள் இதற்குள் சென்று பார்த்தால் என்ன?

ஊர்ந்தபடியே சுமார் 15 அடி தூரம் சென்றால் ஒரு சின்ன சிவலிங்கம். அதனருகே ஓர் அகல் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. தலையைத்தூக்கி மன மாற வணங்கினேன், கைகூப்பி அல்ல, கைகூப்ப இடமில்லை. அப்படியே பின்பக்கமாக நகர்ந்தேன் ரயில் இஞ்சின்போல. அதற்குமேல் உள்ளே செல்வதற்கு வழியில்லை.

வெளியே காவலுக்கு நாகராஜ் அமர்ந்து இருந்தார். அவரிடம் கமரா, செல் என்று எடுத்து வந்தவைகளை ஒப்படைத்துவிட்டு வெறும் டிராயர் மட்டுமே அணிந்த நிலையில் உள்ளே செல்ல ஆயத்தமானோம்.


இதயநோய், நீரிழிவு நோய் உள்ளவர்களும் பருமனான உடலை உள்ளவர்களும் தயதுசெய்து உள்ளே செல்ல வேண்டாம் என்று எச்சரிக்கை செய்தார் ஒருவர்.

(தொடரும்)

டாக்டர். சி. எஸ். முருகேசன், எம்.ஏ., பி.எச்.டி




# பொன்மனச்செம்மல் எம்.ஜி.ஆர்



91

...கறுப்பு வெள்ளை படமாக இருந்த நாளில், தமிழில் முதல் வண்ணப் படத்தில் கதாநாயகனாக நடித்ததில் முதல்வர்.

படம்:- அலிபாபாவும் நாற்பது திருடர்களும்

குலேபகாவலி, மதுரை வீரன், பாக்தாத் திருடன் போன்ற தெரிந்த, மனதில் பதிந்த கதைகளை அறிவுக்கு ஒப்ப மாற்றி வெற்றி கண்டதில் முதல்வர்.

ஸ்லோ மோஷனில் தமிழகத்தில் படமெடுக்கச் சொன்ன முதல்வர்.

படம்: கலையரசி

நாற்பது நாள், ஐம்பது நாள் என நடிக்காமல் தன் பாத்திரப் படைப்புக்கு பத்து நாள், பன்னிரண்டு நாள் போதும் என்று முன்கூட்டியே சொல்லி திரைக்கதை அமைக்கச் சொல்லி படமெடுக்க வைத்து, வெற்றி கண்டதில் முதல்வர்.

படங்கள்:- கன்னித்தாய், சந்ரோதயம்

பின்னணி குரலே மலிந்த நாளில், சூடு பட்டுப் பழுதான தன் சொந்தக் குரலிலேயே பேசி ரசிகர்களைக் கவர்ந்த முதல்வர்.

வழக்கமாக தனக்கு பின்னணி குரல் கொடுத்த ஒருவரை நீக்கிவிட்டு, ஒரே மணி நேரத்தில் புதுப்பாடகரைத் தேடிப்பிடித்து அவரை பிரபலமாக்கியதில் முதல்வர்.

பாடியவர்: எஸ்.பி.பாலசுப்பிரமணியம். பாட்டு: ஆயிரம் நிலவே வா. படம்: அடிமைப்பெண்

நடிகருக்கு சங்கம் அமைத்த முதல்வர்.



பத்திரிகை ஆசிரியராகவும் [illegible] புரிந்த நடிகருள் முதல்வர்.

பத்திரிகைகள்: நடிகன் குரல், சமநீதி

படப்பிடிப்புக்குச் சென்றால் தன்னால் தயாரிப்பாளருக்கு ஒரு காசும் செலவு வைக்காத முதல்வர்.

நூறு நாள் படம் ஓடி வெற்றி விழா கொண்டாடி அதற்காக பலருக்குக் கேடயம், மோதிரம் வழங்கியதில் முதல்வர்.

படம்: நாடோடி மன்னன்

கதையின் அமைப்பு, இசையின் ராகம், பாட்டில் பல்லவி எல்லாம் என் திருப்திக்கே வேண்டும். அதுவே மக்கள் திருப்தி எனச் சொல்லியதில் முதல்வர்.

தமிழகத்தில் நடிகருள் படப்பிடிப்பு நிலையத்தை உரிமை கொண்ட முதல்வர்.

நிலையம்: சத்யா ஸ்டுடியோ

நோயாளிகளைக் குறிப்பிட்ட நேரத்தில் தான் அரசு மருத்துவ மனையில் பார்க்க வசதி இருந்தும் குண்டடி [illegible]ன்னை எல்லா நேரத்திலும் பார்க்க அனுமதி வழங்கிய முதல்வர்.

படுத்துக் கொண்டே எம்.எல்.ஏ. பதவியில் நிறைய வாக்கு வித்தியாசத்தில் வென்ற முதல்வர்.

தேசிய இராணுவ நிதிக்காக நேருஜியிடம் தன் ஒரு பட சம்பளத்தை முழுமையாகக் கொடுத்த முதல்வர்.

ஒரு போட்டிக்காக தான் நடித்த நான்கு படங்களை வெளியிட்டு, சென்னையில் ஒரே நேரத்தில் பதினாறு திரையரங்கங்களையும் நிறையச் செய்த முதல்வர்.

தெய்வங்களின் மேல்தான் பிள்ளைத் தமிழ் பாடப்பட்டது. தனிப்பட்ட மனிதருக்கு மூன்று பிள்ளைத்தமிழ் பாடப்பட்ட முதல்வர்.

ஒரு பெரிய நூல் நிலையத்தை தனிப்பட்ட முறையில் வைத்திருந்ததில் முதல்வர்.

என் சைக்ளோபீடியா பிரிட்டானிகா நிறுவனம் தனது நூற்றாண்டு வெளியீட்டில் இந்தியாவிற்கு மூன்று செட்டுகளை அனுப்புவது தெரிந்து, முதல் செட் வாங்கியதில் முதல்வர்.

வெளிநாட்டில் படமெடுக்க எண்ணி, முதலில் அந்நாட்டுக்குப் போய்ப் பார்த்துவரச் செய்து அந்த இடத்துக்கு ஏற்ப கதையமைப்பை எழுதச் செய்ததில் முதல்வர்.

படம்: உலகம் சுற்றும் வாலிபன்

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐக்கிய தேசிய கட்சிக்கு மக்களின் ஆதரவு இல்லாமல் போய்விட்டது

## நடைபெற்று முடிந்த தேர்தல் முடிவுகள் குறித்து அமைச்சர் தினேஷ் கருத்து

(கொழும்பு)

***ஐக்கிய தேசியக் கட்சியின் பாரிய வீழ்ச்சியை இந்த இரு மாகாணங்களுக்குமான தேர்தல் முடிவுகள் வெளிப்படுத்தியுள்ளதாக ஆளும் கட்சியின் பிரதம கொறடாவும் அமைச்சருமான தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.***

அதேவேளை எதிர்க்கட்சிகள் தொடர்பில் மக்கள் கொண்டுள்ள அதிருப்தியையும் இந்த தேர்தல் முடிவுகள் மூலம் தெளிவாக உணர்ந்துகொள்ள முடிந்துள்ளதாகவும் அமைச்சர் கூறியுள்ளார்.

அரசாங்கம் பெற்றுக் கொண்டுள்ள அமோக வெற்றியாக இத் தேர்தல் வெற்றியைக் கருத முடியும் என தெரிவித்த அமைச்சர் அனைத்து மாவட்டங்களிலும் அமோக வெற்றியினை ஈட்டிக்கொள்ள முடிந்துள்ளதுடன் மாவட்ட மட்டத்தில் முன்பிருந்ததைவிட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு மக்கள் ஆதரவு அதிகரித்துள்ளதையும் அதேவேளை. பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசிய கட்சிக்கு முன்பிருந்த மக்கள் ஆதரவு இல்லாமற் போயுள்ளதையும் காண முடிகின்றது எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

இது தொடர்பாக பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி கூறுகையில்,

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி காலி மாவட்டத்தில் பாரிய வெற்றியை ஈட்டிக் கொண்டுள்ளது. காலி தேர்தல் தொகுதியைத் தவிர மாவட்டத்தின் ஏனைய அனைத்துத் தொகுதிகளிலும் பெரும் வாக்கு எண்ணிக்கையில் கட்சி வெற்றிபெற்றுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் செயற்பாடுகளுக்கு காலி மாவட்ட மக்கள் வழங்கிய அங்கீகாரமாக இந்த வெற்றியை குறிப்பிட முடியும்.

அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவிக்கையில்,

மேல் மாகாணம் மற்றும் தென் மாகாண சபைத் தேர்தலில் ஊழல் மோசடிகள் இடம்பெற்றதாக எதிர்க்கட்சிகளிடமிருந்தோ அல்லது தேர்தல் கண்காணிப்பு அமைப்புகளிடமிருந்து கூட புகார்கள் வரவில்லை எனவும் அந்தளவு நீதியான தேர்தலை அரசாங்கம் நடத்தி முடித்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

அதனைத்தொடர்ந்து லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவிக்கையில்,

இரு மாகாணங்களிலும் அரசாங்கத்துக்கு அமோக வெற்றி கிடைத்துள்ளதுடன் குறிபபாக மாத்தறை, அம்பாந்தோட்டை மாவட்டங்களிலிருந்து இரண்டு மேலதிக ஆசனங்களையும் பெற்றுக் கொள்ள முடிந்துள்ளது.

மொத்தமாக பத்து ஆசனங்கள் பெற்றுள்ளமை என்பது பெரு வெற்றியாகும். அத்துடன்



எதிர்க்கட்சி ஒரு ஆசனத்தை இழந்துள்ளதையும் குறிப்பிட வேண்டும்.

அரசாங்கம் வெற்றிகரமாக தமது பயணத்தை முன்னோக்கித் தொடர இந்த மகத்தான வெற்றி உறுதுணை புரியும்.

அதேவேளை ஐக்கிய தேசியக் கட்சியின் வங்குரோத்து நிலையையும் இந்த தேர்தல் முடிவுகளில் காணமுடிகிறது. (2)



சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் மகளிர் தின நிகழ்வுகள் அண்மையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றபோது... (படங்கள் :- மானிப்பாய் செய்தியாலர்)

# அரசின் அடக்கு முறைகளுக்கு மக்கள் பாடம் புகட்டியுள்ளனர்

## தேர்தல் முடிவு குறித்து ஜனநாயகக் கட்சி

(கொழும்பு)

ஊழல் மோசடிமிக்க ஆட்சி மீதான மக்கள் கொண்டுள்ள வெறுப்பின் பிரதிபலனையே தேர்தல் பெறுபேறுகள் எடுத்துக் காட்டியுள்ளன. மேலும், ஜெனரல் சரத் பொன்சேகா தலைமையில் நடைபெறவிருந்த தேர்தல் பிரசாரக் கூட்டங்களுக்கு பொலிஸாரைக் கொண்டு தடை விதிக்கும் அரசின் அடக்குமுறை பிரயோகத்திற்கும் மக்கள் தகுந்த பாடம் கற்பித்துள்ளனர் என்று ஜனநாயக கட்சி தெரிவித்தது.

நடந்து முடிந்த மாகாண சபை தேர்தல் முடிவுகள் குறித்து கருத்துத் தெரிவித்த போதே அக்கட்சியின் பொது செயலாளர் ஆனந்த மானவடுவ மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்.

நடந்து முடிந்த மேல் மாகாண சபை தேர்தலில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி கடந்த மாகாண சபை தேர்தலிலும் பார்க்க பாரிய பின்னடைவினைச் சந்தித்துள்ளது. இவ்வாறானதொரு நிலைமையில் முதற் தடவையாக மேல் மற்றும் தென் மாகாண சபை தேர்தலில் போட்டியிட்டு பாரிய முன்னேற்றத்தினைக் கண்டுள்ளோம்.

அதேபோன்று மக்கள் விடுதலை முன்னணியும் பாரிய முன்னேற்றத்தினைக் கண்டுள்ள அதேவேளை ஐ.தே. கட்சி பெரும்பாலான இடங்களில் பின்னடைவினைச் சந்தித்துள்ளது.

இந்நிலையில் கடந்த மத்திய மற்றும் வடமேல் மாகாண சபை தேர்தலில் முதற் தடவையாக போட்டியிட்டு மூன்றாவது பலமான அணியாக பரிணமித்தோம்.

இவ்வாறானதொரு நிலையில் இம் மாகாண சபை தேர்தலில் பாரியளவில் முன்னேற்றம் கண்டுள்ளோம். இந்நாட்டு மக்கள் ஜெனரல் சரத் பொன்சேகா மீது வைத்துள்ள நம்பிக்கையே இதற்கு மூல காரணம் என அவர் மேலும் தெரிவித்தார். (2)

# இந்து ஒளி வெளிவந்துள்ளது

அகில இலங்கை இந்துமா மன்றத்தினரால் வெளியிடப்பட்ட பங்குனி மாதத்தின் இந்து ஒளி ஆன்மீக இதழ் திருக்கோணேஸ்வர ஆலய மஹோற்சவ சிறப்பிதழாக வெளிவந்துள்ளது.

இதில் திருக்கோணேஸ்வர ஆலய வரலாறு, திருமுறைகளில் திருக்கோணேஸ்வரம், திருக்கோணேஸ்வர மகிமை கூறும் இரு நூல்கள் என்ற பல கட்டுரைகளைத் தாங்கி வெளிவந்துள்ளது. (2)

# பேய்பால் முறைமை நாட்டில் அமுல்படுத்தப்படும்

## மத்திய வங்கி ஆளுநர் தெரிவிப்பு

சர்வதேச இணையத்தள பணக் கொடுக்கல்-வாங்கல்களுக்கு பயன்படுத்தப்படுகின்ற பேய்பால் முறைமை இவ் வருட இறுதிக்குள் இலங்கையில் அமுலாக்கப்படவுள்ளது என மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் தற்போதைய சட்டத்தின்படி பேய்பால் ஊடாக வெளிநாடுகளுக்கு பணத்தை அனுப்பவோ அல்லது கட்டணங்களை செலுத்தவோ முடியும்.

எனினும் வெளிநாட்டில் இருந்து பேய்பால் வழியாக உள்நாட்டுக்கு பணத்தை பெற அனுமதி வழங்கப்படவில்லை.

இந் நிலையில் இந்த சட்டத்தை மாற்றி இலங்கையில் பேய்பாலுக்கு முழு அங்கீகாரத்தையும் வழங்கும் வகையிலான சட்டதிருத்தங்கள் மேற்கொள்ளப்படுவதாக அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார். (2)

# தேர்தலில் மக்கள் வழங்கிய தீர்ப்புக்கு தலை வணங்குகின்றேன்

## அமைச்சர் நிமால் தெரிவிப்பு

அரசாங்கத்திடம் குறைகள் இருக்கலாம். அரசாங்கத்தின் தவறுகளை கண்டறிந்து, அதன் எதிர்கால வேலைத்திட்டங்களை உருவாக்க வேண்டும் என்றும் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா குறிப்பிட்டுள்ளார்.

மாகாண சபைத் தேர்தலில் மக்கள் வழங்கிய தீர்ப்புக்கு தலைவணங்குவதாகவும் மக்களின் நிலைப்பாடுகளுக்கு அமைய அரசாங்கத்தின் வழிமுறைகளை மாற்ற தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தென் மற்றும் மேல் மாகாணங்களில் தேர்தல் முடிவுகள் குறித்து கருத்து வெளியிடும்போதே அமைச்சர் இதனை கூறியுள்ளார்.

அரசாங்கம் மக்கள் வழங்கும் சமிக்ஞைகளை மன மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்ள விரும்பும் அரசாங்கமாகும். (2)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனவாதத்தை தூண்டும் கட்சிகள் ஒருபோதும் நிலைத்து நிற்காது

## கட்சியின் பேராளர் மாநாட்டில் அதாவுல்லா

(கொழும்பு)

**இனவாதத்தினைத் துாண்டிவிடும் வகையில் செயற்படுகின்ற கட்சிகள் மூலம் நிலைத்து நிற்க முடியாதென்ற காரணத்தினால் மூவின சமூகங்களையும் ஒன்றிணைத்து 2004 ஆம் ஆண்டில் வித்திடப்பட்ட தேசிய காங்கிரஸ் கட்சி தற்போது பெரு விருட்சமாக மாறியிருக்கின்றது என தேசிய காங்கிரஸ் கட்சியின் தலைவரும் உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சருமான ஏ.எல்.எம். அதாவுல்லா தெரிவித்துள்ளார்.**



தேசிய காங்கிரஸ் கட்சியின் பத்தாவது பேராளர் மாநாடு நேற்று முன்தினம் அக்கரைப்பற்று அதாவுல்லா அரங்கில் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு உரை யாற்றும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் உரை நிகழ்த்துகையில்,

2004 ஆம் ஆண்டு காலத்தின் தேவையாக எமது கட்சி ஆரம்பிக் கப்பட்டது.

இது இவ்வாறிருக்க, ஒவ்வொரு இனத்தவர்களும் தங்களின் பெயர்களை வைத்துக் கொண்டு பேசினால் அவர்களுக்கான தீர்வினைப் பெற்றுக் கொள்ள முடியாதென்ற வகையில் நாட்டின் சுதந்திரத்திற்காக போராடிய டி.எஸ்.சேனநாயக்கவின் தலைமையில் மூவின சமூகத்தவர்களையும் ஒன்றிணைத்து இச்சமூகங்களை சாந்தப்படுத்தும் வகையில் இலங்கைத் தேசிய காங்கிரஸ் கட்சி ஆரம்பிக்கப்பட்டு. அனைவரையும் ஒற்றுமைப்படுத்தி செயற்பட்டது.

தலைவர் முஸ்லிம் காங்கிரஸ் என்ற கட்சிக்கு முழுக்குப் போட்டு விட்டு தேசிய ஐக்கிய முன்னணி என்னும் கட்சியினை ஆரம்பித்து செயற்பட்டு வந்தார். இப்படியாகச் செயற்பட்டு வந்த போதுதான் நாம் யாரும்எதிர்பாரா வண்ணம்எம்மை விட்டும் பிரிந்து விட்டார்.

நாம் தேசிய காங்கிரஸ் கட்சியினை ஆரம்பித்தது முதல் பல்வேறான விடயங்ளை மக்களுக்காகச் செய்திருக்கின்றோம். அதனை இந்நாட்டில் உள்ள மூவின சமூகங்களையும் சேர்ந்தவரகள் சாட்சியாக இருக்கின்றார்கள். பிரபாகரனுடன் உறவினை வைத்து நாட்டினை துண்டாட எத்தனித்த ரணில் விக்ரமசிங்கவை வீட்டுக்கு அனுப்பினோம்.

சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவை ஆட்சியில் அமர்த்தி னோம். அதேபோல் நாட்டு மக்கள் மீது அன்பு வைத்து பாரிய அபிவிருத்திகளைச் செய்து மக்களை நிம்மதியாக வாழ வைத்துக் கொண்டிருக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை கடந்த 2005 ஆம் ஆண்டு நிபந்தனைகள் அற்ற ஒப்பந்தத்தின் பிரகாரம் அவரோடு இணைந்து ஆதரவளித்து ஆட்சியில் அமர்த்தினோம்.

வடக்கு கிழக்கில் இருந்து பிரிக்கப்பட வேண்டும், இந்நாட்டு மக்கள் யுத்த சூழல் அற்று நிம்மதியாக வாழ வேண்டும், கிழக்கு மாகாணத்திற்கு தனியான ஆட்சி அதிகாரம் நிலைநாட்டப்படவேண்டும் என்றுதான் தலைவர் அஷ்ரஃப் கனவு கண்டார்.

அவரது இக்கனவு தற்போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நனவாக்கப்பட்டிருக்கின்றது. நாங்கள் பத்தாண்டு காலப்பகுதியில் முறையான அரசியலைச் செய்து வருகின்றோம். ஆனால் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி ஆரம்பித்த நோக்கில்நின்று தற்போது விலகி நின்று செயற்படுகின்றது.

கண்கெட்ட பின்பு சூரிய நமஸ்காரம் கிடைத்தது போல் தேர்தல் காலங்களில் அரசிற்கு எதிராகச் செயற்பட்டு பின்னர் அரசோடு ஒட்டிக் கொள்ளும் கட்சியாக அக் கட்சி மாறிவிட்டது.

அதுமட்டுமல்லாமல் கட்சித் தலைமை அரசோடு பூனையைப் போல் ஒட்டியிருந்து நாட்டைக் காட்டிக் கொண்டிருக்கின்றது.

இக்கட்சித் தலைமை காலத்திற்குக் காலம் விடுகின்ற கோமாளித்தனமான அறிக்கை மூலம் முஸ்லிம் சமூகத்தினை சில தரப்பினர் குறைத்து மதிப்பிடுகின்றனர். இவர் விடுகின்ற இக்கோமாளித்தனமான அறிக்கைகள் அவரின் சொந்தக் கருத்தே தவிர முஸ்லிம் மக்களது கருத்துகளில்லை என்பதை பல் தரப்பட்டோர் தற்போது உணர்ந்து வருகின்றனர்.

வடகிழக்கில் மூன்றில் ஒரு பங்கினரே முஸ்லிம்கள் வாழ்கின்றனர். ஆனால் வடகிழக்கிற்கு வெளியே மூன்றில் இரண்டு பங்கு முஸ்லிம்கள் வாழ்கின்றார்கள். தலைமைகள் விடுகின்ற சிறு பிள்ளைத் தனமான அறிக்கையினால் எமது மக்கள் பாதிக்கின்றனர் என்பதை நாம் நன்கு உணர்ந்து கொள்ள வேண்டும்.

முஸ்லிம் காங்கிரஸ் கட்சித் தலைமை விடுகின்ற அறிக்கைகள் அவர் சுய நலத்திற்காகவும், தனிப்பட்ட ரீதியிலே தவிர அக்கருத்துக்களின் நிலைப்பாடு ஒட்டு மொத்த முஸ்லிம் சமூகத்தின் நிலைப்பாடு அல்ல என்பதை நாம் நன்கு விளங்கிக் கொள்ள வேண்டும்.

பிரச்சினைகள் என்பது எங்கும் இருக்கின்றன. எப்போதும் பிரச்சினைகள் எழுந்து கொண்டே இருக்கின்றன. ஒவ்வொரு மதத்திலும் கடும் போக்குடையவர்கள் இருக்கிறார்கள்.

எமக்காகவும், எமது சமூகத்திற்கெதிராகவும் எழுகின்ற பிரச்சினைகளை முறையாகத் தீர்த்துக் கொள்ள வேண்டும்.

எமக்கானவற்றை நாம் பெற்றுக் கொள்வதுடன், பாரிய அபிவிருத்திகளையும் மக்களுக்காகச் செய்ய திட்டமிட்டுள்ளோம் என்று குறிப்பிட்டார். (2)

## தேர்தலில் ஆயிரத்து 333 வேட்பாளர்களது கட்டுப்பணம் அரசுடைமையாக்கப்பட்டுள்ளது

### தேர்தல்கள் செயலகம் அறிவிப்பு

2009 ஆம் ஆண்டு நடைபெற்ற இரு மாகாண சபைகளுக்குமான தேர்தலுடன் ஒப்பிடுகையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் உறுப்பினர்களின், எண்ணிக்கையில் 17 குறைந்துள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் 2 குறைந்துள்ளது.

இரு மாகாண சபைகளுக்குமான தேர்தல்களில், வாக்களிப்பதற்கு 58 இலட்சத்து 98 ஆயிரத்து 428 பேர் தகுதி பெற்றிருந்தனர்.

அதில் 39 இலட்சத்து 21 ஆயிரத்து 612 பேர் மட்டுமே வாக்களித்துள்ளனர். 19 இலட்சத்து 76 ஆயிரத்து 810 பேர் வாக்களிக்கவில்லை.

அத்துடன் அளிக்கப்பட்ட வாக்குகளில் ஒரு இலட்சத்து 61 ஆயிரத்து வாக்குகள் செல்லுபடியற்றதாகும்.


கடந்த முறை நடைபெற்ற மேல் மற்றும் தென் மாகாண சபைத் தேர்தல்களின் பிரகாரம் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு இம்முறை 2 இலட்சத்து 47 ஆயிரத்து 193 வாக்குகள் குறைந்துள்ளன. ஐக்கிய தேசியக் கட்சிக்கு 47 ஆயிரம் வாக்குகள் அதிகரித்துள்ளன.

இதேவேளை, தேர்தலில் சுயேட்சையாக போட்டியிட்ட ஆயிரத்து 333 வேட்பாளர்கள் கட்டுப்பணமாக 26 இலட்சத்து 60 ஆயிரம் ரூபா அரசுடைமையாக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் செயலகம் அறிவித்துள்ளது.

இதேவேளை கடந்த முறை இவ்விரு மாகாணங்களிலும் நடைபெற்ற தேர்தல்களில் மொத்தமாக 6 உறுப்பினர்களை பெற்றுக்கொண்ட ஜே.வி.பி. இம்முறை 11 உறுப்பினர்களை பெற்றுள்ளது.

அத்துடன், முன்னாள் இராணுவ தளபதி சரத் பொன்சேகா தலைமையிலான ஜனநாயக கட்சி இலங்கை அரசியலில் மூன்றாவது சக்தியாக வருவதற்குரிய வாய்ப்புகள் தென்படுவதாகவே முடிவுகள் காட்டுகின்றன.

எனினும், ஆளும் கூட்டணியின் செல்வாக்கு தற்போது சரிவைக் கண்டுள்ளதாகவே தேர்தல் முடிவு காட்டுவதாக அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர். (2)



பிரபல ஆன்மீகச் சொற்பொழிவாளர் சொல்வேந்தர் பொன்.சுகந்தன் திருகோணமலை பத்திரகாளி அம்பாள் ஆலய உற்சவ காலத்தில் தொடர் சொற்பொழிவாற்றியமையால் அருட்சொல் அழகர் எனும் பட்டம் வழங்கி ஆலயப் பிரதமகுரு சோ.ரவிச்சந்திரகுருக்களால் கௌரவிக்கப்படுவதனைப் படத்தில் காணலாம்.

## பணம் கடத்த முயன்ற இரண்டு பேர் கைது

(கொழும்பு)

45 இலட்சம் ரூபாவை சட்டவிரோதமான முறையில் சிங்கப்பூருக்கு கடத்த முயன்ற இலங்கையர் இருவரை கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கைது செய்துள்ளதாக சுங்கப்பிரிவினர் அறிவித்துள்ளனர்.

சந்தேகநபர்கள் இருவரும் கொழும்பு மட்டக்குளியைச் சேர்ந்தவர்கள் என்றும் குறித்த பிரிவினர் அறிவித்துள்ளனர். (2)

## தடைகள் விதிக்கப்பட்டாலும் தடைகளை முறியடிக்க முடியும்

தடைகளுக்கு அஞ்சிக் கொண்டு நாட்டின் எதிர்காலத்தை காட்டிக் கொடுக்க வேண்டிய அவசியமில்லை என அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்லவில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

தேசிய இனத்தையோ, வரலாற்று சிறப்பு மிக்க அடையாளங்களையோ தாரை வார்க்க வேண்டியதில்லை.

எவ்வாறான தடைகள் விதிக்கப்பட்டாலும் நாம் அனைவரும் இணைந்து செயற்பட்டால், தடைகளை முறியடிக்க முடியும்.

ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவையில் இம்முறை நிறைவேற்றப்பட்ட தீர்மானம் சற்று வலுவானது. கடந்த காலங்களில் மனிதவுரிமை மீறல் மற்றும் போர்க்குற்றச் செயல்கள் பற்றியே வலியுறுத்தப்பட்டது.

எனினும், தற்போதைய தீர்மானத்தில் மத நல்லிணக்கம், ஊடக சுதந்திரம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளன.

சர்வதேச விசாரணைப் பொறிமுறைமை குறித்த கோரிக்கை ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல.

உள்ளக ரீதியிலான விசாரணைகளே நடத்தப்பட வேண்டும்.

இந்திய வம்சாவளித் தமிழர்கள்ஒன்றரை இலட்சம்பேரை நோர்வே வடக்கில் குடியேற்றியது.

இறுதிக் கட்ட போரின் போது இந்த இந்திய வம்சாவளித் தமிழர்கள் புலிகளின் சார்பில் முக்கிய பங்காற்றியிருந்தனர்.

எனவே நோர்வேயின் நடவடிக்கைகள் குறித்தும் விசாரணை நடத்தப்பட வேண்டுமென சம்பிக்க கோரியுள்ளார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா காலை வாரியது ஏன்?

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில, இலங்கைக்கு எதிராக கொண்டு வரப்பட்ட தீர்மானம், ஒருவழியாக நிறைவேறியுள்ள போதிலும், இதில் இந்தியா எடுத்த நிலைப் பாடு பலரது புருவங்களையும் உயர்த்த வைத்துவிட்டது என்பதில், மாற்றுக் கருத்துக்கு இடமிருக்க முடியாது. ஏனென்றால், இந்தியா உள்நாட்டு அரசியல் சூழல் கருதி, இந்த தீர்மானத்துக்கு ஆதரவாக எப்படியும் வாக்களிக்கும் என்றே ஆரம்பத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்டது.

ஏற்கனவே, முதல் இரண்டு தீர்மானங்களையும் தமிழக அரசியல் அழுத்தங்களினால்தான், இந்தியா ஆதரிக்கத் தலைப்பட்டது. ஆனால், இம்முறை, தமிழக கூட்டணி அழுத்தங்கள் இல்லாது போனாலும், தேர்தல் அழுத்தங்கள் மத்திய அரசின் நிலைப்பாட்டில் தாக்கத்தைச் செலுத்தும் என்றே கருதப்பட்டது. இதனை இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் வெளிப்படையாகவே கூறியும் இருந்தார். அத்துடன், 13 ஆவது திருத்தச் சட்டம், மாகாணசபைகளுக்கான அதிகாரப் பகிர்வு உள்ளிட்ட இந்தியா வலியுறுத்தும் விடயங்களையும், தீர்மான வரைபு உள்ளடக்கியிருந்ததால், அதற்கு இந்தியாவினது ஆத்ரவு உறுதி என்றே நம்பப்பட்டது.

முதலிரண்டு ஆண்டுகளிலும், அமெரிக்கத் தீர்மானத்தை இந்தியா எதிர்க்கலாம் என்ற நிலை காணப்பட்டது. ஆனால், இந்த ஆண்டு, நிச்சயம் ஆதரிக்கும் என்ற நிலையும், எதிர்பார்ப்புமே மிகையாக இருந்தது. கடந்த இரண்டு முறையும், தீர்மானத்தை இந்தியா ஆதரித்த போது, மிகப்பெரிய இராஜதந்திர தவறு என்று விமர்சித்த புதுடெல்லி ஊடகங்கள் இம முறை, தீர்மானத்தை ஆதரிப்பதை விட வேறு வழியில்லை என்றே சுட்டிக்காட்டியிருந்தன. ஏனென்றால் தீர்மான வரைபு இந்தியாவினது நிலைப்பாட்டுக்கு வலுச் சேர்க்கும் வகையிலானதாக இருந்தது. புதுடெல்லிக்கு எல்லாமே சாதகமானதாக இருந்தும், இந்த தீர்மானத்தை ஆதரிக்காமல் நழுவிக் கொண்டிருக்கிறது.

எதற்காக இவ்வாறு இந்தியா நடந்து கொண்டது என்ற கேள்வி எழுந்துள்ளது. ஏனென்றால், இந்தியாவினது முடிவெடுப்பதில் தளம்பல் நிலையில் இருப்பதான சூழல் ஒன்று இருந்திருந்தால், இவ்வாறான அதிர்ச்சி ஏற்பட்டிருக்காது. ஆனால் இந்தியாவின் பக்கத்தில் இருந்து தெளிவான சமிக்ஞைகள் காட்டப்பட்ட நிலையில் தான், இது அதிர்ச்சி தரும் முடிவாக பார்க்கப்படுகிறது. குறிப்பாக, இந்தியாவினது ஆதரவை உறுதிப்படுத்திக் கொள்வதற்காகவே, அமெரிக்கா தனது தீர்மான வரைபல் கடைசி நேரத்தில், விசாரணைக்கான காலவரையறையைச் சேர்த்து திருத்தம் கொண்டு வந்தது.

இந்தியா தீர்மான வாக்கெடுப்பில் இருந்து ஒதுங்கிக் கொள்வதாக இந்தியப் பிரதிநிதி திலிப் சின்ஹா அறிவித்த பின்னர், அமெரிக்கப் பிரதிநிதி தனது உரையில், பல்வேறு நாடுகளின் கோரிக்கைகளை ஏற்றே காலவரையறையை தீர்மான வரைபல் சேர்த்துக் கொண்டதாக குறிப்பிட்டிருந்தார். அவர் அவ்வாறு குறிப்பிட்டது முக்கியமாக இந்தியாவைத் தான். ஆனாலும், இந்தியா அந்த வரைபு தெளிவாக்கத்துக்கு சாதகமாக நடந்து கொள்ளவில்லை.

இந்த தீர்மான வரைபு அறிமுகப்படுத்தப்பட்டதில் இருந்தே இந்தியா கருத்துக்களை வெளியிடுவதை தவிர்த்து வந்ததை கவனிக்க வேண்டும். எந்தவொரு சந்தரப்பத்திலும், தமது கருத்தை பகிரங்கமாக வெளியிடாமல், இந்தியா காத்து வந்த மௌனம், கடைசி நேரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்துவதற்காகவே என்பது உறுதியாகியுள்ளது.

இந்தியாவினது இந்த முடிவு கொள்கை ரீதியானது என்றே எடுத்துக் கொள்ளப் படுகிறது. ஆனால், கடந்த காலங்களில் அரசியல் ரீதியான முடிவுகளை எடுத்த இந்தியா, இந்தமுறை மட்டும் கொள்கை ரீதியான் முடிவை எடுக்க ஏன் முற்பட்டது? என்ற கேள்வி இப்போது எழுகிறது.

ஏற்கனவே இந்திய வெளிவிவகார அமைசசர் சல்மான் குர்ஷித், உள்நாட்டு அரசியலின் தாக்கம் தீர்மான வாக்கெடுப்பில் எதிரொலிக்கும் என்று தெளிவாக கூறியிருந்த போது கூட, கொள்கை முடிவுக்கு இடமில்லை என்றே கருதப்பட்டது. ஆனால், கடைசி நேரத்தில், இந்திய பிரதமர் மன்மோகன் சிங்தான், இந்த முடிவை எடுத்ததாக கூறப் படுகிறது.

எவ்வாறாயினும், இந்தமுறை இந்தியா அரசியல் முடிவை எடுக்காமல் தவிர்த்துக் கொண்டதற்கு பல்வேறு காரணிகள் தாக்கம் செலுத்தியுள்ளன. முதலாவது, எல்லாக் கட்சிகளுமே தேர்தல் பிரசாரத்தில் மூழ்கியிருந்ததால், தீர்மானத்தை கண்டிப்பாக ஆதரிக்க வேண்டும் என்று தமிழ்நாட்டில் இருந்து மத்திய அரசுக்கு வலுவான அழுத்தங்கள் கொடுக்கப்படவில்லை. கடந்த முறைகளில், தமிழகத்தில் இருந்து அழுத்தங்கள் கொடுக்கப்பட்டதால், தீர்மானம் எடுப்பதற்கு காங்கிரஸ் கட்சி தலைமையுடன் மத்திய அரசு கூடிக்கூடி ஆலோசனை நடத்தியது. ஆனால் இந்த முறை அப்படியான எந்த ஆலோசனைகளுமே நடக்கவுமில்லை, அதற்கான பரபரப்பு புதுடெல்லியில் இருக்கவுமில்லை.

இரண்டாவது, தமிழ்நாட்டில் காங்கிரஸ் ஓரம்கட்டப்பட்டு, எல்லா இடங்களிலும் தோற்கடிக்கப்படுவது உறுதியாகிவிட்ட நிலையில், அரசியல் ரீதியான முடிவை எடுத்து எதற்கு வாங்கிக் கட்டிக்கொள்ள வேண்டும் என்று மத்திய அரசு கருதியிருக்கலாம். அதாவது, முழுக்க நனைந்து விட்ட பிறகு முக்காடு எதற்கு என்பது போல, தோல்வி உறுதியான பின்னரும், எதற்காக தீர்மானத்துக்கு ஆதரவளித்து, கொள்கை முடிவுக்கு குறுக்கே நிற்க வேண்டும் என்று கருதியிருக்கலாம்.

மூன்றாவது, இந்திய அரசு தவறான வெளிவிவகாரக் கொள்கையை கடைப் பிடிக்கிறது என்ற குற்றச்சாட்டுகளில் இருந்து தப்பிக்க, இந்தக் கடைசி வாயப்பை பயன் படுத்திக் கொள்ளலாம் என்று மத்திய அரசு நினைத்திருக்கலாம்.

நான்காவது, தேவ்யானி கோப்ரகடே விவகாரத்தில் அமெரிக்காவுடன் ஏற்பட்டுள்ள முரண்பாடுகளின் எதிரொலியாகக் கூட, இந்தியா கொள்கை முடிவின் பக்கம் தாவியிருக்கலாம். தேவ்யானியை முதலில் அமெரிக்க நீதிமன்றம் குற்றச்சாட்டுகளில் இருந்து விடுவித்த போதும், அவர் மீது புதிய குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டது இந்தியாவுக்கு கடும் அதிருப்தியை ஏற்படுத்தியது என்பதில் சந்தேகமில்லை.

எனவே சர்வதேச அரங்கில் அமெரிக்காவுக்கு ஒரு எச்சரிக்கையைக் கொடுப்பதற்கு இந்த வாய்ப்பை புதுடெல்லி பயன் படுத்த முற்பட்டிருக்கலாம். இதுபோன்ற காரணிகள் தான், ஜெனிவா தீர்மானத்தின் மீது அரசியல் முடிவெடுக்கப்படாமல் போனதில் தாக்கம் செலுத்தியதாக கருதப்படுகிறது.



அதேவேளை, கொள்கை சார்ந்த முடிவாக, இதனை இந்தியா எடுத்துள்ளது என்று குறிப்பிட்டாலும் அதிலும் கூட ஆங்காங்கே பல முரண்பாடுகள் இருக்கத்தான் செய்கிறது.

இலங்கையில் சீனாவின் தலையீடுகள் அதிகரித்துள்ள நிலையில், இலங்கையுடனான உறவுகளில் மேலும் இடைவெளி ஏற்பட்டு விடாதபடி, தடுக்கவே இந்தியா இந்த முடிவை எடுத்ததாக ஒரு நியாயம் கூறப்படுகிறது.

அவ்வாறாயின், இலங்கையில் சீனத் தலையீடுகள் குறித்தோ, முதலீடுகள் குறித்தோ இந்தியா கவலை கொள்ளவில்லை என்று, இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித், வெளிவிவகாரச் செயலர் சுஜாதா சிங் போன்றவர்கள் கூறியது பொய்யான கூற்றா?

சில வாரங்களுக்கு முன்னரே, சீனா பற்றிக் கவலை கொள்ளவில்லை என்று கூறிய இந்தியா, அதை முன்னிறுத்தி இத்தகைய கொள்கை முடிவை எடுத்ததாக கூறமுற்படுவது அபத்தமானது. இன்னொரு பக்கத்தில், இந்த விசாரணை, ஒரு நாட்டின் உள்விவகாரங்களில் தலையிடும் வகையிலான - அந்த நாட்டின் இறைமைக்குப் பாதிப்பை ஏற்படுத்தக் கூடியது என்பதால், தான் இந்தியா வாக்களிக்காமல் ஒதுங்கியது என்றும் ஒரு நியாயம் கூறப்படுகிறது.

ஆனால், இன்னொரு நாட்டின் இறைமை குறித்து பேசும் தகைமை இந்தியாவுக்கு இருக்கிறதா என்ற கேள்வி உள்ளது. வடக்கில், விமானங்களின் மூலம் உணவுபொதிகளைப் போட்ட போது, இதே காங்கிரஸ் அரசுக்கு இலங்கையின் இறையாண்மை மறந்து போனது. சந்தர்ப்பத்தை சாட்டாக வைத்து, ஜே.ஆருடன் செய்து கொண்ட உடன்படிக்கை மூலம், 1987இல் இந்தியா தனது படைகளை இலங்கைக்கு அனுப்பிய போது, அது இன்னொரு நாடு என்ற எண்ணம் புதுடெல்லிக்கு வந்திருக்கவில்லை. அப்போது இலங்கையின் இறையாண்மை எங்கே போனது?

ஒருவேளை அது இலங்கை அரசின் ஒப்புதலுடன் நடந்தது என்று இந்தயா நியாயப்படுத்தலாம். எவ்வாறாயினும், இந்தியப் படைகளின் நிலைகொள்ளலுக்கு இலங்கை அரசின் ஒப்புதல் இருந்தாலும், இலங்கைக் குடிமக்கள் மீது போரை நடத்தியது இறையாண்மை மீறல் இல்லையா? அதற்கு இந்தியாவுக்கு எந்த சட்டபூர்வ அதிகாரத்தையும் இலங்கை கொடுத்திருக்கவில்லை.

1989 ஆம் ஆண்டு ஜுலை மாதமே இந்தியப்படைகளை வெளியேறும் படி, அப்போதைய ஜனாதிபதி பிரேமதாச உத்தர விட்ட போதும், தொடர்ந்து 1990 மார்ச் வரை அங்கு நிலைகொண்டிருந்த போது இந்தியாவுக்கு இன்னொரு நாட்டின் இறைமை பற்றிய சிந்தனை வந்திருக்கவில்லை. ஜே.ஆருடன் உடன்பாடு கையெழுத்தாகிய சில மணிநேரங்களுக்குள் பலாலியில், தனது படைகளை கொண்டு வந்து இறக்கிய இந்தியாவுக்கு, அந்தப் படைகளை வெளியேற்றுவதற்கு இலங்கை ஜனாதிபதி விதித்த காலக்கெடுவுக்கும் அப்பால், எட்டுமாதங்கள் தேவைப்பட்டன.

அது இலங்கையின் இறைமைக்குச் சவாலான விடயமில்லையா? இப்படியாக இலங்கை விவகாரத்திலேயே ஏராளமான இறையாண்மை சரச்சைக்குள் சிக்கியுள்ள இந்தியா, ஜெனிவாவில் தனது முடிவுக்கு நியாயம் தேடுவதற்காக, இறைமை என்பதை குத்தகைக்கு எடுத்துக் கொண்டுள்ளது என்றே கருத வேண்டியுள்ளது.

காஷ்மீர் மனித உரிமை மீறல்கள் குறித்தும், 1984இல் நடந்த சீக்கியர்களுக்கு எதிரான கலவரம் குறித்தும் விசாரிக்கப்பட வேண்டும் என்று கோரிக்கைகள் எழத் தொடங்கியதும் இந்தியா இந்த முடிவை எடுத்ததற்கு இன்னொரு காரணமாக குறிப்பிடலாம். இதே சந்தர்ப்பத்தைப் பயன் படுத்தி, தமது விவகாரத்திலும், ஐ.நா. மனித உரிமைகள் பேரவை மூக்கை நுழைத்துவிடுமோ என்று இந்தியா பயந்து இந்தக் கொள்கை முடிவை எடுத்திருக்கலாம். இந்தியாவினது இந்த முடிவு கடைசி நேரத்தில் எடுக்கப்பட்டதாக கூற முடியாது.

ஏனென்றால், இந்தியா இந்த முடிவை முன்னரே எடுத்துவிட்டதால்தான், இந்தியாவின் ஆதரவை உறுதிப்படுத்துவதற்காக புதுடெல்லியில் அழைப்புக்காக காத்திருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அந்த வாய்ப்பை வழங்காமல் நழுவிக் கொண்டது.

அதேவேளை, போர்க்குற்றங்கள் குறித்து சுதந்திரமான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்ற காங்கிரஸ் கட்சியின் தேர்தல் அறிக்கை வெளியான மறுநாளே, இந்திய அரசு இந்த முடிவை வெளிப்படுத்தியது. இது மத்திய அரசின் குழப்ப நிலையையும் சுட்டிக்காட்டத் தவறவில்லை. எது எவ்வாறாயினும், இந்த முடிவின மூலம் இலங்கை அரசாங்கத்துக்கு எதிர்பாராத இன்ப அதிர்ச்சியை இந்தியா கொடுத்துள்ளது என்பதில் சந்தேகமில்லை. ஆனாலும், இந்தப் புதிய உறவின் மூலமோ, கொள்கை முடிவின் மூலமோ, தனக்கு இலங்கை கொடுத்த வாக்குறுதிகளைக் காப்பாற்றும் என்று இந்தியா நம்புமானால், இலங்கையிடம் இந்தியா இன்னமும் நிறையவே பாடம் கற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது என்றே கருத வேண்டும்.

-கபில் தொல்காப்பியன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முடி உதிர்வைத் தடுக்க முக்கிய ஆலோசனைகள்!

அனைத்துத் தரப்பினரையும் தீவிர மனஉளைச்சலுக்கு ஆளாக்கக்கூடிய பிரச்சினை, "முடி உதிர்தல்'. சமீப காலமாக, இளம் வயதினருக்கு முடிஉதிர்தல் பிரச்சினை அதிகரித்துவருகிறது என்கிறது ஓர் ஆய்வு. "ஈஸி ரிலாக்ஸ் டிப்ஸ் மூலம் பெண்களின் முடிஉதிர்வைத் தவிர்க்கலாம்...' என்று நம்பிக்கை தருகிறார் புதுச்சேரி அரசு வைத்தியசாலையின் தோல் மருத்துவர் உதயசங்கர்.

**இதைத் தவிர்க்க என்ன செய்யலாம்?**

பயோட்டின்துத்தநாகம்அவசியம் கரட், வெங்காயம், காலிஃப்ளவர், பாதாம் பருப்பு, முந்திரிப் பருப்பு, ஆட்டுப் பால், மாட்டுப் பால் போன்ற பலவற்றில் பயோட்டின் அளவு அதிகம் இருக்கும். இந்த பயோட்டின், முடியை அடர்த்தியாக்கும். பயோட்டின் அளவு உடலில் குறையும்போது, முடியின் அடர்த்தி குறைந்து வலுவிழந்து உடைந்துவிடுகிறது. பயோட்டின் நிறைந்த உணவுகளை எடுத்துக் கொண்டால், முடி உதிர்தல் பிரச்சினையிலிருந்து தப்பிக்கலாம். முடி வளர்ச்சிக்கு, துத்தநாகம் அவசியம் என்பதால், துத்தநாகம் அதிகம் உள்ள உணவுகளைச் சேர்த்துக் கொள்வது நல்லது.

**முடியை சிக்காக்காதீர்கள்**

இளம் பெண்கள் தங்கள் ஆரோக்கியமான முடியை ஹேர் ஸ்ட்ரைட்டனிங், கலரிங், ப்ளீச்சிங் மூலம் அவர்களே கெடுத்துக் கொள்கிறார்கள். இதனால் முடியின் இயற்கை அழகு முற்றிலுமாக மறைகிறது. முடி ஆரோக்கியமாக இருக்க இது போன்ற தொழில் நுட்பங்களைத் தவிர்ப்பது நல்லது. அவசியம் இல்லாமல் உடல் எடைக் குறைப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டாலோ, டயட் என்ற பெயரில் உடலை வருத்தினாலோ முடி உதிர்தல் கண்டிப்பாக இருக்கும்.

**மனஉளைச்சல் கேசத்தைப் பாதிக்கும்**

"முடி உதிர்கிறதே' என்று மன உளைச்சலுக்கு ஆளாகும்போது, இன்னும் உங்கள் பளு கூடிக் கொண்டே போகும். இதனால் முடியின் வளர்ச்சி கண்டிப்பாகப் பாதிப்புக்கு உள்ளாகும். எதையும் "டேக் இட் ஈஸி' என எடுத்துக்கொள்ளுங்கள். யோகா மற்றும் தியானம் என மனதை நிதானிக்கும் விடயங்களில் ஈடுபடலாம். மனஉளைச்சலிலிருந்து விடுபட்டாலே, இழந்த முடியைத் திரும்பப் பெற முடியும்.

**பராமரிக்கக் கற்றுக் கொள்ளுங்கள்**

முடியின் ஆரோக்கியத்தில் எவ்வளவு அக்கறை காட்டுகிறோமோ, அதனைப் பராமரிப்பதிலும் அவ்வளவு அக்கறைகாட்ட வேண்டும். வாரம் ஒரு முறை அல்லது இருமுறை தரமான சம்பூ போட்டு முடியைச சுத்தப்படுத்துதல் வேண்டும். அகன்ற பற்களைக் கொண்ட சீப்புகள் பயன்படுத்துவது நல்லது. ஹேர் கண்டிஷனர்பயன்படுத்தி முடிச்சிக்கலைத் தவிர்க்கலாம். வெயிலில் செல்வோர் "சிங்க ஆக்ஸைட்கண்டிஷனர்' பயன்படுத்துவதால், முடியைச் செழுமையாக்கலாம். இரவு படுப்பதற்கு முன் முடியைச் சுத்தப்படுத்துவது நல்லது. ஈரம் மற்றும் அழுக்குத் தலையோடு படுப்பதைத் தவிர்ப்பது நல்லது.





**செய்யக் கூடாதவை**

ஹேர் டிரையர் கண்டிப்பாகப் பயன்படுத்தக் கூடாது. இறுக்கமாக ஜடை பின்னுதல், ஹேர் க்ளிப் பயன்படுத்துதல் தவிர்க்க வேண்டும். முடி ஈரமாக இருக்கும் போது, தலை சீவுதல் கூடாது. தலைக்குக் குளித்து முடித்தவுடன்உடனேதுணியால் துவட்டாமல், தலையைச் சுற்றித் துணியைக் கட்டிக் கொண்டு ஈரம் நன்கு உறிஞ்சிய பின்னர் முடியை உலர்த்த வேண்டும்.

ஆண்கள் அளவுக்கு அதிகமாக மது அருந்துவதால், தலைமுடிக்குச் செல்ல வேண்டிய சத்துக்கள் சரியாகச் செல்லாமல் முடி வளர்ச்சியில் குறைபாடு ஏற்படும்.

புகைப்பதனால் இரத்த ஓட்டம் குறைந்து, முடியின் வேரை வலுவிழக்கவைக்கும். இரத்த ஓட்டம் குறைந்தாலே, முடிகள உதிர ஆரம்பிக்கும். மது மற்றும் புகையைத் தவிர்ப்பது நல்லது.

**மருத்துவரை எப்போது அணுக வேண்டும்?**

நாள் ஒன்றுக்கு 100 முடிகளுக்கு மேல் உதிர ஆரம்பித்தாலோ, வட்ட வடிவில் திட்டுத் திட்டாய் முடி உதிர்ந்தாலோ, வைத்தியரை அணுகுவது நல்லது. நடுவகிடு விரி வடைந்து மண்டை தெரிதல், முன்மண்டையில் முடிஉதிர்தல், முடியின் நிறம் பழுப்படைந்து எளிதாக உடைதல், முடியின் அடர்த்தி குறைதல், உள் மண்டை வெளியே தெரிதல்போன்ற ஏதேனும் அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக, தோல் வைத்தியரை அணுகுவது சிறந்தது.

Health Care மருத்துவ உலகம்
உங்கள் நலம் உங்கள் கைகளில்

# 'இனம்' படத்தில் ஈனத்தனம்

## வைகோ கடும் கண்டனம்

(சென்னை)

'இனம்' என்ற தமிழ் திரைப் படத்தில் தமிழர்கள் கொச்சைப்படுத்தப்பட்டு சித்திரிக்கப்பட்டுள்ளமைக்கு ம.தி. மு.க. பொதுச் செயலாளர் வைகோ கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

'இனம்' எனும் திரைப்படத்தை, கேரளத்தைச் சேர்ந்த சந்தோஷ் சிவன் இயக்கி உள்ளார். 'பயங்கரவாதி' என்ற பெயரில் அவர் முன்பு வெளியிட்ட திரைப்படம், ஈழ விடுதலைப் போராட்டத்தைக் கொச்சைப் படுத்தி, கேவலமான முறையில் சித்திரித்தது.

இப்பொழுது அவர் இயக்கிய 'இனம்' எனும் திரைப்படத்தைப் பார்த்துவிட்டு இயக்குநர் புகழேந்தி தங்கராசு என்னிடம் அதுகுறித்து விபரித்தபோது, தாங்கமுடியாத அதிர்ச்சிக்கு ஆளானேன்.

ஈழ விடுதலைப் போரையும், அங்கு ஈழத்தமிழர்கள் பட்ட அவலங்களையும் ஒரு பக்கத்தில் காட்டிக் கொண்டே வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது போல, பெரும்பான்மை இனத்தவரின் ஆலகால விடத்தை படம் முழுக்க பரவ விட்டுள்ளார்.

சிறுவர்களும் இப்படம் பார்க்கலாம் என்ற 'ஏ' சான்றிதழ் பெற்றுள்ள இத்திரைப்படத்தில், சின்னஞ் சிறுவர்களும், சிறுமிகளும் கட்டாயமாக புலிப்படையில் சேர்க்கப்படுவதாகவும், தங்க வைக்கப்படும் இடங்களில் அவர்கள் அச்சிறு வயதிலேயே பாலியல் இச்சைக்கு ஆட்பட்டு, சேட்டைகள் செய்வதாகவும் எடுக்கப்பட்டுள்ள விதம் காம இச்சையைத தூண்டும் வகையில் கீழ்த்தரமாக அமைந்துள்ளது.

அச்சிறு வயதிலேயே அவர்கள் தருமணம்செய்துகொள்ளும்கட்டாயச் சூழ்நிலை இருந்ததாகவும் படம் கூறுகிறது:

பாடசாலை வகுப்பு நடக்கும் போது, கரும்பலகையில் உள்ள பாடத்திட்டத்தை அழித்து விட்டு, விடுதலைப் புலிகளின் காணொலி திரைப்படம் காட்டப்பட்டதாக ஒரு அபாண்டமான பொய்யை காட்சியாக்குகிறார்.

முள்ளிவாய்க்கால் இறுதி யுத்தத்தின் போது, ஒரு இளந்தமிழ் பெண் பெரும்பான்மை இனத்தவர்களால் பலாத்காரம் செய்யப்பட்ட ஒரு காட்சியை அமைத்து விட்டு, அதன் பின்னர் கால்களின் மூட்டுகளுக்கு மேல் அந்த அபலைப பெண்ணின் அங்கங்களை பெருமளவுக்கு காண்பித்துவிட்டு, அப்பெண நீரால் தனனை சுத்தப்படுத்திக் கொள்வதாக அமைத்துள்ள காட்சி வக்கிர புத்தி படைத்தவர்களுக்கு பாலியல் உணர்வைத தூண்டும் முறையில் படமாககப் பட்டுள்ளது.

குளத்துத் தண்ணீரில் அந்தப் பெண் நிற்கும்போது உடைக்கப்பட்ட ஒரு புத்தர் சிலையின் தலையும் முகமும் கரையில் தெரியும் வகையில் காட்டப்பட்டுள்ளது.

இனியொரு காட்சியில், ஓடையில் வரும் நீரை, குடிப்பதற்காக குவளையில் புத்த பிட்சு நிரப்புவதாகவும், குடுவையின் வாயில் துணியை வைத்துப் பிடிப்பதாகவும், குடுவையின் வாய்ப் புறத்துத் துணியில் சிக்கும் சிறிய மீன்களை மண்டும் ஓடை நீரிலேயே உயிருடன் நீந்த விட்டுவிடுவதாகவும் காட்சி சித்திரிக்கிறது.

இதன் நோக்கம் என்ன? புத்த பிக்குகள் மனிதாபிமானிகள் என்றும், தமிழர்கள் புத்தர் சிலையையே உடைப்பவர்கள் என்றும் தமிழ் இனத்தின் மீது களங்கம் சுமத்துவது தான நோக்கம் ஆகும்.

இலங்கையில் கடந்த 66 ஆண்டுகளாக ஈழத் தமிழர்களுக்கு நீதி மறுக்கப்பட்டதற்கும், போடப்பட்ட ஒப்பந்தங்கள் கிழித்து எறியப்பட்டதற்கும், ஐ.நா. சபை பிரதிநிதிகள் தாக்கப்பட்டதற்கும், புத்த பிக்குகளே பின்னணிக் காரணம் ஆவார்கள்.

2170 இந்து கோயில்களை பெரும்பான்மை இனத்தவர்கள் இடித்துத் தகர்க்க புத்து பிக்குகளே ஏவல் செய்தனர்.

இத்திரைப்படத்தில் கதைக்கு எந்த விதத்திலும் தொடர்பில்லாத ஒரு காட்சியை அமைத்து, நந்திக் கடல் பகுதியில் விடுதலைப புலிகளின் தலைவர் பிரபாகரன் இறந்து கிடந்ததாக படம் தெரிவிக்கிறது.

மொத்தத்தில் பெரும்பான்மை இனஅரசினமறைமுகப்பின்னணியில், அந்த அரசின் கைக்கூலியாக கேரளத்து சந்தோஷ்சிவன் படத்தை இயக்கி உள்ளார்.

சமீப காலத்தில் வெளியான சனல்-4 காணொலிகள் எப்படி எல்லாம் ஈழத் தமிழ் பெண்களும், இளைஞர்களும் கொடூரமாக வதைக்கப்பட்டு கொல்லப்பட்டனர் என்ற உண்மையை நிரூபிக்கின்றன.

அதிலும்பெண்களுக்கு இழைக்கப்படும் கோர காட்சிகளை கண்களால் காண முடியாது.

அந்த சம்பவம் பற்றி நாவால் கூற முடியாது, காதுகளால் கேட்க முடியாது, நெஞ்சு கொதிக்கிறது, தன் மானத் தமிழ் இரத்தம் துடிக்கிறது.

மலையாளிகளைக் கொச்சைப் படுத்தி இதுபோன்ற திரைப்படத்தைத் தயாரித்து கேரளத்தில் வெளியிட யாராவது முனைவார்களா? தமிழர்கள் என்ன சோற்றால் அடித்த பிண்டாங்களா? சொரணையற்ற ஜென்மங்களா?

இளம் தமிழர்களே, மாணவர்களே சிந்தியுங்கள். இந்தத் திரைப்படம் தமிழகத்துத் திரையரங்காங்களில் ஓடுவது தமிழர்களின் முகத்தில் காறி உமிழப்படும் அவமானம் என்பதை உணர வேண்டுகிறேன்.

திரைக்கலை என்ற பெயரால் தமிழ் இனத்தின் நெற்றியில் மிதிக்க முற்படுவதும், களங்கச் சேற்றைப் பூச முனைவதும் ஈனத்த னமான வேலையாகும்.

அதை ஒருபோதும் சகித்துக் கொள்ள முடியாது என வைகோ ஆவேசமாக தெரிவித்துள்ளார்.(செ)

# வாழ்க்கைச் செலவு பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும்

## வாசுதேவ நாணயக்கார தெரிவிப்பு

(கொழும்பு)


மக்களின் வாழ்க்கைச் செலவு பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டுமென தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

நடைபெற்று முடிந்த மாகாண சபைத் தேர்தலில் ஆளும் கட்சி வெற்றியீட்டியுள்ளது. எனினும், அரசாங்கம் மீள சிந்திக்க வேண்டும் என்பதனை நினைவுபடுத்தும் வகையிலும் முடிவுகள் அமைந்துள்ளன.

• ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஜே.வி.பி. பின்னடைவுகள்ள எதிர் நோக்கி வருகின்றன. எனினும், ஆளும் கட்சி தனது பலத்தை மேலும வலுப்படுத்திக் கொள்ள வேண்டியது அவசியமாகின்றது.

மக்களின் வாழ்க்கைச் செலவு பிரச்சினைக்கு உரிய முறையில் தீர்வுத் திட்டமொன்றை முன் வைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பல்லவி

எங்கு தேடினாய் இறைவனை நீ
இங்கு காணாமல் (எங்கு)

சரணங்கள்

அங்குமிங்கும் ஓடியே அவதிப்படுகிறாய்
பங்கு போட்டுப் பார்க்கிறாய் பரிதவித்து வாடுகிறாய்
(எங்கு)
எங்கள் தெய்வம் உங்கள் தெய்வம்
என்று வாது பேசுகிறாய்
சாதி சமயமென்று சண்டைப்படுகிறாய்
தத்துவத்தை அறியாமல் சங்கடப்படுகிறாய்
ஓதியுமுணராமல் உண்மையறிந்தவன்போல்
ஊரெங்குஞ் சென்றுநீ பிரசங்கம் பண்ணுகிறாய்
(எங்கு)

பல்லவி

வீரமாமயில் ஏறும்வேலவ-விளங்குங்
கௌரி பாலகா வா

அனுபல்லவி

கானக்குறத்தி மகிழும் பாதா
காக்கும் கடவுள் துதிக்கும் நாதா

சரணம்

எனக்கும் உனக்கும் பேதமேனோ
எடுத்துச் சொன்னால் போதம் போமோ
மணக்குஞ் சோலை நல்லூர் வாசா
வணங்கும்யோகசுவாமிநேசா

*ச. கனகசபாபதி*

# தூக்குத்தண்டனை சட்டத்தை நாட்டில் நடைமுறைப்படுத்துங்கள்

## குற்றச் செயல்களை குறைக்க இதுவே வழி அமைச்சர் கரலியத்த

(கொழும்பு)

**நாட்டில் இடம்பெறும் குற்றச் செயல்களை குறைக்க வேண்டுமாயின் உடனடியாக மீண்டும் அமுலுக்கு வரும் வகையில் தூக்குத்தண்டனை சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டுமென சிறுவர் மற்றும் மகளிர் விவகார அமைச்சர் திஸ்ஸ கரலியத்த தெரிவித்துள்ளார்.**

நுவரெலியா மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற மகளிர் தின விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்,

நாட்டில் நடைபெறுகின்ற குற்றங்களை ஒழிப்பதற்கு பொது மக்கள் பொலிஸாருக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். குற்றங்கள் நடைபெறுகின்ற எல்லா இடங்களிலும் பொலிஸார் நின்று கொண்டிருக்க முடியாது.

எனவே, குற்றச் செயல்கள் நடைபெறுவதை கண்டால் அல்லது அது தொடர்பான தகவல்கள் கிடைத்தால் உடனடியாக அருகிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கு நேரடியாகவோ அல்லது அதுபற்றி தொலைபேசி மூலமாகவோ தகவல்களை வழங்க முன்வர வேண்டும். அப்படி நாம் செயற்படுவோமானால் எமது நாட்டில் நடைபெறும் குற்றச் செயல்களை குறைத்துக் கொள்ள முடியும்.

பெண்கள் சிறுவர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பாக முறையிடுவதற்கு தற்பொழுது 1929 என்ற தொலைபேசி இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த இலக்கத்துடன் 24 மணித்தியாலமும் முறைப்பாடு செய்யலாம்.

இது தவிர 1938 என்ற தொலைபேசி இலக்கத்துடனும் பெண்களுக்கு ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பாக முறையிட முடியும். இது மூன்று மொழிகளிலும் 24 மணி நேரமும சேவையில் இருக்கும்.

இப்படி பல்வேறு விதமான சேவைகளை நாம் ஆரமபித்துள்ளோம் என்றார். (2)

## படைச்சிப்பாய்கள் கஞ்சாவுடன் கைது

கஞ்சா வைத்திருந்த இரண்டு புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த சிப்பாய்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மொனராகல பிரதேசத்தில் வைத்து இருவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர். சந்தேக நபர்களிடமிருந்து கஞ்சா போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளது.

இருவரும் கதிர்காமம் இராணுவ முகாமில் புலனாய்வு உத்தியோகத்தர்களாக கடமையாற்றியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (2)

## ஞானச் சுடர் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவையின் பங்குனி மாத வெளியீடாக ஞானச்சுடர் வெளிவந்துள்ளது.

இதில் சகத்தினுற்பத்தி சிறி ரமண நினைவலைகள், தாய்மையும் சைவமும் எனப் பல கட்டுரைகளை தாங்கி வெளிவந்துள்ளன. (2)





*யா/மாணிக்கவாசகர் வித்தியாலயத்தில் நடைபெற்ற சிறுவர் சந்தையொன்று அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் சந்தையில் வலம்புரி பத்திரிகை விற்பனையில் ஈடுபடும் மாணவியையும் படங்களில் காணலாம். (படங்கள்:-கரணவாய் செய்தியாளர்)*

## இலங்கை மீதான விசாரணைக்கு 14 இலட்சம் அமெரிக்க டொலர் தேவை

இலங்கை அரசுக்கு எதிராக ஐ.நா.மனிதவுரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கு 14 இலட்சத்து 60 ஆயிரம் அமெரிக்க டொலர் தேவை என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

ஐ.நா. மனிதவுரிமைகள் சபையில் கடந்த வாரம் இலங்கைக்கு எதிரான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. குறித்த தீர்மானம், இலங்கையில் நடந்ததாகக் கூறப்படும் மனிதவுரிமைகள் மீறல்கள், போர்க் குற்றங்கள் தொடர்பில் சுயாதீனமான விசாரணைகளை ஐ.நா. மனிதவுரிமைகள்ஆணையாளர் அலுவலகம் மேற்கொள்வதற்கு அங்கீகாரம் வழங்கியுள்ளது.

பிரேரணையில் கூறப்பட்டுள்ள விடயங்களை நடைமுறைப்படுத்தி முடிப்பதற்கு 14 இலட்சத்து 60 ஆயிரம்அமெரிக்க டொலர்செலவாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தொகை இலங்கை நாணயப் பெறுமதியின்படி 190.822 மில்லியன்ரூபாவாகும். இதேவேளை இத்தகைய பெருந்தொகை நிதி ஐ.நா மனிதவுரிமைகள் சபையில் இல்லை என்பதை காரணம் காட்டியே, பாகிஸ்தான் குறித்த தீர்மானத்தை இடைநிறுத்தும்பிரேரணையை முன்வைத்திருந்தது.

இருப்பினும் குறித்த நிதியை ஐ.நா மனிதவுரிமைகள் சபையின் விசேட வரவு செலவுத் திட்டம் ஊடாகப் பெற்றுக்கொள்ளலாம்என்று ஐ.நா. மனிதவுரிமைகள் சபை தெரிவித்திருநதது. (2)

## போதைப்பொருள் வியாபாரத்துடன் 17 சிறை அதிகாரிகளுக்கு தொடர்பு

நாடு முழுவதும் உள்ள சிறைச்சாலைகளுக்குள் ஹெரோயின் உட்பட சட்டவிரோத பொருட்களை அதிகளவில் எடுத்துச் செல்வது சிறைச்சாலை அதிகாரிகள் என சிறைச்சாலை புலனாய்வுப் பிரிவினர் கண்டறிந்துள்ளனர்.

சில அரசியல்வாதிகளும் இதற்கு உறுதுணை வழங்கி வருவதும் தெரியவந்துள்ளது.

சிறைச்சாலைகளுக்குள் ஹெரோயின், கஞ்சா உட்பட சட்டவிரோத பொருட்களை எடுத்துச் சென்றவர்கள் கடந்த காலங்களில் கைது செய்யப்பட்ட போதிலும் இது திட்டமிட்ட குற்றச் செயற்பாடடு நடவடிக்கை என்பது கண்டறியப்படவில்லை.

கொழும்பு மகசீன் சிறைச்சாலையில் பணியாற்றி வரும் 17 சிறை அதிகாரிகள் போதைப் பொருள் வியாபாரத்துடன் சம்பந்தப்பட்டுள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளது என சிறைச்சாலையின் தகவல்கள் தெரிவிக்கின்றன. (2)

## நாட்டில் ஏற்பட்டுள்ள அபிவிருத்தியை மக்கள் புரிந்து கொண்டுள்ளனர் பிரதமர் ஜயரட்ன தெரிவிப்பு

(கொழும்பு)

இன, மத பேதங்களைக் களைந்து மக்கள் அரசாங்கத்தை வெற்றி பெறச் செய்துள்ளதாக பிரதமர் டி.எம். ஜயரட்ன தெரிவித்துள்ளார். இன, மத, கட்சி பேதமின்றி நாட்டின அனைத்து மக்களும் இம்முறை மாகாணசபைத் தேர்தலில் ஆளும் கட்சிக்கு ஆதரவளித்துள்ளனர்.

பயங்கரவாதம் இல்லாதொழிக்கப்பட்டதன் பின்னர், நாட்டில் ஏற்பட்டுள்ள பாரிய அபிவிருத்தியை மக்கள் புரிந்து கொண்டுள்ளனர். சில தரப்பினர் நாட்டை துண்டாடுவதற்கு முயற்சிக்கின்றனர். எனினும், நாட்டை நேசிக்கும் பலர் அதனை எதிர்க்கின்றார்கள் என்பது தேர்தல் முடிவுகள் மூலம் வெளிச்சமாகியுள்ளது.

ஜனாதிபதியினால் ஆரம்பிக்கப்பட்ட மக்கள் நல அபிவிருத்தித் திட்டங்கள் தொடரச்சியாக முன்னெடுக்கப்படும் என பிரதமர ஜயரட்ன தெரிவித்துள்ளார். (2)

## இலங்கை - இந்திய உடன்படிக்கையை முழுமையாக அமுல்படுத்த வேண்டும் இராஜதந்திரி தயான் வலியுறுத்து

(கொழும்பு)

இலங்கை - இந்திய உடன்படிக்கையை நாட்டின் இறையாண்மையின் கேடயமாக பயன்படுத்திக்கொள்ளும் வகையில் அதனை முழுமையாக அமுல்படுத்த வேண்டும் என முன்னாள் இராஜதந்திரியான கலாநிதி தயான் ஜயதிலக்க தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் தமிழகத்தில் ஏற்படும் எதிர்ப்புகளை சமாளிக்க முடியும் எனவும், முழு இந்தியாவையும் எதிராக கருதி செயற்பட்டால், தமிழகத்தின் எதிர்ப்புகளை சமாளிக்க முடியாது என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்த இரண்டு விடயங்கள் தொடர்பில் அரசாங்கம் கடந்த காலங்களில் உரிய முறையில் செயற்பட்டதை காண முடியவில்லை.

அதேபோல் விடுதலைப் புலிகளின் போர் இயந்திர கட்டமைப்பை முற்றாக தோற்கடித்த போதிலும் புலிகளின் மேலதிக சர்வதேச சக்தியை தோற்கடிக்கவில்லை என்பதை அரசாங்கம் மறந்து விட்டது.

சர்வதேசத்தில் உள்ள புலிகளின் சக்திகள் பாரிய முன்னணியாக செயற்பட்டனர்.

இந்த முன்னணியில் ஒரு பகுதியினர் தமிழகத்தில் இருக்கும் இனவாத அரசியல் நீரோட்டத்தை சேர்ந்தவர்கள்.

இந்தியாவின் உதவியின்றி இந்த சர்வதேச சக்திகளை தோற்கடிக்க முடியாது.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் குறித்து அதிகளவில் கவனம் செலுத்தப்பட்டு வந்ததுடன் பேசப்பட்டு வந்த கருப்பொருளா கவும் இருந்தது.

ஜெனீவாவில் இந்தியா இம்முறை என்ன நிலைப்பாட்டை எடுக்கும் என்பது பற்றி அனைவரும் எதிர்பார்த்திருந்தனர்.

இப்படியான சூழ்நிலையில், இந்தியா - .இலங்கை இடையிலான தொடர்புகள், இரு நாடுகள் சார்ந்த பிரச்சினைகளை ஆழமாக ஆராய்ந்து பொருத்தமான நடவடிக்கை எடுப்பது முக்கியமானது என்பதை புதிதாக கூறவேண்டியதில்லை என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துணுக்காய் கல்வி வலயத்தின் தமிழ்த்தினப் போட்டி முடிபுகள்

(மல்லாவி)

துணுக்காய் வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட வலயமட்ட தமிழ்த்தினப் போட்டி முடிவுகளை துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார்.

இதன்படி முதல் மூன்றிடங்களைப் பெற்றவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு,

**எழுத்தாக்கம் பிரிவு 1**

பு.கேதீசன் (மு/பாண்டியன்கு ளம் ஆ.பா.),பா.அபிசன் (மு/மயில் வாகனம் த.வி.), வி.திருவரங்கன் (மு/ஒலுமடு தமிழ் வித்தியாலயம்)

**கட்டுரை வரைதல் பிரிவு-2**

ர.பிறைநிலா (மு/யோகபுரம் ம.வி.),கு.லதாஜி (மு/நட் டாங்கண்டல் அ.த.க.பா.),சி.சதானுகா (மு/மல்லாவி ம.க.)

**பிரிவு-3**

சு.சுடர்நிலா (மு/முத்தையன் கட்டு இ.க.அ.த.க.பா.), கி.ஆரணி (மு/ஒட்டுசுட்டான் ம.வி.),ம.அனற்ராயினி (மு/மல்லாவி ம.க.)

**கட்டுரை வரைதல், இலக்கியம் நயத்தல் பிரிவு 4**

மு.துலைக்சனா (மு/பாலிநகர் ம.வி.),ச. பிரியங்கா (மு/ஒட்டுசுட்டான் ம.வி.), சு.கஜனி (மு/பாண்டியன்குளம் ம.வி.)

**தமிழியற் கட்டுரை வரைதல்- பிரிவு 5,**

ம.கேதுஜா (மு/ முத்தையன் கட்டு வ.க.ம.வி.),கா.அனோஜா(மு/ஒட்டுசுட்டான் ம.வி.)வி.குயிலினி (மு/பாலிநகர் ம.வி.) (2-9-15)

(தொடரும்)

## சதுர்த்தி

(யாழ்ப்பாணம்)

வண்ணார்பண்ணை வடகிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தானத்தில் நாளை மறுதினம் வியாழக்கிழமை மாலை 5.45 மணிக்கு சதுர்த்தி உற்சவம் நடைபெறவுள்ளது.

விசேட பூசைகளைத் தொடர்ந்து விநாயகப் பெருமான் வீதிவலம் வந்து அருள்பாலிப்பார். (2)

## பிரிவுத்துயர் பகிர்வு




### திருமதி திலகர் எஸ்தர்

கண்டியைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனி, லண்டன் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட திலகர் எஸ்தர் கடந்த 26 ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் திருப்பலி 5 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு All Saints Church, Kenton Road, Harrow, Middlesex, HA3 OUL ,UK என்னும் முகவரியில் ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

### திருமதி சுந்தரலிங்கம் பெர்ணத்தேத்



நாரந்தனை மேற்கைப் பிறப்பிடமாகவும் தற்போது இல.50 வீட்டுத்திட்டம் காத்தர் சின்னக்குளம் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரலிங்கம் பெர்ணத்தேத் கடந்த 29 ஆம் திகதி சனிக்கிழமை அன்று காலமானார்.


அன்னாரின் திருப்பலி நாளை புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு வவுனியா புனித அந்தோனியார் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் வவுனியா இறம்பைக்குளம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.



### திருமதி அழகராஜா சிசிலியா

யாழ்ப்பாணம் 3 ஆம் குறுக்குத்தெருவை பிறப்பிடமாகவும் பிரான்சை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட அழகராஜா சிசிலியா கடந்த 29 ஆம் திகதி சனிக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் திருப்பலி நாளை மறுதினம் வியாழக்கிழமை பிற்பகல் 12.30 மணிக்கு "Paroisse Sainte- Therese" 28ter Rue Georges Douret- 93220 Gagny என்னும் தேவாலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

### செல்லப்பா கண்ணகைப்பிள்ளை



நுணாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் நுணாவில் சந்தியை வசிப்பிடமாவும் கொண்ட செல்லப்பா கண்ணகைப்பிள்ளை கடந்த 29 ஆம் திகதி சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று காலை 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் குச்சப்பிட்டி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

## எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து செயற்பட்டாலும் ஐ.ம.சு.முன்னணியை தோல்வியுற செய்ய முடியாது

## சுசில் பிரேமஜயந்த கூறுகின்றார்

**ஐக்கிய தேசியக் கட்சி தலைமைத்துவ சபை அமைத்து முதற் தடவையாக செயற்பட்ட தேர்தலில் கட்சியின் கோட்டையே வீழ்ந்து விட்டதென ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த கவலை தெரிவித்துள்ளார்.**

அரசாங்கத்தின் தேர்தல் வெற்றி குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்ட வாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில், எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஓரணியில் திரண்டு எதிர்வரும் தேர்தலை எதிர்கொண்டாலும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு அது ஒன்றும் பெரிய சவாலல்ல.

இம்முறை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கான தபால் மூல வாக்குகள் நூற்றுக்கு அறுபது வீத வெற்றியை ஈட்டியுள்ளதாகக் குறிப்பிட்ட அமைச்சர் சில தொகுதிகளின் தேர்தல் முடிவுகள் மற்றும் அவற்றின் சத விகிதங்கள் மூலம் இது புலப்படுவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இம்முறை இரண்டு மாகாண சபைகளுக்குமான தேர்தல் முடிவுகளை நோக்குகையில் 2009 மாகாண சபைத் தேர்தலை விட அதிக வாக்குகளை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பெற்றுக் கொண்டுள்ளது.

அதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சிக்கு அதன் கோட்டையைக் கூட பாதுகாத்துக்கொள்ள முடியாமற் போயுள்ளது.

அனைத்துத் தொகுதிகளிலும் வாக்குகள் குறைந்திருந்த நிலையில் ஐ.தே.க தலைமைத்துவ சபை அமைத்து எதிர்கொண்ட முதல் தேர்தல் இது. மக்கள் மனங்களையும் மக்கள் தேவைகளையும் அதனால் உணர முடியாமற் போனது. மக்கள் நம்பிக்கை வீழ்ச்சியடைந்ததாலேயே அக்கட்சி இத்தகைய தோல்வியை சந்திக்க நேர்ந்தது.

அக்கட்சியின் தலைமைத்துவ சபையும் இரண்டாகச் செயற்படுகிறது. சஜித் பிரேமதாசவுக்கு திஸ்ஸ மஹாராமயைத் தவிர அம்பாந்தோட்டை மாவட்டத்தில் எந்தவொரு தேர்தல் தொகுதியிலும் 20 சதவீத வாக்கைக் கூட பெற முடியாமல் போனது.

எதிர்காலத்தில் அனைத்து தேசிய மட்டத் தேர்தல்களிலும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அமோக வெற்றிபெறும். அதற்கான பலம் முன்னணியிடமுண்டு. எதிர்க கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து செயற்பட்டாலும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை தோல்வியுறச் செய்ய முடியாது எனவும் அமைச்சர் தெரிவித்தார். (2)

## ஸ்திரத்தன்மையற்ற நாடுகளையே மேற்குலக நாடுகள் விரும்புகின்றன

(கொழும்பு)

ஸ்திரத்தன்மையற்ற நாடுகளே மேற்குலக நாடுகளுக்கு அவசியம் எனவும் இந்த நாடுகள் இணைந்து மத்திய கிழக்கில் ஆட்சியாளர்களை விரட்டிய, அனைத்து நாடுகளும் தற்போது ஸ்திரமற்ற நிலைமையில் இருப்பதாகவும் அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

இலங்கை தற்போது ஐக்கியமாக முன்னோக்கி செல்வதால், நாட்டில் இனங்களுக்கு இடையில் மீண்டும் பிளவுகளை உருவாக்கும் தேவை மேற்குலக நாடுகளுக்கு இருப்பதாகவும் அமைச்சர் கூறியுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் அமைதி மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் தேவை மேற்குலக நாடுகளுக்கு இல்லை.

அமைதி, நல்லிணக்கம் என்ற வார்த்தைகளை முன்னால் போட்டு நாட்டில் காணப்படும் நல்லிணக்கத்தை இல்லாமல் செய்ய வேண்டும் என்பதே அவர்களின் தேவை.

மத்திய கிழக்கு நாடுகளில் தலையீடுகளை மேற்கொண்ட மேற்குலக நாடுகள் அந்நாடுகளின் ஆட்சியாளர்கள் கெட்டவர்கள் எனக் கூறி அவர்களை விரட்டின.

அங்கு இவர்கள் சிறந்த நாடுகளையா உருவாக்கினர்? லிபியா, எகிப்து போன்ற நாடுகளுக்கு இன்று என்ன நேர்ந்துள்ளது? அந்நாடுகளில் தினமும் ஒருவருக்கு ஒருவர் கொலை செய்து கொள்கின்றனர்.

ஒரு நாள் இருக்கும் ஆட்சியாளர் மறுநாள் இல்லை. அந்நாடுகள் சீரழிந்து போயுள்ளன என்றார். (2)

## வெடிபொருட்களுடன் பெண் கைது

(கொழும்பு)

அம்பாறை - அரந்தலாவை பிரதேசத்தில் வெடிபொருட்கள் வைத்திருந்த பெண் ஒருவரை பொலிஸார் சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர்.

அரந்தலாவ - மஹாஓய - பியசரகம பிரதேசத்தில் வைத்து குறித்த பெண் கைது செய்யப்பட்டு ள்ளார்.

குறித்த பெண்ணிடம் கஞ்சா போதைப் பொருள் மற்றும் வெடி பொருட்கள் காணப்பட்டதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கைது செய்யப்பட்ட பெண் தெஹியத்தகண்டிய நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

குற்றச் செயல்களில் ஈடுபடும் நோக்கில் குறித்தபெண் வெடி பொருட்களை வைத்திருந்தாரா என்பது குறித்து மஹாஓய பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (2)

## ஐ.நா. மனிதவுரிமைகள் பேரவையின் தீர்மானத்தை அமெரிக்கா வரவேற்கிறது

### வெள்ளை மாளிகை ஊடகச் செயலாளர் அறிக்கை

(கொழும்பு)

ஐ.நா மனிதவுரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் நிறைவேற்றப்பட்டதை வரவேற்று அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் வெள்ளை மாளிகை ஊடகச் செயலாளர் பணியகத்தில் இருந்து அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

வெள்ளை மாளிகையில், ஜனாதிபதி ஒபாமாவின் நேரடிக் கண்காணிப்பில் செயற்படும் தேசிய பாதுகாப்புச் சபையின் பேச்சாளர் கைற்லின் ஹேடனினால் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு,

"சகல இலங்கையர்களுக்கும் நீதி, பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கத்தை உறுதிப்படுத்த, அர்த்தமுள்ள நடவடிக்கையை எடுக்கும்படி, இலங்கை அரசாங்கத்தைக் கோரும், இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனிதவுரிமைகளை ஊக்குவிப்பது தொடர்பான, ஐ.நா மனிதவுரிமைகள் பேரவையின் தீர்மானத்தை அமெரிக்கா வரவேற்கிறது.

போரின் போது, இருதரப்பினராலும் இழைக்கப்பட்ட மோசமான மனிதவுரிமை மீறல்கள், துஷ்பிரயோகங்கள், குறித்த குற்றச்சாட்டுகள் குறித்து விசாரிக்கவும், தொடர்ந்து மோசமடைந்து செல்லும் இலங்கையின் மனிதவுரிமைகள் நிலை குறித்து கண்காணிக்கவும், கோரும், இந்தத் தீர்மானத்துடன் நாம் இணங்குகிறோம்.

இந்த தீர்மானம், இலங்கையின் தற்போதைய மனிதவுரிமைகள் நிலை குறித்த மற்றும் உலகளாவிய உரிமை மறுப்பு பற்றிய கவலையையும் மற்றும் இலங்கை மக்கள் அனைவரும் தமது விருப்பங்களை அடையக் கூடிய, ஒரு எதிர்காலத்தை உருவாக்க, முக்கியமான அடிப்படை உரிமைகள் மதிக்கப்பட வேண்டும்.*

இலங்கையில் உள்ள சகல மக்களுக்கும் அமைதி, உறுதிப்பாடு, சுபீட்சம் என்பன கிடைப்பதற்கு, இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்ற அனைத்துலக சமூகம் கடமைப்பட்டுள்ளது என்ற தெளிவான செய்தி இந்த வாக்கெடுப்பின் மூலம் எடுத்துக் கூறப்பட்டுள்ளது" என்றும் கூறப்பட்டுள்ளது. (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கீரிமலை பிரதானவீதியை புனரமையுங்கள்

(தெல்லிப்பழை)

அளவெட்டி கீரிமலை பிரதான வீதி நீண்ட காலமாக புனரமைப்பு செய்யப்படாமையால் வீதியின் இரு மருங்கும் குன்றும் குழியுமாக காணப்படுகிறது.

இதனால் சீரான பயணத்தை மேற்கொள்ள முடியவில்லை என்று அப் பிரதேச மக்கள் வீதி அதிகார சபைக்கு தெரியப்படுத்தியுள்ளதுடன் வீதியையும் புனரமைக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவ் வீதி சீரின்மையால் விபத்துக்களும் இடம்பெறுகின்றது என அப் பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (2-28)

## நடிகை மனோரமா வைத்தியசாலையில்



பிரபலநகைச்சுவைநடிகைமனோரமா திடீர் மூச்சுத்திணறல் காரணமாக நேற்று முன்தினம் இரவு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அவருக்கு வைத்தியர்கள் தீவிர சிகிச்சை அளித்து வருகிறார்கள். அவருடைய உடல் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக கூறப்படுகிறது. (2)

# தமிழ் மக்களின் நலன் கருதியே ஐ.நா.தீர்மானம் நிறைவேற்றியது

## மொஹான் சமரநாயக தெரிவிப்பு

(கொழும்பு)

**நவநீதம்பிள்ளை தலைமையிலான சர்வதேச விசாரணை என்ற பேச்சுக்கே இடமில்லை. இதனை இலங்கை அரசாங்கம் முழுமையாக நிராகரிக்கின்றது என ஜனாதிபதியின் பேச்சாளர் மொஹான் சமரநாயக்க தெரிவித்துள்ளார்.**

ஜெனீவாவில் அமெரிக்காவின் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாடு தொடர்பாக கருத்து தெரிவிக்கையிலேயே ஜனாதிபதியின் பேச்சாளர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

மாகாண சபைத் தேர்தல் முடிவுகள், வெளிநாடுகளின் அழுத்தங்கள் தொடர்பாக ஆராய்ந்து ஜெனவாவில் அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பாக அரசாங்கம் முடிவெடுக்குமென்றும் அவர் கூறியுள்ளார்.

ஜெனீவாவில் ஐ.நா. மனிதவுரிமை ஆணைக்குழுவில் இலங்கைக்கு எதிராக கொண்டு வரப்பட்ட பிரேரணையானது அரசியல் நோக்கம் கொண்டதாகும்.

அதுமட்டுமல்லாது தமிழ், சிங்கள முஸ்லிம், கிறிஸ்தவ மக்களிடையே தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் அரசாங்கத்தின் முயற்சிகளுக்கும் இப்பிரேரணையானது முட்டுக்கட்டை போடுவதாகவேயுள்ளது.

முப்பது வருட கால யுத்தத்தின் பின்னர் அரசாங்கம் பல பிரிவுகளாக மீள் கட்டமைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

முதலாவதாக, இடம்பெயர்ந்த மக்களுக்கு வாழ்விடங்களை அமைத்துக் கொடுத்து அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதில் அரசாங்கம் கவனம் செலுத்தியது.

தற்போது அனைத்து இனங்களுக்கும் இடையே தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

அவ்வாறானதோர் சூழ்நிலையில் ஜெனீவாவில் இலங்கைக்கு எதிராக பிரேரணையை நிறைவேற்றியதானது தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் அரசின் முன்னெடுப்புக்களுக்கு முட்டுக்கட்டையாக அமைந்துள்ளது.

அதேவேளை, இலங்கையின் தமிழ் மக்களின் நலன்களில் இந்தியா அதிக அக்கறை கொண்டுள்ளது.

எனவே தான் இலங்கை அரசாங்கம் இனங்களிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முயற்சிகளை மேற்கொண்டு வருவதால் அதற்கு ஒத்துழைப்பு வழங்க வேணடுமென்றும் இலங்கை அரசாங்கம் தமது நடவடிக்கைகளை முன்னெடுக்க சந்தர்ப்பங்களை வழங்க வேண்டுமெனக் கூறி ஜெனீவாவில் வாக்களிப்பதிலிருந்து விலகிக் கொண்டது.

உண்மையிலேயே இது தமிழ் மக்களின் நலன்களைக் கருத்தில் கொண்ட தீர்மானமாகும்.

ஐ.நா. மனிதவுரிமை ஆணைக்குழுவின் ஆணையாளர் நாயகம் நவநீதம்பிள்ளை பக்கச்சார்பு கொணடவர்.

எனவே அவர் தலைமையிலான சர்வதேச விசாரணை என்ற பேச்சுக்கே இடமில்லை.

அத்தோடு இறையாண்மை கொண்ட நாடென்ற ரீதியில் சர்வதேச விசாரணையை நிராகரிக்கின்றோம். இதுவே அரசாங்கத்தின் நிலைப்பாடாகும்.

நடந்து முடிந்த மாகாண சபைத தேர்தல் முடிவுகளோடு 2012, 2013 ஆம் ஆண்டு தேர்தல்கள் முடிவுகளை ஒப்பீடு செய்து பார்ப்பதோடு, வெளிநாட்டு அழுத்தங்கள், பொருளாதார விடயங்கள் தொடர்பாக ஆராய்ந்து அடுத்த ஜெனவா கூட்டத் தொடருக்கு முகம் கொடுப்பது தொடர்பில் தீர்மானம் எடுக்கப்படுமென்றும் அவர் தெரிவித்தார். (2)

# ஆப்கான் ஜனாதிபதி தேர்தலை நடத்த விடமாட்டோம்

## தலிபான்கள் மிரட்டல்

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலை சீர்குலைக்க போவதாக தலிபான்கள் மிரட்டல் விடுத்துள்ளனர்.

ஆப்கானிஸ்தானில் நடைபெறவிருக்கும் ஜனாதிபதி தேர்தலுக்கு ஒரு வாரமே உள்ள நிலையில், அங்குள்ள தேர்தல் அலுவலகத்தை நேற்று முன்தினம் முற்றுகையிட்டு தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

எதிர்வரும் 5 ஆம் திகதி நடக்கவுள்ள ஜனாதிபதி தேர்தலுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில், தீவிரவாதிகள் தற்கொலைப்படை தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.


இதற்கு பொறுப்பேற்றுள்ள தலிபான் அமைப்பு தேர்தலை சீர்குலைக்கும் விதமாக, தேர்தல் அலுவலக அதிகாரிகள், வாக்காளர்கள் மற்றும் பாதுகாப்புப் படையினர் மீது தாக்குதல் நடத்தப்படும் என மிரட்டல் விடுத்துள்ளது.

இந்நிலையில் கடந்த 26 ஆம் திகதி காபூலிலுள்ள தேர்தல் அலுவலகம் மீது தீவிரவாதிகள் நடத்திய தற்கொலைப்படைத் தாக்குதலில் 5 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

இதனைதொடர்ந்து கடந்த 28 ஆம் திகதி காபூல் விருந்தினர் மாளிகையில் தங்கியிருந்த அமெரிக்காவின் கண்ணிவெடித் தடுப்பு அமைப்பினர் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் இருவர் கொல்லப்பட்டனர்.

இதுகுறித்து உள்துறை அமைச்சக செய்தித் தொடர்பாளர் சித்திக் சித்திக்கி கூறுகையில்,

தேர்தல் அலுவலகத்தை சூழ்ந்து கொண்டு 3 அல்லது 4 தீவிரவாதிகள் துப்பாக்கிச்சூட்டில் ஈடுபட்டுள்ளனர் என்பது முதல் கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதாக் கூறியுள்ளார். (2)



பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் ஐ.நாவின் சிறப்பு தூதுவர் கோர்டன் பிறவுன் பிரதமர் நவாஸ்ஷெரீப்பை சந்தித்தபோது...

# தீவிர சிகிச்சைப் பிரிவில் பர்வேஸ் முஷாரப் அனுமதி



பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி பர்வேஸ் முஷாரப் இரத்தக்கொதிப்பு காரணமாக இராணுவ வைத்திய சாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார்.

பர்வேஸ் முஷாரப் மீதான தேசத் துரோக வழக்கில் நேற்று (திங்கட் கிழமை) அவர் கண்டிப்பாக ஆஜராக வேண்டும் என்று உத்தரவிட்ட நீதிமன்றம், ஆஜராக தவறினால் அவரை கைது செய்வதற்கு பிணையில் வெளிவர முடியாத பிடிவிறாந்தையும் பிறப்பித்தது.

இதய நோய்க்கான சிகிச்சை அளிக்கும் இராணுவ சிறப்பு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் முஷாரப்பிடம் கடந்த சனிக் கிழமை இந்த கைது உத்தரவு வழங்கப்பட்டது.

அவர் நேற்று நீதிமன்றிற்கு வருவார் என்ற எதிர்பார்ப்பில் இரா ணுவ வைத்தியசாலையில் இருந்து நீதிமன்றிற்கு செல்லும் வழி நெடுகிலும் சுமார் இரண்டாயிரம் பொலிஸார் கொண்ட பாதுகாப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதற்கிடையில், ஷார்ஜாவில் உள்ள வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் அவரது தாயாரின் உடல்நிலை மோசமடைந்து வருவதாக கேள்விப்பட்ட முஷாரப், தாயாரை சென்று சந்திக்க முடியவில்லையே என்ற மன உளைச்சலில் இருந்ததாக அவருக்கு நெருக்கமான வடடாரங்கள் தெரிவித்திருந்தன.

இந்நிலையில், கைது பிடிவிறாந்தை கண்ட முஷாரப் பெரும் மன சஞ்சலத்துக்கு உள்ளானார். இதனையடுத்து, இரத்தக் கொதி ப்பு அதிகரித்து, அவரது உடல் நிலை மோசமடைந்ததால் நேற்று முன்தினம் நள்ளிரவு தீவிர சிகிச்சை பிரிவில் முஷாரப் அனுமதிக்கப்பட்டதாக அவரது வழக்கறிஞர் தெரிவித்துள்ளார். (2)

# எகிப்தில் பாராளுமன்ற பொதுத் தேர்தல்

(கெய்ரோ)

எகிப்து பாராளுமன்ற பொதுத் தேர்தல் எதிர்வரும் மே மாதம் 26, 27ஆம் திகதிகளில் நடைபெறும்.

இத் தேர்தலின்போது இரு கட்டமாக வாக்குப் பதிவுகள் நடைபெறும்.

வெளிநாடுகளில் வசிக்கும் எகிப்தியர்கள் மே மாதம் 15 இல் இருந்து வாக்களிக்கலாம் என்று தேர்தல் குழு நேற்று முன்தினம் அறிவித்துள்ளது.

இன்று முதல் 20 ஆம் திகதி வரை வேட்பு மனுத்தாக் கல் நடைபெறும்.

எகிப்து மக்களுக்கு அளித்த வாக்குறுதியை காப்பாற்றத் தவறிய ஜனாதிபதி முஹம்மது மோர்சியை எதிர்த்து மக்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தின் விளைவாக கடந்த ஆண்டு ஜூலை மாதம் இராணுவத்தால் அவர் பதவியிறக்கம் செய்யப்பட்டார்.

புதிய ஜனாதிபதியை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் திகதியை அறிவிக்குமாறு தேர்தல் கமிஷனுக்கு உத்தரவிட்ட தற்காலிக (காபந்து) ஜனாதிபதி அப்தெல்ஃபத்தா அல்-சிசி, கடந்த வாரம் தனது பதவியை இராஜினாமா செய்தார்.

பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடுவதற்கு வசதியாக அவர் பதவியை இராஜினாமா செய்தாக வேண்டும் என அரசியல் நோக்கர்கள் கருதி வரும் வேளையில் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்டுள்ளது. (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூறு முட்டாள்கள் என்னை ஓர் அறிஞன் என்று சொல்வதைவிட, ஓர் அறிஞன் என்னை முட்டாள் என்று சொல்வது மேல்.
– யாரோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# ஜெனிவாத் தீர்மானம்; தமிழ் மக்கள் கற்றுக்கொண்ட பாடங்கள்

அனுபவம் என்பதற்குப் பட்டறிவு என்று பொருள் கூறுகிறார்கள். அறிவா? அனுபவமா? பெரியது என்ற கேள்வி எங்களிடம் ஏற்பட்ட சந்தர்ப்பங்கள் இருக்கவே செய்கின்றன.

எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு
என்கிறார் திருவள்ளுவர்.

வள்ளுவரின் தீர்மானத்தின்படி மெய்ப் பொருள் காண்பதே அறிவாகிறது.

அப்படியானால் அனுபவம் என்ற பட்டறிவு இரண்டாம் நிலைக்குத் தள்ளப்படுகிறதா? என்ற வாதம் ஏற்படும்.

சில வேளைகளில் "எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அனுபவம்" என்று திருவள்ளுவர் கூற, பிற்காலத்தில் வந்த இடைச் செருகல் புலவோர் அனுபவத்தை நீக்கிவிட்டு அறிவு என்பதைப் புகுத்தி விட்டனரா? என்று ஊகிக்க நம் சிற்றறிவு தலைப் பட்டாலும், அதிகாரப் பிரிப்பில் நம் நினைப்பு முரண் பட்டுக்கொள்கிறது.

எதுவாயினும் அறிவு, அனுபவம் என்ற இருவழித் திறனாற்றல் இணையும் போது அதன் விளைவு பிரச்சினைக்கு– முரண்பாட்டிற்கு– சிக்கல் நிலைக்குச் சிறந்த தீர்மானம் எடுக்கும் பேராற்றலாக இருக்கும்.

உலகில் இவ்வாறானதொரு நிலையில் இருக்கக் கூடியவர்கள் நம் ஈழத்தமிழர்கள் என்றால் அது மிகையன்று. அறிவிலும் அனுபவத்திலும் நாங்கள் உயர் ஆற்றல் கொண்டவர்கள் என்பதில் மாற்றுக் கருத்திற்கு இடமில்லை.

எனினும், அறிவிலும் அனுபவத்திலும் பேராற்றல் கொண்ட தமிழினம் காலத்திற்கு காலம் தனக்குச் சாதகமான தீர்மானத்தை எடுத்ததா? என்று கேட்டால் அதற்கான விடை இல்லை என்பதாகவே இருக்கும்.

போர்ச்சூழல் தந்த அனுபவம், கூடவே தமிழினத்தின் இயல்பான அறிவுப்பிரவாகம் என இருவழித்திறன் இருந்தும் சிறந்த தீர்மானத்தை எடுக்க முடியாமல் போனது ஏன்? என்று கேட்கும் போதுதான், தமிழர்கள் மாற்றத்தை விரும்புவதில் கடும் கஞ்சத்தனமுடையவர்கள் என்ற உண்மை தெரியவருகிறது.

ஆம், கடந்த 30 வருடகால ஆயுதப் போராட்டம்; போருக்கு பின்பான எங்கள் வாழ்வு; ஜெனிவாத் தீர்மானம் என்பன நமக்குப் புகட்டியுள்ள அனுபவம் என்பது எவருக்கும் கிடையாததே.

இருந்தும் நாம் பெற்றுக்கொண்ட – கற்றுக் கொண்ட அனுபவப்பாடத்தினின்றும் எடுக்கக் கூடிய தீர்மானங்களை எடுக்க முடியாமல் அந்தரிப்பதற்குக் காரணம் மாற்றப்பட வேண்டிய தமிழ் அரசியல்தலைமையைமாற்றாமல்விட்டதுதான்என்பதை இவ்விடத்தில் சொல்லித்தான் ஆகவேண்டும்.

ஆம், ஈழத்தமிழர்களுக்கு நல்ல அரசியல் தலைமைவாய்க்கவில்லை. நல்லஅரசியல்தலைமை வாய்க்காவிட்டாலும் அந்த அரசியல் தலைமையை நல்வழிப்படுத்தி இலக்கை அடைய முடியும்.

ஆனால் எங்கள் அரசியல் தலைமை, சுயநலம் கொண்டது. அது தமிழர் பக்கமா? அல்லது ஆளும் அரசின் பக்கமா? என்று நினைக்கும் அளவில் அவர்களின் செயற்பாடுகள் அமைகின்றன.

போதாக்குறைக்கு நம் அரசியல் தலைமையின் அதிகாரம் என்பது ஒன்று இரண்டு பேரிடம் அகப்பட்டு விட்டது. பாதிக்கப்பட்ட மக்களின் விடுதலைக்கு இது மிகப் பயங்கரமானது.

ஆக; அறிவு, அனுபவம் என்பதில் உயர்வான இடத்தில் இருக்கும் தமிழர்கள் தங்கள் தலைவிதியை தாமே நிர்ணயிக்க வேண்டுமென்று நினைத்தால், தமிழர்களுக்கான புதிய அரசியல் தலைமை பற்றி அதிவேகமாகச் சிந்தித்து செயல்படுத்தவேண்டும்.

இதைச் செய்யாதவரை– தலைமை மாற்றாத வரை பணம் பாதாளத்திற்கும் பாயவே செய்யும்.

### கலை நிகழ்வுப் போட்டிகளில்

# பருத்தித்துறை பி.செயலகத்திற்கு நான்கு வெற்றிகள் கிடைத்தன

(யாழ்ப்பாணம்)

தேசத்தின் மகுடம் கண்காட்சியினை முன்னிட்டு கடந்த பெப்ரவரி மாதம் 23 ஆம் திகதி தொடக்கம் 26 ஆம் திகதிவரை குருநாகல் மாவட்டம் குளியாப்பிட்டிய பிரதேசத்தில் நடத்தப்பட்ட கிருள்ள-2014 சிறந்த கலைநிகழ்வுகளைத் தெரிவு செய்வதற்கான தேசிய மட்டப்போட்டிகளில் பருத்தித்துறை பிரதேச செயலகத்திற்கு 4 வெற்றிகள் கிடைத்துள்ளதாக பருத்தித்துறை பிரதேச செயலாளர் ஆர்.ரி.ஜெயசீலன் அறிவித்துள்ளார்.

இதற்கமைய வெற்றியீட்டியோரின் பெயர் விபரம் வருமாறு,

திீர் கவிதை நிகழ்வில் க.முருகதாஸ் முதலாமிடத்தையும், தாள வாத்தியப் போட்டி (குழு)யில் சி.தவராசா, க.முருகதாஸ், த.நரேந்தன், மா.ஜீவரஞ்சன் ஆகியோர் முதலாமிடத்தையும் கிராமியப் பாடலில் தி.தவராசா முதலாமிடத்தையும் மற்றும் றபான் பாடலில் தி.தவராசா இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்டனர். (2)

### மும்மொழிக் கற்கை நெறிக்கான

# நேர்முக பரீட்சைக்கு தோற்றியோருக்கு

(யாழ்ப்பாணம்)

மும்மொழிக் கற்கை நெறிக்கு நேர்முகப் பரீட்சைக்கு தோற்றியவர்கள்தங்களது இரண்டுபுகைப்படங்களை (பாஸ்போட் அளவு) நாளை புதன் கிழமை தொடக்கம் எதிர்வரும் 5 ஆம் திகதி சனிக்கிழமை வரை காலை 8.30 மணி முதல் பிற்பகல் 4.30 மணி வரை கல்வியங்காடு, டச்சு வீதியில் அமைந்துள்ள மும்மொழி கற்கைநிலையத்திற்கு சமுகம் தந்து கையளிக்குமாறு வடமாகாண ஆளுநர் அலுவலக உதவிச் செயலாளர் J.X.செல்வநாயகம் கேட்டுள்ளார்.

அத்துடன் எதிர்வரும் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மும்மொழி கற்றைநெறி ஆரம்ப நிகழ்வு கல்வியியற் கல்லூரியில் காலை 9 மணிக்கு நடைபெற உள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

மேலதிக விபரங்களை www.npgov.lk என்ற இணையத்தளத்தில் பார்வையிட முடியுமென அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 6 ஆம் திகதி நடைபெறவுள்ள நிகழ்விற்கு நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றிய அனைவரும் கலந்து கொள்ள வேண்டுமென அவர் கேட்டுள்ளார். (2)

# காணி உரித்து நிர்ணய வேலைத்திட்டம் ஆரம்பம்

யாழ்.மாவட்ட நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கிராம அலுவலர் பிரிவுகளில் காணி உரித்து நிர்ணய வேலைத்திட்டமானது (பிம்சவிய) நடைபெற்று வருவதாக மாவட்ட காரியாலய காணி உரித்து நிர்ணய திணைக்களத்தின் உதவி ஆணையாளர் க.பார்த்தீபன் அறிவித்துள்ளார்.

இவ்வேலைத்திட்டத்திற்கு முன்னோடியாக கிராம அலுவலர்களிடம் பிம்சவிய விண்ணப்படிவத்தினைப் பெற்ற பூர்த்தி செய்து குறித்த காணியின் உறுதி அல்லது அளிப்பு அனுமதிப்பத்திரத்தின் புகைப்பட பிரதி உரியவரது தேசிய அடையாள அட்டை, புகைப்படப் பிரதி, வரிமதிப்பீட்டுப் பற்றுச்சீட்டு நில அளவைப்படம் போன்றவற்றை இணைத்துக் கொடுக்க வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் எல்லைகளை நிர்ணயம் செய்யும் பொருட்டு வீடுகளிற்கு வரும் நில அளவையாளர்களுக்கும் காணி உரித்து நிர்ணய விசாரணை உத்தியோகத்தர்களுக்கும் ஒத்துழைப்பு வழங்கவேண்டுமெனவும் அவர் கேட்டுள்ளார். (2)

# விழிப்புணர்வும் ஒத்திகை பயிற்சியும்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை பிரதேச செயலக பிரிவில் உள்ள கற்கோவளம் ஜே/406 கிராம உத்தியோகத்தர் பிரிவில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் வேண்டுகோளிற்கிணங்க முன்னெச்சரிக்கை விழிப்புணர்வு ஒத்திகைப் பயிற்சி செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படும் என யாழ் மாவட்ட செயலக மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் அறிவித்துள்ளார்.

இது குறித்து பொதுமக்கள் அமைதியாக இருக்குமாறும் இது ஒரு ஒத்திகைச் செயற்பாடு என்பதால் எவரும் குழப்பமடையத் தேவையில்லை என்றும் பொதுமக்களுக்கு அவர் அறிவுறுத்தியுள்ளார். (2)

# மாட்டுவண்டில் சவாரி போட்டிக்கு ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

தமிழ்– சிங்கள புத்தாண்டை முன்னிட்டு வட மாகாண பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மாவட்ட சவாரிச் சங்கம் வட்டக்கச்சி கலைவாணி சவாரித்திடலில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 5 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு மாட்டு வண்டில் சவாரிப் போட்டி ஒன்றினை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

இப் போட்டிகளில் வடமாகாணத்தினை நிரந்தர வதிவிடமாகக் கொண்டவர்கள் சங்க விதி முறைகளுக்கு அமைவாக பங்கு கொள்ள முடியும் என்பதுடன் மேலதிக தகவல்களை 0774441287, 0775728721 என்னும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு அறிந்து கொள்ள முடியும் எனவும் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் அறிவித்துள்ளார். (அ)

# எகிப்தில் கலாசார திருவிழா

(கெய்ரோ)

எகிப்தில் தொடர்ந்து அமைதியற்ற சூழ்நிலை நிலவி வரும் நிலையில், இந்தியா மற்றும் எகிப்து நாடுகளுக்கு இடையே இருதரப்பு உறவுகளை மேம்படுத்தும் வகையில் அங்கு பாலிவுட் இசைக்குழுவினருடன் இணைந்து பிரம்மாண்ட கலாசார திருவிழாவை இந்தியா நடத்தவுள்ளது.

"நைல் நதியின் அருகில் இந்தியா" என்ற தலைப்பிலான இந்த கலாசார திருவிழா இன்று முதல் 20 ஆம் திகதி வரை நடைபெறுகிறது. இதில் 35 இற்கும் மேற்பட்ட இந்திய நடனக் கலைஞர்களின் கலை நிகழ்ச்சிகள் இடம்பெறுகின்றன.

இதையொட்டி, எகிப்தின் முக்கிய நகரங்களான அலெக்சாண்ட்ரியா, ஹர்காடா மற்றும் லக்சாரில் பாலிவுட் இசைக்குழுவினர் வருகைதரவுள்ளனர்.

இதுகுறித்து செய்தியாளர்களிடம் எகிப்திற்கான இந்திய தூதர் நவ்தீப் சூரி கூறுகையில்,

"இதுபோன்ற நிகழ்ச்சிகள் நடத்துவதால் இருநாடுகளுக்கு இடையேயான கலாசார புரிதல்கள் பரிமாற்றம் செய்யப்பட்டு நல்லுறவு மேம்படுகிறது" என்றார்.

மத்திய கிழக்கு பகுதியில் மிகப் பெரிய நாடான எகிப்தில் தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக பிரம்மாண்ட விழாவை இந்தியா நடத்துவது குறிப்பிடத்தக்கது. (2)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத் துளிகள்

## உலகை மாற்றும் ஒற்றைச் சொல்



✡ நீங்கள் எல்லை இல்லாத வலிமை பெற்றவர்கள். உங்களின் உண்மை இயல்போடு ஒப்பிடும்போது காலமும் இடமும் கூட ஒரு பொருட்டல்ல.

✡ இல்லை என்று ஒருபோதும் சொல்லாதீர்கள். என்னால் இயலாது என்று எதையும் மறுக்காதீர்கள். எதையும் உங்களால் சாதிக்க முடியும்.

✡ பலவீனத்திற்குப் பரிகாரம் வலிமையைக் குறித்து சிந்திப்பதே.

✡ உபநிடதங்களில் இருந்து கிளம்பி, அறியாமைக் குவியல் மீது குண்டைப் போல வெடிக்கும் சொல் "அஞ்சாமை" என்பது தான். இந்த ஒற்றைச் சொல்லில் தான் வேதத்தின் சாரம் அடங்கியிருக்கிறது. இந்தச்சொல் தான் உலகையே மாற்றி அமைக்கும்.

✡ கடுமையாக உழைக்க முன்வந்தால் குறிக்கோளை எளிதில் அடையலாம்.

✡ மனதில் வலிமை இருந்தால் மகிழ்ச்சியும் வளமும் நிறைந்த நிரந்தர மான வாழ்வு கிடைக்கும். பலவீனம் இருந்தால் இடையறாத துன்பமும், சித்திரவதையுமாக வாழ்வு அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கிளிநொச்சி திருநகர் வி.கழகத்தின் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி




# நாச்சிக்குடா சென்.மேரிஸ் சம்பியன்











**கிளிநொச்சி திருநகர் விளையாட்டுக் கழகத்தின் கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில் நாச்சிக்குடா சென். மேரிஸ் அணி வட்டக்கச்சி இளந்தளிர் அணியை வீழ்த்தி சம்பியன் பட்டத்தை பெற்றுக்கொண்டது.**

கிளிநொச்சி திருநகர் விளையாட்டுக்கழகம் அண்மையில் கிளிநொச்சி மாவட்டத்தில் உதைபந்தாட்ட சங்கத்தில் பதிவு செய்த விளையாட்டுக்கழகங்களுக்கு இடையிலான 9 பேர் கொண்ட அணி கொண்ட உதைபந்தாட்டப்போட்டி அண்மையில திருநகர் விளையாட்டு கழக தலைவர் மயில்வாகனம் மற்றும் வல்லிபுரம் தலைமையில் நடைபெற்றது.

இப் போட்டிக்கு பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளை கலந்து கொண்டார்.

இறுதிப்போட்டிக்கு நாச்சிக்குடா சென்.மேரிஸ் அணியும் வட்டக்கச்சி இளந்தளிர் அணியும் தெரிவாகியது கிளிநொச்சி திருநகர் விளையாட்டு கழகத்தில் நடைபெற்ற இப் போட்டிக்கு நடுவர்களாக குணாதிவாகர் சதீஸ் ஆகியோர் கடமையாற்றினர்.

விறுவிறுப்பாக நடைபெற்ற இப் போட்டியில் நாச்சிக்குடா சென். மேரிஸ் அணி இரண்டு கோல்களை பெற்று வெற்றியீட்டியது. போட்டியில் சிறந்த ஆட்ட நாயகனாக சென்.மேரிஸ் அணியின் ஜினோஜனும் தொடர் நாயகனாக சென்மேரிஸ் அணியின் வீம்சிங்கும் சிறந்த கோல் காப்பாளராக இளந்தளிர் அணியின் விஜிந்தனும் தெரிவுசெய்யப்பட்டனர்.

இப் போட்டி நிகழ்வில் வெற்றியீட்டிய அணிகளுக்கு கேடயங்களையும் பரிசுகளையும் வழங்கி மதிப்பளித்து உரையாற்றிய வடமாகாண சபை உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளை,

திருநகர் விளையாட்டு கழகம் அதிகளவிலான அணிகளை இணைத்து மிகவும் சிறப்பாக போட்டியை நடத்தி முடித்திருப்பது மகிழ்ச்சி தருகின்றது.திருநகர் விளையாட்டுக்கழகம் உதைபந்தாட்டத்தில் கொண்டுள்ள விருப்பமும் அதன் அனுபவ வெளிப்பாடும் இப்போட்டி மூலம் காணமுடிகின்றது. உதைபந்தாட்ட சங்கங்கள் விளையாட்டு கழகங்களையும் விளையாட்டு வீரர்களையும் தட்டிக்கொடுத்து வளர்த்துவிடவேண்டியது மிகவும் கட்டாயம். நானும் முன்னர் கிளிநொச்சி மாவட்ட உதைபந்தாட்ட சங்கத்தின் செயலாளராக இருந்து பங்காற்றியிருக்கின்றேன்.

பொதுநல சிந்தனையுடன் செயற்படக்கூடிய உதைபந்தாட்ட சங்கம் உருவாக்கப்படவேண்டும். அதன் மூலம்தான் நட்புணர்வு கொண்ட வீர,வீராங்கனைகளை எமது இடங்களில் நாம் பெற்றுக் கொள்ள முடியும் என்றார்.

மேற்படிபோட்டி நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட உதைபந்தாட்ட சங்கத் தலைவர் ஜோயல்பியசீலன், கரைச்சி பிரதேசசபை உறுப்பினர் சுவிஸ்கரன்,வைத்தியர் அகிலன், விளையாட்டு உத்தியோகத்தர்களான சிவனேசன் பிரபாகரன் மற்றும் சமூக ஆர்வலர் வேழமாலி கிதன் கிராம அபிவிருத்தி சங்கங்களை சேர்ந்த ஜெயாளன் சிவபாலன் ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர். (க)

## மலேசிய கார் பந்தயம்; ஹாமில்டன் சம்பியன்

மலேசிய கிராண்ட் பிரீ பார்முலா 1 கார் பந்தயத்தில் மெர்சிடிஸ் அணி வீரர் லூயிஸ் ஹாமில்டன் சம்பியன் பட்டம் வென்றார்.

மலேசியாவின் செபாங் பந்தயக் களத்தில் நேற்று முன்தினம் நடந்த விறுவிறுப்பான போட்டியில், ஹாமில்டன் 56 சுற்றுகளை ஒரு மணி, 40 நிமிடம், 25.974 விநாடியில் கடந்து முதலிடம் பிடித்தார். சக மெர்சிடிஸ் வீரர் நிகோ ராஸ்பெக் (+17.3 விநாடி) 2 ஆவதாக வந்தார். ரெட் புல் ரேசிங் ரெனால்ட் அணியின் நடப்பு உலக சம்பியன் செபாஸ்டிய வெட்டல் (+24.5 வி.) 3 ஆவது இடம், பெராரி அணி நட்சத்திர வீரர் பெர்னாண்டோ அலான்சோ (+35.9 வி.) 4 ஆவது இடம் பிடித்தனர். போர்ஸ் இந்தியா மெர்சிடிஸ் அணி வீரர் நிகோ ஹல்கன்பர்க் (+47.1 வி.) 5 ஆவது இடம் பிடித்தார். (கு)



## சோனி ஓபன் டென்னிஸ்; செரீனா சம்பியன்



அமெரிக்காவின் கீபிஸ்கேன் நகரில் நடக்கும் சோனி ஓபன் டென்னிஸ் தொடரின் மகளிர் ஒற்றையர் பிரிவில் நம்பர் 1 வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் சம்பியன் பட்டம் வென்றார். இறுதிப் போட்டியில் சீனாவின் நாலியுடன் நேற்று முன்தினம் மோதிய செரீனா 75, 61 என்ற நேர் செட்களில் வென்று 7 ஆவது முறையாக மயாமி தொடரில் சம்பியன் பட்டத்தை கைப்பற்றி அசத்தினார். முதல் செட்டில் நா லி 52 என முன்னிலை வகித்தபோது, தனது அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தி புள்ளிகளைக் குவித்த செரீனா ஒரு மணி, 59 நிமிட போராட்டத்துக்கு பின்னர் கோப்பையை தட்டிச் சென்றார். டபுள்யூ. டி. ஏ போட்டிகளில் இது அவரது 59 ஆவது பட்டமாகும். ஆண்கள் இரட்டையர் பிரிவில் அமெரிக்காவின் பாப் பிரையன் சகோதரர்கள் சம்பியன் பட்டம் வென்றனர். (கு)

## தென்மராட்சி பிரதேசத்தின் சம்பியன்கள் தெரிவாகின

(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேச தேசிய இளைஞர் சேவை மன்றத்தினால் இம்மாதம் நடத்தப்பட்ட பதிவு செய்யப்பட்ட இளைஞர்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

இதில் கிரிக்கெட் ஆண்கள் அணியில் (வளர்மதி இளைஞர் கழகமும்) பெண்கள் அணியில் (மோகனதாஸ் இளைஞர் கழகமும்), பொலிபோல் பெண்கள் அணியில் (ஐங்கரன் இளைஞர் கழகமும்), வலைப்பந்தில் (திருநாவுக்கரசு இளைஞர் கழகமும்), கபடி ஆண், பெண் அணியில் (டிறிபேக் தாரகை இளைஞர் கழகமும்), உதைபந்தாட்டம் (அன்னை இளைஞர் கழகமும்) தெரிவாகியுள்ளன.

இதில் வயதுப்பிரிவில் நடத்தப்பட்ட போட்டிகளில் கீழ்ப்பிரிவில் –எஸ்.சஜித்தா (திருநாவுக்கரசு இளைஞர் கழகம்), மேல்பிரிவில்– கே.கிருஷாளினி, டி.யசிதா (அறவெளி இளைஞர் கழகம்), டி.மதுரன், டி.சக்தா (மட்டுவில் மகா வித்தியாலயம் இளைஞர் கழகம்),என்.முரளிதரன் (கைதடி விக்கினேஸ்வரா இளைஞர் கழகம்), டி.தமிழ்நேசன் (அம்பாள் இளைஞர் கழகம்) ஆகியோர் இவ்வாண்டுக்கான தென்மராட்சி சம்பியன்களைப் பெற்றுக் கொண்டுள்ளனர். (29)

## கோப்பாய் தேசியக் கல்வியியற் கல்லூரியின் வருடாந்த வி.விழா

கோப்பாய் தேசியக் கல்வியியற் கல்லூரியின் வருடாந்த விளையாட்டு விழா கடந்த சனிக்கிழமை சங்கிலியன் விளையாட்டு மைதானத்தில் வெகு சிறப்பான முறையில் நடைபெற்றது.

கல்லூரியின் பீடாதிபதி சதாசிவம் அமிர்தலிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தற்போதைய வடமாகாண சபை உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் பிரதம விருந்தினராகவும், தொழிலதிபர் ஈ.எஸ். பி.நாகரத்தினம் சிறப்பு விருந்தினராகவும், கோப்பாய் ஐங்கரன் பேக்கரி உரிமையாளர் எஸ்.பொன்குமார் மற்றும் யாழ்ப்பாணம் சிவா பிரதர்ஸ் உரிமையாளர் பாலசிங்கம் சிவசுப்பிரமணியம் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து கொண்டனர்.

இவ் விளையாட்டு நிகழ்வில் 100 மீற்றர் ஓட்டம், 400 மீற்றர் ஓட்டம்,1500 மீற்றர் அஞ்சல் ஓட்டம், குண்டெறிதல், வேகநடை, ஜோடி சேர்த்து ஓடுதல், இசையும் அசைவும், கயிறிழுத்தல் போன்றன இடம்பெற்றிருந்தன.

சிறப்பு நிகழ்ச்சியாகக் கல்லூரியில் கல்வி கற்பிக்கும் விரிவுரையாளர்கள் அனைவரும் பங்குபற்றிய சங்கீதக் கதிரை நிகழ்வும் இடம்பெற்றது.

விளையாட்டு நிகழ்வில் பேராசிரியர் சந்திரசேகரம் இல்லம் (சிவப்பு) 218 புள்ளிகள் பெற்று முதலாமிடத்தையும், பேராசிரியர் துரைராஜா இல்லம் (நீலம்) 207 புள்ளிகள் பெற்று இரண்டாமிடத்தையும், பேராசிரியர் கைலாசபதி இல்லம் (பச்சை) 201 புள்ளிகள் பெற்று மூன்றாமிடத்தையும் தம் வசமாக்கிக் கொண்டன.

பல்வேறு போட்டிகளிலும் வெற்றி பெற்ற ஆசிரிய மாணவர்களுக்கான கேடயங்களையும் சான்றிதழ்களையும் விருந்தினர்கள் வழங்கி வைத்தனர். (க-23)

## கரப்பந்தாட்ட போட்டிக்கு விண்ணப்பிக்கலாம்

(கோண்டாவில்)

ஸ்ரீவாகிஸ்வரி சனசமூக நிலையமும் விளையாட்டு கழகம், கல்வி வளர்ச்சிக்கழகம் என்பன இணைந்து சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு கரப்பந்தாட்ட போட்டியை நடத்தவுள்ளன.

அணிக்கு ஐந்து பேர் கொண்ட ஓவர்கேம் முறையிலான கரப்பந்தாட்ட போட்டிக்கு பதிவு செய்யப்பட்ட கழகங்கள் விண்ணப்பிக்க வேண்டும்.

விண்ணப்பிக்க விரும்பும் விளையாட்டு கழகங்கள் எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு முன்னர் 0770225411 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு விண்ணப்பிக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹேரத் மாயாஜாலம்

# நியூசிலாந்து அணியை அடக்கி அரையிறுதிக்கு நுழைந்தது இலங்கை



ஹேரத்தின் மாயாஜால சுழல் பந்து கைகொடுக்க நியூசிலாந்து அணிக்கு எதிரான லீக் போட்டியில் இலங்கை அணி 59 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று இருபது-20 உலகக் கிண்ணத் தொடரின் அரையிறுதிக்கு முன்னேறியது.

பங்களாதேஷில் ஐந்தாவது இருபது-20 உலகக் கிண்ணத் தொடர் நடக்கிறது. இதில், 3 லீக் போட்டிகளில் தலா 4 புள்ளிகள் பெற்ற இலங்கை-நியூசிலாந்து அணிகள் நேற்று மோதின. நாணயச்சுழற்சியில் வென்ற நியூசிலாந்து அணியின் தலைவர் பிரண்டன் மக்கலம், களத்தடுப்பை தேர்வு செய்தார்.

இதன்படி களமிறங்கிய இலங்கை அணியின் குசல் பெரேரா (16), டில்ஷான் (8), சங்க (25) நிலைக்கவில்லை. திரிமான்னே (20), நாயக்கவும் (17) ஏமாற்ற, இலங்கை அணி 19.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 119 ஓட்டங்களை எடுத்தது.

நியூசிலாந்து சார்பில் போல்ட், நீஷம் தலா 3 விக்கெட்டுக்கள் சாய்த்தனர்.

இலகுவாக இலக்கை எட்டி விடும் என எதிர்பார்த்த நியூசிலாந்து அணிக்கு ரங்கன ஹேரத்தின் மாயஜால சுழல் அதிர்ச்சி கொடுத்தது.

நியூசிலாந்தின் ஆரம்ப வீரர் கப்டில் (5) ரன அவுட்டான பின், ஹேரத் 'சுழலில்' நியூசிலாந்து ஆட்டங்கண்டது.

பிரண்டன் மக்கலம், றோஸ் ரெய்லர், நீஷம் என வரிசையாக 'டக்' அவுட்டாகினர். நேதன் மக்கலம் (2), சேனநாயக்கவிடம் சிக்க, 33 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுகளை இழந்து தள்ளாடியது. பின் வரிசையிலும் யாரும் நீடிக்கவில்லை. நியூசிலாந்து தரப்பில் வில்லியம்சன் (42) மட்டும், இரட்டை இலக்க ஓட்டத்தை எடுத்தார். களத்தடுப்பின் போது காயமடைந்த அண்டர்சன், துடுப்பாட்டம் செய்ய களமிறங்கவில்லை.

நியூசிலாந்து அணி, 15.3 ஓவரில் 60 ஓட்டங்கள் மட்டும் எடுத்து, 59 ஓட்டங்களால் வித்தியாசத்தில் வீழ்ந்தது. சுழல்ஜாலம் காட்டிய ஹேரத் 3 ஓட்டங்களைக் கொடுத்து 5 விகெட்டுக்களை வீழ்த்தி ஆட்ட நாயகன் விருதை தட்டிச் சென்றார்.

இந்த வெற்றியை அடுத்து, 'பிரிவு 1' ல் முதலிடம் பெற்ற இலங்கை அணி (6 புள்ளி), அரையிறுதிக்கு முன்னேறியது.

**குறைந்த ஸ்கோர்**

நியூசிலாந்து அணி நேற்று சர்வதேச இருபது-20 அரங்கில், மூன்றாவது குறைந்த பட்ச ஓட்ட எண்ணிக்கையை (60 ஓட்டங்கள்) பதிவு செய்தது. முதல் இரு இடங்களில் நெதர்லாந்து (39 ஓட்டங்கள், 2014, எதிர் இலங்கை), கென்யா (56 ஓட்டங்கள், 2013, எதிர் ஆப்கான்) அணிகள் உள்ளன.

**இந்தியா - தென்னாபிரிக்கா மோதல்**

நேற்று இலங்கை அணி வெற்றி பெற்றதை அடுத்து, 'பிரிவு 1' ல் இலங்கை, தென்னாபிரிக்க அணிகள் தலா 6 புள்ளிகள் பெற்றன. இருப்பினும், 'ஓட்ட சராசரி அடிப்படையில் இலங்கை அணி (2.233) முதலிடம் பெற்றது. இரண்டாவது இடம்பெற்ற தென்னாபிரிக்க அணி (0.075), ஏப்., 4ல் நடக்கும் இரண்டாவது அரையிறுதியில் இந்திய அணியைச் சந்திக்கிறது.

**சம நிலையில்...**

சர்வதேச இருபது-20 தரவரிசையில், இந்திய அணி 130 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளது. நேற்று நியூசிலாந்தை வீழ்த்தி 2 புள்ளிகள் கூடுதலாக இலங்கை அணி (130) பெற்ற போதும், தசம புள்ளிகள் வித்தியாசத்தில், இரண்டாவது இடத்தில் நீடிக்கிறது.

**இரண்டாவது 'பெஸ்ட்'**

நேற்று 3 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்கள் வீழ்த்திய இலங்கை அணியின் ஹேரத், இருபது-20' அரங்கில் தனது சிறந்த பந்து வீச்சை பதிவு செய்தார்.

சர்வதேச அளவில், விக்கெட் அடிப்படையில் இது இரண்டாவது சிறந்த பந்துவீச்சாக அமைந்தது. இலங்கை அணியின் அஜந்த மெண்டிஸ், சிம்பாப்வே (2012, 8 ரன், 6 விக்.,), அவுஸ்திரேலிய (2011, 16 ரன், 6 விக்.,) அணிக்கு எதிராக 'பெஸ்ட்' பவுலிங்கை வெளிப்படுத்தி முதலிடத்தில உள்ளார். (க)

# நெதர்லாந்து வெற்றி



இங்கிலாந்துக்கு எதிரான உலக இருபது-20 போட்டியில் நெதர்லாந்து அணி 45 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றுள்ளது.

உலகக் கிண்ண இருபது - 20 தொடரின் நேற்றைய போட்டியில் இங்கிலாந்து - நெதர்லாந்து அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற இங்கிலாந்து முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது. இதனடிப்படையில முதலில் துடுப்பெடுத்தாடிய நெதர்லாந்து அணி 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 133 ஓட்டங்களை எடுத்தது.

துடுப்பாட்டத்தில் அவ்வணி சார்பில் அதிகபட்சமாக பாரசி 48 ஓட்டங்களை எடுத்தார்.

பிரோட் 3 விக்கெட்டுகளை கைப்பற்றினார். 134 என்ற வெற்றி இலக்குடன் களமிறங்கிய இங்கிலாந்து 88 ஓட்டங்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து தோல்வியுற்றது.

நெதர்லாந்து அணியின் பந்துவீச்சில் வான் பெக், புஹாரி தலா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

நெதர்லாந்து அணி 45 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

போட்டியின் ஆட்டநாயகனாக நெதர்லாந்து அணியின் புஹாரி தெரிவானார். (க)

A+,B+ குருதிவகை உடன் தேவை

(யாழ்ப்பாணம்)

யாழ் போதனா வைத்தியசாலை இரத்த வங்கிக்கு A+,B+ வகையான இரத்தம் உடனடியாக தேவைப்படுகின்றது.

குருதிக் கொடையாளர்கள் குறித்த இரத்த வகையினை தந்து உதவுமாறு யாழ் போதனா வைத்தியசாலை இரத்த வங்கியால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (செ)

## காதல்...

ஏமாற்றி விட்டதாக பதிவு ஒன்றையும் வரைந்துள்ளார்.

நண்பர்களே! (ஹாய் பிரன்ஸ்) என விழித்து தொடங்கும் இவரது பதிவின் முடிவில் இவளை என்ன செய்யலாம் நண்பர்களே??? இவள் போன்ற பெண்களை இப்படியே விடலாமா? என நியாயம் கேட்கும் ஆதங்க வரிகள் காணப்படுகின்றன.

கடந்த 2012 ஆம் ஆண்டில் முகப்புத்தகத்துடன் அறிமுகமாகி தினமும் கதைத்து நல்ல நண்பர்களாகி பின்னர் நாங்கள் இருவரும் காதலர்கள் ஆனோம். பின் ஏமாற்றபட் டேன் என பிரஸ்தாப இளைஞர் தனது பதிவின் இடையில் குறிப்பிட்டுள்ளார்.

காதல் என்ற போர்வையில் ஒரு பெண் தன்னை ஏமாற்றிவிட்டாள் என வரிக்கு வரி குற்றச்சாட்டுக்களை அடுக்கி அதை முகப்புத்தகத்தில் பதிவேற்றி ஊடகங்களுக்கு மின்னஞ்சல் அனுப்பி நியாயம் கேட்க வேண்டும் என துடித்திருந்த நிருபன். தன்னை ஈன்ற தாயும், தந்தையும், உறவுகளையும், நண்பர்களையும் நினைத்துப் பார்த்திருக்கலாம்.

அப்போதாவது அவன் முடிவு மாறியிருக்கும். தவறி நியாயம் வேண்டும் என தெரிவி[illegible] விட்டு தற்கொலையை முடிவாக்கிய[illegible] வகையிலும் பிரச்சினைகளுக்கு [illegible] தரப்போவதில்லை.

## விநாயகர்...

கள் என்பவற்றை உள்ளே போட்டு விட்டு, அதனுள் இறைவனுக்கு வைக்கப்பட்ட பூக்கள், பட்டுக்கள் என்பவற்றையும் வெளியே வீசியுள்ளனர்.

இவ்வாலய விநாயகர் விக்கிரகம் வீசப்பட்ட செய்தியை. கேள்வியுற்ற மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான சீ.யோகேஸ்வரன் உடனடியாக சம்பவ இடத்திற்குச் சென்றார்.

அங்கு ஆலயத்தையும், வீசப்பட்ட விநாயகர் விக்கிரகத்தையும் பார்வையிட்டதுடன், உடனடியாக வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் முறையிடுமாறு வாகனேரி இந்து மக்களைக் கேட்டுக் கொண்டார்.

இவ்விக்கிரகத்தை தூக்கி எறிந்தவர்கள் ஒரு போதும் இந்து சமயத்தை சார்ந்தவர்கள் அல்ல என்பதை பாராளுமன்ற உறுப்பினரிடம் பொதுமக்கள் உறுதிப்பட உரைத்துள்ளனர்.

இவ்விடயமாக கூடிய கவனம் செலுத்தப்படும் எனவும், இவ்வாலயத்தை இங்கு திறம் அமைக்கவும், மீண்டும் விக்கிரகத்தை [illegible] வைத்து பூசைகளை நடத்தவும் ஒழுங்கு செய்யப்படும் எனவும் அவர் உறுதிய[illegible] (செ-11)

## சர்வதேச...

தொடர்பாக அரசாங்கம் முடிவெடுக்குமென்றும் அவர் கூறினார்.

ஜெனிவாவில் அமெரிகாவின் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாடு தொடர்பாக கருத்து தெரிவிக்கையிலேயே ஜனாதிபதியின் பேச்சாளர் மொஹான் சமரநாயகக இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

ஜெனிவாவில்ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவில் இலங்கைக்கு எதிராக கொண்டு வரபட்ட பிரேரணையானது அரசியல் நோக்கம் கொண்டதாகும்.

அது மட்டுமல்லாது தமிழ், சிங்கள, முஸ்லிம், கிறிஸ்தவ மக்களிடையே தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் அரசாங்கத்தின் முயற்சிகளுக்கும் இப்பிரேரணையானது முட்டுக்கட்டை போடுவதாகவே உள்ளது.

முப்பது வருட கால யுத்தத்தின் பின்னர் அரசாங்கம் பல பிரிவுகளாக மீள் கட்டமைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

முதலாவதாக, இடம்பெயர்ந்த மக்களுக்கு வாழ்விடங்களை அமைத்துக் கொடுத்து அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதில் அரசாங்கம் கவனம் செலுத்தியது.

தற்போது அனைத்து இனங்களுக்கும் இடையே தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

அவ்வாறானதோர் சூழ்நிலையில் ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக பிரேரணையை நிறைவேற்றியதானது தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் அரசின் முன்னெடுப்புக்களுக்கு முட்டுக்கட்டையாக அமைந்துள்ளது.

அதேவேளை, இலங்கையின்தமிழ்மக்களின் நலன்களில்இந்தியா அதிக அக்கறை கொண்டுள்ளது.

எனவேதான் இலங்கை அரசாங்கம் இனங்களிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முயற்சிகளை மேற்கொண்டு வருவதால் அதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென்றும் இலங்கை அரசாங்கம் தமது நடவடிக்கைகளை முன்னெடுக்க சந்தர்ப்பங்களை வழங்க வேண்டுமெனக் கூறி ஜெனிவாவில் வாக்களிப்பதிலிருந்து விலகிக் கொண்டது.

உண்மையிலேயே இது தமிழ் மக்களின் நலன்களைக் கருத்தில் கொண்ட தீர்மானமாகும்.

ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவின் ஆணையாளர் நாயகம் நவநீதம்பிள்ளை பக்கச்சார்பு கொண்டவர்.

எனவே அவர் தலைமையிலான சர்வதேச விசாரணை என்ற பேச்சுக்கே இடமில்லை.

அத்தோடு இறையாண்மை கொண்ட நாடென்ற ரீதியில் சர்வதேச விசாரணையை நிராகரிக்கின்றோம். இதுவே அரசாங்கத்தின் நிலைப்பாடாகும்.

நடந்து முடிந்த மாகாண சபைத் தேர்தல் முடிவுகளோடு 2012, 2013 ஆம் ஆண்டு தேர்தல்கள் முடிவுகளை ஒப்பீடு செய்து பார்ப்பதோடு, வெளிநாட்டு அழுத்தங்கள் பொருளாதார விடயங்கள் தொடர்பாக ஆராய்ந்து அடுத்த ஜெனிவா கூட்டத் தொடருக்கு முகம் கொடுப்பது தொடர்பில் தீர்மானம் எடுக்கப்படுமென்றும் மொஹான் சமரநாயக்க தெரிவித்தார். (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடத்தல், ஆள்நுழைவை தடுக்...

சென்ற இராணுவத்தினர் நாளை அதாவது நேற்று 31 ஆம் திகதி முதல் மீனவர்கள் கடலுக்குள் செல்வதற்கு பாஸ் நடைமுறை அமுலுக்கு வருவதாக அறிவித்துள்ளனர் என ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்நிலையில் நேற்றையதினம் யாழ்.பலாலி படைத்தலைமையகத்தின் ஊடகப்பிரிவினர் மேற்படிச் செய்திகுறித்து விளக்கமளித்துள்ளனர்.

அதில் யாழ்.வடமராட்சி கடற்பரப்பின் ஊடாக யாழ்ப்பாணத்திற்கு பெருமளவான போதைப்பொருட்கள் கடல்மார்க்கமாக கடத்தப்பட்டு வருகின்றது. இதனைக்கட்டுப்படுத்தவே மீனவர்களிடம் பதிவு நடவடிக்கையினை இராணுவத்தினர் மேற்கொண்டுள்ளனர்.

மீனவர்களின் பெயர், படகுகளில் செல்லும் மீனவர்களின் எண்ணிக்கை, தேசிய அடையாள அட்டை இலக்கம் என்பனவே பதியப்படுகின்றன. ஆனால் மீனவர்களுக்கான பாஸ்நடைமுறையை இராணுவத்தினர் மீள ஆரம்பிக்கவில்லை.

வடமராட்சி கடற்பரப்பின் ஊடாகவே யாழ்ப்பாணத்திற்குள் கஞ்சா, குடு, அபின்போன்ற போதைப்பொருட்கள் கடத்தப்பட்டுவருகின்றன. அத்தோடு பல்வேறு பொருட்களும் கடத்தப்பட்டுவருகின்றன. இதில் ஆட்களும் உள்ளடக்கப்பட்டுள்ளனர். அதாவது கள்ளக்கடத்தல் காரர்களும் வருவதைத்தடுக்கவுமே மேற்படி பதிவினை இராணுவத்தினர் நேற்று முதல் ஆரம்பித்துள்ளனர்.

ஒரு படகில் செல்லும் மீனவர்களின் எண்ணிக்கைக்கு அதிகமானவர்கள் திரும்பிவரும் போது அது குறித்து இராணுவத்தினர் விசாரணைகளை மேற்கொள்வார்களே தவிர பாஸ் நடைமுறைகள் எதுவும் நடைமுறைப்படுத்தவில்லை என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கடலில் மீன்பிடிகக் செல்லும் மீனவர்கள் நேற்று முதல் தமது விபரங்களை பதிவு செய்து அனுமதி (பாஸ்) பெற்ற பின்னரே தொழிலுக்குச் செல்ல முடியுமென்று தாம் அறிவிக்கவிலலையென்று 52ஆவது படைப் பிரிவின் அதிகாரி மேஜர் ஜெனரல் ஜெயசுந்தர தெரிவித்ததாக வடமராட்சி மீனவர் சங்கங்களின் சமாசத்தலைவர் வ.அருள்தாஸ் தெரிவித்திருந்தார்.

கடலில் மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்கள் நேற்று முதல் தமது விபரங்களை பதிவு செய்து பாஸ் பெற்ற பின்னரே தொழிலுக்கு செல்ல வேண்டும் என இராணுவம் அறிவித்துள்ளதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்நிலையில், இது தொடர்பான கலந்துரையாடல் நேற்று வடமராட்சியிலுள்ள 521 ஆவது படைப்பிரிவின் தலைமையகத்தில் நடைபெற்றது. இதன்போதே குறித்த படைப்பிரிவின் அதிகாரி மேற்கண்டவாறு தெரிவித்ததாக சமாசத்தலைவர் கூறினார்.

வெளிநாட்டிலிருந்து இலங்கைக்கு கடல் வழியாக கொண்டுவரப்படுகின்ற போதைவஸ்துகள், தங்கம் போன்றவற்றை கட்டுப்படுத்துவதற்காக தற்காலிகமாக கடற்கரையில் படை முகாம்கள் அமைக்கப்படவுள்ளன.

சந்தேகத்திற்கிடமாக நடமாடுபவர்களிடம் நாம் சோதனை நடவடிக்கையில் ஈடுபடுவோமே தவிர, மீனவர்கள் மீன் பிடிக்கச் செல்வதற்கு பாஸ் பெற வேண்டும் எனக் கூறவில்லையென்று இக்கலந்துரையாடலில் குறித்த இராணுவ அதிகாரி விளக்கமளித்ததாக சமாசத்தலைவர் வ.அருள்தாஸ் மேலும் தெரிவித்தார். (செ-6)

## இராணுவத்தில்...

பொறுப்பதிகாரி நிர்ப்பந்தித்து வந்துள்ளார்.

எனினும் இதற்கு குறித்த யுவதி மறுப்பு தெரிவித்து வந்ததுள்ளார். இதேவேளை கைதாகியுள்ள சகோதரனும் படை அதிகாரியுடன் முரண்பட்டுள்ளார். இந்நிலையில்நேற்று அவரும் அவரது உறவினரான மற்றொரு இளைஞனும் கைதாகியுள்ளனர். இவர்கள் கைது செய்யப்பட்டமை தொடர்பாக எந்தவொரு ஆவணத்தினையும் சமர்ப்பித்திராத படையினர் அவர்களை தடுத்து வைத்துள்ள இடம்பற்றிய தகவல்களையும் வழங்க மறுத்துள்ளனர்.

இந்தச்சம்பவம் குறித்து வடக்கு மாகாண சபையின் முல்லைத்தீவு மாவட்டத்தை சேர்ந்த ஆளும் கட்சி உறுப்பினர்களான து.ரவிகரன், வைத்தியகலாநிதி சி.சிவமோகன் ஆகியோரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது, ஒரு குடும்பஸ்தரும் மற்றுமொரு இளைஞரும் இராணுவப்புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்பதை கேளவிப்பட்டுள்ளோம் ஆனால் அவர்கள் கைது செய்யப்பட்டதற்கான காரணம் தெரியவில்லை. அதனை அறியும் முயற்சியில் ஈடுபட்டுள்ளோம் ஆனால சம்பந்தப்பட்ட தரப்பு உரிய தகவலைக் கொடுக்க தயாராகயில்லை.

வடக்கில் இராணுவத்தினரால் அண்மைக்காலமாக மேற்கொள்ளப்பட்டுவரும் சுற்றிவளைப்புக்களும் கைதுகளும் தமிழ்மக்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளநிலையில் மேற்படி நபர்கள் இருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளமை மக்கள்மத்தியில் பதற்றமான சூழலை ஏற்படுத்தியுள்ளது எனக் கூறியதோடு இவ்வாறான கைது நடவடிக்கைள்கவலையை ஏற்படுத்தியுள்ளதாகவும் ஆதங்கப்பட்டனர்.

இதேவேளை இராணுவத்தில் தமிழ் இளம் யுவதிகளை இணைப்பது தொடர்பாக மாகாணசபை உறுப்பினர் சி.சிவமோகன் நேற்றையதினம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில்,

இராணுவ சேவைக்கு புதிதாக இணைக்கப்பட்டுள்ள பெண்கள் பயிற்சியின் போது ஆண் படைச்சிப்பாய்களினால் சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்படும் காணொளியை ஊடகங்கள் வெளியிட்டுள்ளமை நீங்கள் யாவரும் அறிந்ததே.

தற்சமயம் இந்த காணொளி உண்மையெனவும், சிங்கள மொழி பேசும் பெண்களுக்கு நடைபெற்ற கொடுமைகள் எனவும் அரச உயர் பீடம் ஏற்றுக்கொண்டுள்ளது.

வெளுத்ததெல்லாம் பால் என்று நம்பி இராணுவ சேவையில் இணைந்து கொண்ட எமது தமிழ் யுவதிகளுக்கு குறித்த காணொளி நல்லதோர் படிப்பினையாகும். நாளை இத்தகைய சித்திரவதைகளுக்கு உள்படாமல் தம்மை தற்காததுக்கொள்ள இன்னும் பல பெண்களுக்கு மிகச்சிறந்த வாய்ப்பையும் வழங்கியுள்ளதோடு, எமது தமிழ் பெண்களுக்கு பயிற்சியின் போது இவ்வாறு கொடுமைகள் இழைக்கபபடாது என்பதற்கு என்ன உத்தரவாதம் உள்ளது என்ற கேள்வியையும் எழுப்பியுள்ளது.

நின்று நிதானித்து முடிவு செய்து கொள்வதற்கு குறித்த காணொளி ஏதோ ஒருவகையில் நன்மை பயத்துள்ளது. குறித்த காணொளியை பார்த்ததும் இராணுவ சேவையில் இணைய வேண்டும் என்று முடிவு கொண்டிருந்த எம் உறவுகள் தம் முடிவை மாற்றி வேறு தொழில்களில் ஈடுபடும் எண்ணத்தை வழங்கியிருக்கிறது.

பாண்ட் வாத்திய இசைக்குழுவுக்கும், இராணுவ முகாமைத்துவ உதவியாளர்களுக்கும், காரியதரிசிகளுக்கும், சிவில் பாதுகாப்பு படைகளுக்குமே பெண்களை சேர்க்கிறோம்என்று உண்மை நிலையை மூடி மறைத்து பிரசாரத்தை முன்னெடுத்திருந்த இலங்கை அரசின் போலி முகத்திரையை கிழித்தெறிந்து நிஜமுகத்தை குறித்த காணொளி காட்டியுள்ளது என அவர்அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார். (செ-6)

## அரசுடன் கூட்டமை...

கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையில் இரகசிய பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதாக தகவல்கள் வெளியாகியிருந்தன.

குறிப்பாக அமெரிக்கா ஆதரவு தீர்மானம் நிறைவேற்றப்படுவதற்கு முன்னதாக இந்த சந்திப்பு நடைபெற்றதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

எனினும், இந்த தகவல்களில் எவ்வித உண்மையும் கிடையாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் ஜெனிவாவிற்கான இலங்கை நிரந்தரப் பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங் கவுடன் சந்திப்பு நடத்தியதாகத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஆதரவு தீர்மானத்தை ஏற்றுக்கொள்ளுமாறு தாம் ரவிநாத்ஆரியசிங்கவுடன் நாங்கள் சிறு சந்திப்பொன்றை நடத்தினோம். இந்த சந்திப்பின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரனும் தம்முடன் இணைந்து கொண்டிருந்தார் என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இவ்வாறான ஓர் சந்திப்பு நடைபெற்றதாக ரவிநாத். ஆரியசிங்க ஒப்புக்கொண்டுள்ளார். பாராளுமன்ற உறுப்பினர்கள் சிறிதரன் மற்றும் சுமந்திரன் ஆகியோர் தம்மை சந்தித்தாகவும், சாதாரண் பொது விடயங்கள் பற்றி பேசியதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (செ-11)


COMPUTER HARDWARE REPAIRING COURSE
(கணனி திருத்தும் பாடநெறி)

நீங்கள் பாடசாலைக் கல்வியை இடைநிறுத்தியவரா? சுயதொழில் ஒன்றை எதிர்பார்ப்பவரா? வேலைசெய்துகொண்டு பகுதிநேரமாக வருமானம் ஈட்டவேண்டுமா?

4 days course

புதுப்பொலிவுடன் யாழ்நகரில உங்கள் எதிர்காலத்துக்கு மாதம் 150,000/-க்கு மேல் வருமானம் ஈட்ட ஒருவாய்ப்பு.

திருத்தும் துறையில் 10 வருட அனுபவம் வாய்ந்த ஆசிரியரும் இலங்கையில் 1000ற்கும் மேற்பட்ட மாணவர்களை உருவாக்கிய முதற்தர ஆசிரியருமான Raja (Sir) பாடநெறிக்கான கட்டணத்தை முதல் மாதத்திலேயே சம்பாதிக்கமுடியும் நவீன Computer Hardware Repairing முறைகள் பயிற்றுவிக்கப்படும.

BTEC
BRITISH TECHNOLOGY ENGLISH COLLEGE
#21, Sirampiyadi lane, Jaffna.
TP: 021 790 4468
MO: 0777 444 225
(C-6935)








ALLIANCE FRANÇAISE DE JAFFNA
ONLY OFFICIAL FRENCH CENTRE
FRENCH மொழியை FRENCH முறையில் கற்றுக்கொள்ளுங்கள்.
Alliance Française de Jaffna

திருமணம் மூலம் France, Canada, Switzerland, Belgium... செல்வோர் மற்றும் French கற்கவிரும்புவோர். யாழில் AF 1976 முதல் இயங்கிவருகிறது.

- உலகில் FRENCH கற்பிப்பதற்கு FRENCH அரசாங்கம் அங்கிகரிக்கும் சர்வதேச நிறுவனம் AF. இலங்கையில் கொழும்பு, கண்டி, காலி, மாத்தறை ஆகிய இடங்களில் கிளைநிறுவனங்களைக் கொண்டு உலகப் புகழ் பெற்ற நிறுவனமாக FRENCH EMBASSY இன் கீழ் இயங்குகின்றது.
- வருடம்தோரும் நூற்றுக்கணக்கானோர் (வடமராச்சி, வன்னி, மன்னாரைச் சேர்ந்தவர்களும்) இங்கு படிக்கிறார்கள்.
- அதியுயர் தகைமைகளையுடைய பல ஆசிரியர்களை கொண்ட ஒரே நிறுவனம் எமதே. (பிரான்ஸ் நாட்டவரும் கலாநிதியுமான GERARD உட்பட)
- Certificates & International Diplomas

புதிய வகுப்புகள் மிக விரைவில்...

61, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம் 021 222 8093.
(இவ்வீதியில் கச்சேரியை அடுத்துள்ள சந்தியில் உள்ள வெள்ளை மாடிக்கட்டடம்)
(6036)



புதுவருடத்தை முன்னிட்டு எமது Innovage நிறுவனம் புதிய 3 கிளைகளை ஆரம்பிக்க உள்ளது. (யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய பிரதேசங்களில் உள்ள 10, O/L. A/L கற்ற அனைவருக்கும் தகைமைகளின் அடிப்படையில் வேலை வழங்கப்படும். முதலில் 4-6 மாத கால இலவச பயிற்சி வழங்கப்படும்.

- தங்குமிட வசதி உண்டு
- பயிற்சிக் காலத்தில் 10,000/- 15,000 மேல்
- பயிற்சியின் பின் 30,000 மேல்
- EPF. ETF உண்டு
- வயது 18-40 க்கு உட்பட்டோர்
- முன்னனுபவம் அ[illegible]சியமற்றது



தொடர்புகளுக்கு:-07[illegible]777, 0770056677
www.[illegible]et


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை [illegible] யிலுள்ள அவர்களது [illegible] 4 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.